www.padippakam.com

# புரட்சிக்கனல்

இதழ் 4 கன்னி 2024 அக்டோபர் 1993


புதுக்காலனியம் : அதன் வரலாற்று-பொருளாதார அடிப்படைகள் 3

தேசிய விடுதலைப் புரட்சியும் சாதி ஒழிப்பும் 30

தேசியக் கொள்கை குறித்து சில கேள்விகளும் பதில்களும் 38

தமிழ் தேசத் தன்னுரிமை புரட்சியா? புரட்டலா? 27

அம்பேத்கார்-பெரியாரின் வரலாற்றுப் பாத்திரமும் கம்யூனிஸ்டுகளும் 34

கொடுஞ்சிறையில் தமிழறிஞர், கொதித்தெழுங்கள் தமிழர்களே! 50


P, RAYA
87 RUE DE COLOMBES
92600 ASNIERES SUR -
- SEINE ; FRANCE

தமிழ்நாடு மார்க்சிய-லெனினியக் கட்சி இதழ்

படிப்பகம்

www.padippakam.com

# சிறைப்பட்ட எங்கள் தமிழை மீட்கப் புறப்பட்டதுகாண் 'புரட்சிகர இளைஞர் முன்னணி'

~~மேனா மினுக்கி உன்னை விரட்டிச்~~
தடாநாயகி செயலலிதாவே! உடனே
தமிழறிஞர் பெருஞ்சித்திரனாரை விடுதலை செய்!
அடாது செய்தால் படாது படுவாய்!
அழிவுக் காலம் நெருங்கி விட்டது!
சிறைப்பட்ட எங்கள் தமிழை மீட்கச்
சீறும் புலியாய்ச் சிலிர்த்து அடலேறாய்ப்
புறப்பட்டதுகாண் 'புரட்சிகர இளைஞர் முன்னணி'
பொங்கு கடலாய்ப் புயலாய் இன்று!

ஏன்எதற் காக இணையில்லாத
எங்கள் அறிஞரைச் சிறையில் அடைத்தாய்?
வாள் எடுத்தெழுந்தோம் கொள்கைப் புலிகளாய் உன்
கொடுமைகளுக்கோர் முடிவு கட்டிச்
சிறைப்பட்ட எங்கள் தமிழை மீட்கச்
சீறும் புலியாய்ச் சிலிர்த்து அடலேறாய்ப்
புறப்பட்டதுகாண் 'புரட்சிகர இளைஞர் முன்னணி'
பொங்கு கடலாய்ப் புயலாய் இன்று!

என்ன குற்றம் செய்தார் கூறு
எங்கள் பாவலரேறு அய்யா?
உனதாட்சிக் கெதிராய் ஒரு படை திரட்டி
போர்க்களம் காணா குற்றம் தவிர.
சிறைப்பட்ட எங்கள் தமிழை மீட்கச்
சீறும் புலியாய்ச் சிலிர்த்து அடலேறாய்ப்
புறப்பட்டதுகாண் 'புரட்சிகர இளைஞர் முன்னணி'
பொங்கு கடலாய்ப் புயலாய் இன்று!

கொள்ளையடிப்பவன் கொலைபல செய்தவன்
கள்ளக் கடத்தல்காரனை விட்டுத்
தெள்ளு தமிழைச்சிறையில் அடைத்தவுன்
திமிரையடக்கிடத் திரண்டெழுந்து
**சிறைப்பட்ட எங்கள் தமிழை மீட்க**
**சீறும் புலியாய்ச் சிலிர்த்து அடலேறாய்ப்**
புறப்பட்டதுகாண் 'புரட்சிகர இளைஞர் முன்னணி'
பொங்குகடலாய்ப் புயலாய் இன்று!

யாரையார் சிறையில் அடைப்பது? இதனை
ஏனென்று கேட்க எழுந்தோம் யாம்! தமிழ்ச்
சீரை உணராச் செயலலிதா! உன்
செருக்கை யடக்கிடத் திரண் டெழுந்தோம்!
சிறைப்பட்ட எங்கள் தமிழை மீட்கச்
சீறும் புலியாய்ச் சிலிர்த்து அடலேறாய்ப்
புறப்பட்டதுகாண் 'புரட்சிகர இளைஞர் முன்னணி'
பொங்குகடலாய்ப் புயலாய் இன்று!

ஆட்சி நமதெனும் ஆண வத்தில்
ஆடுகின்றாய் பேயாட்டம் இன்று;
மாட்சியில் லாதவுன் மமதைக்குச் சாவு
மணிய டிக்கவந்தோம் என்று
சிறைப்பட்ட எங்கள் தமிழைமீட்கச்
சீறும் புலியாய் அடலேறாய்ப்
புறப்பட்டதுகாண் 'புரட்சிகர இளைஞர் முன்னணி'
பொங்குகடலாய்ப் புயலாய் இன்று!

அதிகா ரம்நம் கையில் என்றுநீ
ஆடாத ஆட்டம் ஆடுகின் றாயா?
எத்தனை நாள்நீ ஆட்டம் காட்டுவாய்?
தமிழ்இளை ஞர்கள் கொதித்தெழுந்தார்கள்
சிறைப்பட்ட எங்கள் தமிழைமீட்கச்
சீறும் புலியாய்ச் சிலிர்த்து அடலேறாய்ப்
புறப்பட்டதுகாண் 'புரட்சிகர இளைஞர் முன்னணி'
பொங்கு கடலாய்ப் புயலாய் இன்று

பொய் வழக்குப் போடாதே என்று
பொங்கி யெழுந்தார் மக்கள் இன்று!
மெய்யுணர்வு சிலிர்த்தெ ழுந்து

(தொடர்ச்சி-பின் அட்டையின் உள்பக்கம்)

படிப்பகம்

www.padippakam.com

# புதுக்காலனியம்:
# அதன் வரலாற்று - பொருளாதார அடிப்படைகள்

## ஏகாதிபத்தியமும் ஒடுக்கப்பட்ட நாடுகளின் விடுதலைப் போராட்டமும்

மேற்கு நாடுகளில் — குறிப்பாக இங்கிலாந்தில்—முழு அளவிலான தொழில் முதலாளியத்தின் வளர்ச்சிக்கான அடிப்படையை உருவாக்கிய ஆரம்பகால மூலதனத் திரட்டல் (Primitive accumulation) பற்றிய தனது ஆய்வில் மார்க்ஸ் கூறுகிறார்:

''அமெரிக்காவில் தங்கத்தையும் வெள்ளியையும் கண்டு பிடித்தது; தொல் குடிமக்களை அடிமைப்படுத்தி அவர்களுக்குச் சுரங்கங்களிலேயே சமாதி கட்டியது; கிழக்கு இந்தியாவை வெற்றி கொண்டு அதைக கொள்ளையடித்தது; கறுப்பு மனிதர்களை வேட்டையாடிப் பிடிக்கும் வேட்டைக்காடாக ஆப்பிரிக்காவை மாற்றியது ஆகியன முதலாளிய உற்பத்திச் சகாப்தத்தின் உதயத்தை அறிவித்தன'' (Capital Vol 1 Progress Publishers, Moscow, 1978, P.703.)

ஐரோப்பாவில் முதலாளியத் தொழில் மயமாக்கல் என்பது துவக்கம் முதலே அங்கிருந்த நிலக்கிழமை உற்பத்தி முறை, நிலக்கிழமை சமூக - அரசியல் அமைப்புகள் ஆகியவற்றுக்குக் குழிபறித்து ஒழித்துக் கட்டியது; அத்துடன் உற்பத்தி ஆற்றல்களின் வளர்ச்சியைப் பொறுத்தவரை ஒப்பீட்டு நோக்கில் பின்தங்கியிருந்த உலகின் பிற்பகுதிகள் பெரும்பாலானவற்றையும சக்கையாகப் பிழிந்தெடுத்தது. இது சமுதாயத்தில் புதிய முரண்பாடுகளின் தொகுப்பை உருவாக்கிற்று. ஒரு சில நாடுகளில் ஏற்பட்ட முதலாளிய வளர்ச்சி அங்குள்ள தொழிலாளிகளைக் கூலி அடிமைகளாக்கியதுடன், முதலாளியத்துக்கு முந்திய கட்டச் சமுதாயங்களில் உள்ள பெருவாரியான மக்களுக்கும் தம்து மூலதனத்தின் வலிமையைப் பெருக்கிக் கொள்ள அம்மக்களைக் கொள்ளையடித்தவர்களின் அமைப்புக்குமிடையிலான நேரடியான முரண்பாட்டையும் தோற்றுவித்தது.

வரலாற்றுரீதியான வரையறைகளின் காரணமாக, ஐரோப்பாவில் மூலதனத்தின் வளர்ச்சியால் தோற்றுவிக்கப்பட்ட புதிய முரண்பாடுகளைப் பற்றிய முழுமையான விளக்கத்தை மார்க்சால் வழங்க முடியவில்லை. முதலாளிய ஆதிக்கம் பிற சமூக-உருவாக்கங்கள் (Social Formations) மீது ஏற்படுத்திய விளைவுகளின் சில கூறுகள் மார்க்சால் விளக்கப்பட்டன. எனினும் ஏகாதிபத்தியம் பற்றியும் ஒரு முற்றிலும் வேறு வகையான சமூகப் புரட்சியுடன் அதற்குள்ள தொடர்பு பற்றியுமான ஒரு முழுமையான ஆய்வைச் செய்யும் கடமை லெனினுக்கே வாய்க்கப் பெற்றது. முதலாளிய வளர்ச்சிக் கட்டங்களை ஆய்வு செய்து ஏகாதிபத்தியம் பற்றிய விளக்கம் கூறிய லெனின் அதனைக் கீழ்க்காணும் வகையில வரையறுத்தார்:

''...ஆனால் மிகவும் சுருக்கமான இலக்கணங்கள், முக்கிய அம்சங்களைத் தொகுத்துத் தருவது வசதியாக இருந்தாலும்கூட அவை பற்றாக்குறையானவையே; ஏனெனில்

படிப்பகம்

www.padippakam.com



வரையறை செய்யப்பட வேண்டிய நிகழ்வின் முக்கிய அம்சங்கள் சிலவற்றை அவற்றிலிருந்து வருவித்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. ஆகவே பொதுவாக எல்லா இலக்கணங்களும் நிபந்தனைக்குட்பட்ட, சார்பு நிலையிலான மதிப்பே கொண்டவை. நிகழ்வினது முழு வளர்ச்சியிலும் அதன தொடர் புடமைகள் யாவும் அடங்கியனவாய் ஒரு போதும் இருக்க முடியாது என்பதை மறக்காமல் மனதில் கொண்டு ஏகாதிபத்தியத்தின் பின்வரும் ஐந்து அடிப்படை இயல்புகளும் உள்ளடங்குமாறு அதற்கு இலக்கணம் கூறியாக வேண்டும்; 1) பொருளாதார வாழ்வில் தீர்மானகரமான பங்காற்றும் ஏக போகங்களைத் தோற்றுவிக்கும் படியான உயர்ந்த கட்டத்துக்கு உற்பத்தி மூலதனத்தின் ஒன்றுகுவிப்பு வளர்ந்து விடுதல்; 2) வங்கி மூலதனமும் தொழில் துறை மூலதனத்துடன் ஒன்று கலத்தலும், இந்த ''நிதி மூலதனத்தின்'' அடிப்படையில் நிதியாதிக்கக் கும்பல் உருவாதலும் 3) பண்ட ஏற்றுமதியிலிருந்து வேறுபடுத்தப்பட வேண்டியதாகிய மூலதன ஏற்றுமதி தனி முக்கியத்துவம் பெறுதல்; 4) சர்வதேச ஏகபோக முதலாளித்துவக் கூட்டுகள் உருவாகி, உலகையே இவை தமக்கிடையே பங்கிட்டுக் கொள்ளுதல்; 5) மிகப் பெரிய முதலாளித்துவ அரசுகளிடையே அனைத்து உலகப் பரப்பும் பங்கிடப்பட்டுக் கொள்ளுதல் நிறைவுறுகிறது. முதலாளித்துவத்தின வளர்ச்சியில் எந்தக் கட்டத்தில் ஏகபோகங்கள், நிதி மூலதனம் ஆகியவற்றின் ஆதிக்கம் நிலை நாட்டப்படுகிறதோ, மூலதன ஏற்றுமதி முனைப்பான முக்கியத்துவம் பெற்று விட்டதோ, சர்வதேச டிரஸ்டுகளுக்கிடையில்[1] உலகம் பங்கிடப்படுவது தொடங்கியுள்ளதோ, உலகின் நிலப்பரப்பு அனைத்தும் மிகப் பெரிய முதலாளித்துவ அரசுகளுக்கிடையே பங்கிடப்படுவது நிறைவு பெற்று விட்டதோ, அக்கட்டத்திலான முதலாளித்துவமே ஏகாதிபத்தியமாகும்.

(லெனின்: ஏகாதிபத்தியம் முதலாளித்துவத்தின் உச்ச கட்டம், முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, மூன்றாம் பதிப்பு, பக்கம் 142-43)

காட்ஸ்கியையும், ரோசா லக்சம்பர்க்கையும் திறனாய்வு செய்த லெனின், ஏகாதிபத்திய அமைப்பை வெறும் சுரண்டல் முறையாக மட்டுமே குறுக்கிவிடக்கூடாது என்றும் அரசு எந்திரத்தை உள்ளடக்கிய ஓர்அரசியல் அமைப்பாகவே அதைக் காண வேண்டும் என்றும் கூறினார். அதாவது முற்றுரிமை முதலாளியத்தின் மீது எழுப்பப்பட்ட மேலடுக்கே ஏகாதிபத்தியம் என்றார்.

முதலாளியமானது வர்த்தகத்தில் முற்றுரிமையைப் (ஏகபோகத்தை) பெற்றதை அடுத்து காலனிய முறை ஏற்பட்டது. காலனிய முறை செய்த முதல் வேலை, காலனி நாடுகளில் உற்பத்திச் சக்தி[2] களின் வளர்ச்சிக்கு வழிவகுத்துக் கொண்டிருந்த பொருளாதாரங்களை அழித்தது தான். இதற்கு காலனியாதிக்கவாதிகள் தமது அரசு எந்திரத்தின் வன்முறையைப் பயன்படுத்தினர். தயாரிக்கப்பட்ட பொருட்களை ஏற்றுமதி செய்து வந்த பொருளாதாரங்கள் மேலைநாட்டுத் தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை இறக்குமதி செய்பவனவாக மாற்றப்பட்டன. வெளிநாட்டு முதலாளிகளுக்கு மலிவான விலையில் மூலப் பொருட்களை வழங்கி அம் முதலாளிகளின் நிறைபண்டங்களுக்கான பெரும் சந்தையாக மாறின இக் காலனிகள். மேலைநாடுகளில் திரண்டிருந்த மிகை மூலதனத்துக்கான ஒரு தற்காலிகமான வடிகால் இவ்வாறுதான் கிடைத்தது. காலனி ஆட்சி மரபுவழித் தொழில்களை ஒழித்துக் கட்டியது. ஆயினும் உள்நாட்டு மூலதனம் உருவாவதையும் அதன் திரட்சியையும் வெளிநாட்டு மூலதனத்தால் முற்றிலுமாகத் தடுக்க முடியவில்லை. அவ்வாறு செய்வது வெளிநாட்டு முதலாளிகளின் நலன்களுக்கு முற்றிலும் உகந்ததாகவும் இருக்கவில்லை. சந்தை விரிவடைந்ததின் காரணமாக, காலனி நாட்டிலிருந்து பிழிந்தெடுக்கப்படும் மிகை மதிப்பின் அளவு மிக உயர்ந்த மட்டங்களை அடைந்தது; மேலும் பல்வேறு உள் கட்டுமான[3] (infrastructure) வசதிகள் இருப்பதும் வர்த்தகத்தின் மூலமாக மிகை மதிப்பைத் திரட்டுவதும் உள்நாட்டு முதலாளி வர்க்கம் தோன்ற ஏதுவாக இருந்தன. இதைத் தடுக்க காலனியாட்சியாளர் எவ்வளவு முயன்ற போதிலும் அவர்களால்

படிப்பகம்

www.padippakam.com



அதை முற்றிலுமாகத் தடுக்க முடியவில்லை. அதே வேளையில் அவர்களது அரசியல் ஆதிக்கத்தின் காரணமாக காலனிய நாடுகளில் உள்ளூர் மூலதனத்தை உற்பத்தித் துறையில் முதலீடு செய்யப்படுவதற்கு எதிராக அவர்களால் முட்டுக்கட்டையிட முடிந்தது. எனவே உள்நாட்டு மூலதனம் தோன்றுவதை அவர்களால் தடுக்க முடியாவிட்டாலும் அதை ஏகாதிபத்தியத்தின் மூலதனத்துக்குச் சேவை புரிகின்ற மூலதனமாக அவர்களால் ஆக்கமுடிந்தது. இந்த மூலதனம் உற்பத்தி மூலதனமாக மாறுவதற்கும் உள்நாட்டு மூலதனம் மறு உற்பத்தி செய்யப்படுவதற்கும் தடைகளை ஏற்படுத்தி அதை வர்த்தகத் துறையில் செலுத்துமாறு உத்திரவாதம செய்யப்பட்டது. இநத வாணிபம் ஏகாதிபத்திய மூலதனத்துக்கு உகந்ததாகியிருந்தது. காலனி நாடுகளில் ஒரு சுதந்திரமான முதலாளி வர்க்கத்தின் வளர்ச்சி என்பது ஏகாதிபத்திய மூலதனத்துக்கான கடும் அச்சுறுத்தல் என்பதால், உள்நாட்டு மூலதன முதலீட்டைத் தனது பின்னிணைப்பாக மாற்றுவதே, ஏகாதிபத்தியத்தின் குறிக்கோளாக இருந்தது.

முதல் உலகப் போரானது காலனியாட்சிக்குட்பட்டிருந்த நாடுகளில் முதலாளிய வளர்ச்சியை விரைவுபடுத்தியது: "ஏகாதிபத்தியத்தின் முக்கியக் கூறுகளில் ஒன்று அது பின்தங்கிய நாடுகளில் முதலாளிய வளர்ச்சியை விரைவுபடுத்துகிறது என்பதாகும்." உலகப் போரில் ஈடுபட்டிருந்த ஏகாதிபத்திய நாடுகள், குறிப்பாக பிரிட்டன் தம் ஆளுகைக்குட்பட்டிருந்த சில காலனி நாடுகளில (குறிப்பாக இந்தியா) தொழில் முதலாளியம் உருவாவதை அனுமதித்தது. கப்பல் போக்குவரத்து முதலியன தடைப்பட்டிருந்த சமயத்தில், தமது போர் முயற்சிகளுக்கும் காலனிகளின் உள்நாட்டுச் சந்தைகளுக்கும் தேவையான பொருட்கள் காலனி நாடுகளுக்குள்ளேயே உற்பத்தி செய்யப்பட வேண்டிய தேவை இருந்தது. இவ்வாறு துவங்கப்பட்ட தொழில்களும் கூட பெரும்பாலும் ஏகாதிபத்திய மூலத்தனத்துடன் இணைந்தே தோன்றின. காலனியத்தின் கீழ் ஏகாதிபத்தியமானது நிலப்பிரபுக்கள், அரசர்கள், இளவரசர்கள், நவாப்புகள் போன்ற முதலாளியத்துக்கு முந்திய கால வர்க்கங்களுடனும் தரகு வணிக முதலாளி வர்க்கத்துடனும கூட்டுச் சேர்ந்திருந்தது. இந்த மரபுவழி வர்க்கங்கள் பழைய நிலக்கிழமை அல்லது அரை நிலக்கிழமை சமூக பொருளாதாரக் கட்டமைப்புகளைக் கட்டிக் காத்துத் தம நாடுகளை வேளாண்மைப் பின் நிலங்களாகவே வைததிருப்பதில் நிறைவு கண்டன. இவ்வாறு, காலனியப் பொருளாதாரங்கள் உலகப் பொருளாதார அமைப்பைப் பொறுத்தவரை வேளாண்மை உற்பத்திப் பொருட்களையும் மூலப்பொருட்களையும், எரிபொருள் மூலாதாரங்களையும் வழங்கி, மேலை நாடுகளின் உற்பத்தி செய்யப்படும் 'உபரி' சரககுகளை உட்செரிக்கும் சந்தையாகச் செயல்பட்டன. இத்தகைய பொருளாதாரச் செயல்பாடுகளுக்கு உகந்த வகையில்தான் காலனிய / அரைக் காலனிய/ அரை நிலக்கிழமை உற்பத்தி முறைகள் இந்நாடுகளில் மேலோங்கியிருந்தன. இக்கால கட்டததில் ஏகாதிபத்தியததின் முக்கிய உள்நாட்டுக் கூட்டாளிகளாக இருந்தவர்கள் உள்நாட்டு அரை நிலக்கிழமைச் சக்திகளும் நிலக்கிழார்களும் ஏகாதிபத்தியத்துக்கும் காலனியச் சந்தைக்குமிடையே இடைத்தரகனாகப் பணியாற்றிய வணிக (தரகு) வர்ககமும் ஆவர்.

ஆனால் காலனி நாடுகளில் உருவாகிய வரம்புக்குட்பட்ட முதலாளிய வளர்ச்சி என்ற நீண்ட இயக்கப் போக்கின் காரணமாக (இவ் வளர்ச்சியை மார்க்சும், லெனினும் எதிர் பார்த்தனர்; ஆனால் அவர்கள் எதிர்பார்த்த முறையிலிருந்து சற்று மாறுபட்ட முறையில் ஏற்பட்டது) புதிய சமூக வர்க்கங்களும் சமூக அடுக்குகளும் தோன்றின. இவற்றில் வணிகக் குட்டி முதலாளி வர்க்கம், குட்டி முதலாளிய அறிவு ஜீவிகள், தொழில் துறையில் அடியெடுத்து வைத்த முதலாளி வர்க்கம் ஆகியவை இருநதன. தொழில் முதலாளி வர்க்கமாக மாற விரும்பிய சமூகப் பிரிவுகள் தொழில்களை நிறுவ விரும்பியதுமட்டுமல்ல, உள்நாட்டுச் சந்தையில் கட்டுப்பாட்டைப் பெறுவதற்காக தேசிய அரசுகளை உருவாக்கவும் விரும்பின. மேலும் பல்கலைக்கழகங்கள், நகரங்கள், அரசாங்க நிறுவனங்கள் மற்றும் இதர உள்கட்டுமானங்களையும் நிறுவ

படிப்பகம்

www.padippakam.com



விரும்பினர். இத்தகைய அபிலாசைகள் கொண்ட முதலாளி வர்க்கமும், விழிப்புணர்வு கொண்ட உழைக்கும் வர்க்கமும் உழவர் வர்க்கமும் தமது நலன்களையும் கோரிக்கைகளையும் வெளிப்படுத்தத் தொடங்கின.

உற்பத்திச் சக்திகளின் இயல்பான வளர்ச்சியைத் தடுத்து வந்த காலனியக் கொள்கையின் காரணமாக, உள்நாட்டு முதலாளி வர்க்கம் வலுவற்றதாக இருந்தது. எனவேஒருமுதலாளிய முறையில் உற்பத்தி சக்திகளைக் கட்டவிழ்த்துவிடும் ஆற்றலற்றிருந்தது. "முற்றுரிமை முதலாளியத்தின் மேலடுக்கான ஏகாதிபத்தியத்தை" ஒழித்துக் கட்டுவதில் தேசிய விடுதலை இயக்கங்களுக்குள்ள பாத்திரத்தை முதன்முதலாக லெனின் சுட்டிக் காட்டினார். மாசேதுங், புதிய குடியாட்சிப் புரட்சி (New Democratic Revelution) பற்றிய தத்துவம், நடைமுறை ஆகியவற்றின் வழியாக லெனினின் கருத்தை ஆற்றல்மிக்க முறையில் வளர்த்தார். தேசிய முதலாளி வர்க்கத்தின் அடிப்படையான வலுக்குன்றிய தன்மையானது, குடியாட்சிப் புரட்சிக்கு (தேசிய விடுதலைப் போராட்டத்துக்கு) தலைமை தாங்கும் ஆற்றலற்றதாக்குகிறது என்பதை வலியுறுத்திய மாவோ, காலனி—அரைக்காலனி— அரைநிலக்கிழமைத் தன்மைவாய்ந்த சீனத்தில் குடியாட்சிப் புரட்சி என்பது ஏகாதிபத்திய எதிர்ப்பு மற்றும் நிலக்கிழமை எதிர்ப்பு வடிவத்தை எடுத்துள்ளதைச் சுட்டிக் காட்டினார். இப்புரட்சி பழைய வகை குடியாட்சிப் புரட்சி யல்லவென்றும் உலகப் பாட்டாளி வர்க்கப் புரட்சியின் அங்கமாக உள்ள புதிய குடியாட்சிப் புரட்சியென்றும் சீனப் பாட்டாளி வர்க்கத்தின் தலைமையில் நடத்தப்படும் இப் புரட்சி "ஏகாதிபத்தியத்தை அதன் வேரிலேயே தாக்குகிறது. அதன் காரணமாக அது ஏகாதிபத்தியத்தால் பொறுத்துக் கொள்ளப்படுவதில்லை, மாறாக எதிர்க்கப்படுகிறது" என்றும் கூறினார்.

இந்த நூற்றாண்டின் முதல் பகுதியில் இருந்து தொடர்ந்து வருகிற முதன்மையான அரசியல் போக்குகளில் ஒன்று உலகின் ஒவ்வொரு பகுதியிலும் காலனிய ஆட்சிக்கு எதிராக நடத்தப்பட்டு வந்த எதிர்ப்புப் போராட்டமாகும். சீனப் புரட்சியின் முன்னுதாரணமானது காலனிகளிலும் அரைக்காலனிகளிலும் குடியாட்சிப் புரட்சி நிறைவு பெறுதல் என்பது உள்நாட்டு முதலாளி வர்க்கத்தைச் சார்ந்திருப்பதில்லை என்பதையும் பாட்டாளி வர்க்கத்தின் தலைமையில் அப்புரட்சி நேரடியாக சோசலிசத்துக்கு இட்டுச்செல்லும் என்பதையும் மெய்ப்பித்தது.

இரண்டாம் உலகப் போரும், ஒரு வலுவான சோசலிச முகாமின் தோற்றமும், தேசியவிடுதலை இயக்கத் தீயானது காலனி, அரைக் காலனி நாடுகளில் பரவியதும், பாசிச ஜெர்மனியினதும் ஜப்பானினதும் தோல்வியும், பழைய காலனியச் சக்திகளின் வீழ்ச்சியும் உலக முதலாளிய அமைப்பின் பொது நெருக்கடியின் இரண்டாவது கட்டமாக அமைந்தன. (முதல் கட்டம் எனபது, முதல் உலகப்போர், இரஷ்யப் புரட்சியின் வெற்றி ஆகியவற்றின் காலகட்டம்). இரண்டாம் உலகப் போரின் இறுதியில் அமெரிக்கா மிக வல்லமைவாய்ந்த ஏகாதிபத்தியமாக உருவாகி உலக மேலாண்மையைப் பெற்றுவிட்டது. பல்வேறு ஏகாதிபத்தியங்கள் உடைந்து அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் மேலாண்மையின் கீழுள்ள தனியொரு உலகளாவிய ஏகாதிபத்திய அமைப்பு வலுப்பெற்றது. போரில் ஈடுபட்டிருந்த ஐரோப்பிய நாடுகளுக்கு கடன்களும் உதவிகளும் வழங்கிய அமெரிக்கா, போர் முடிந்த பிறகு தனது கூட்டாளிகளின் உடைமைகளாக இருநத காலனிகளையும் செல்வாக்குப் பிரதேசங்களையும் தனது சுரண்டலுக்கு உட்படுத்த விரும்பியது. காலனிய முறையின் வீழ்ச்சி என்பது (பிரிட்டன், பிரான்ஸ், ஹாலந்து, போர்ச்சுகல் முதலான) ஏகாதிபத்திய நாடுகளின் தனியுரிமைகளுக்குட்பட்டிருந்த காலனிகளில் அனைத்துலக நிதிமூலதனம் ஊடுருவுதல் என்பதாகவே அமைந்தது. அதாவது அமெரிக்க முதலாளியம் விரிவடைவதற்குக் குறுக்கே இருந்த தடைகள் உடைக்கப்பட்டன. எனவே காலனிமுறையை நீக்குதல்(decolonisation), ஐரோப்பிய ஏகாதிபத்திய நாடுகளின் கீழ் இருந்த காலனி நாடுகளுக்கு அரசியல்

படிப்பகம்

www.padippakam.com



சுதந்திரம் வழங்குதல் என்று அமெரிக்கா விடாது பரிந்துரை செய்தது. 1914-38இல் ஏற்பட்ட பொருளாதார மந்தத்திலிருந்து மீளவும், மீண்டும் அத்தகையதொரு மந்தம் திரும்ப நிகழாதிருக்கவும் பழைய காலனி நாடுகளை உள்ளடக்கிய ஒரு பெரிய ஆசியா அமெரிக்காவுக்குக் கிடைக்கவேண்டும் என்று 1940இல் அமெரிக்க வெளியுறவுக் குழுவின் ஆவணம் ஒன்று, பரிந்துரை செய்தது. உலகப் போரால் வலுக்குறைந்த ஐரோப்பிய முதலாளிய நாடுகளைத் தன் மேலாண்மைக்குள் கொண்டுவருவதற்காக அமெரிக்கா உருவாக்கிய மார்ஷல் திட்டம், 'பொதுவுடைமை என்னும் ஆபத்தைக் கட்டுப்படுத்தல்' என்ற பெயரில் அமெரிக்கா மேற்கொண்ட கெடுபிடிப்போர் (Cold War), புதுக்காலனியம் ஆகியவை ஒரு முக்கோணமாக அமைந்தன.

## புதுக்காலனியம் —புதிய கோட்பாட்டுச் சட்டகத்தின் தேவை

'ஏகாதிபத்தியப் போர்' என்பதை மையக் கருத்தாகக் கொண்டு அனைத்துலக அளவில் மார்க்சிய-லெனினிய இயக்கங்களுக்குள்ளும் அவற்றுக்கு வெளியே உள்ள மார்க்சியர்களாலும் நடத்தப்பட்டு வரும் கருத்தாடல்கள் புதுக்காலனியம் என்பதைப் பற்றிய ஓர் புரிதலைப் பெறுவதற்கு நமக்கு உதவுகின்றன. உலகச் சந்தையைத் தம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர உலகப் பரப்பை மறுபங்கீடு செய்வதற்காக ஏகாதிபத்தியவாதிகள் நடத்தியவையே முதல், இரண்டாம் உலகப் போர்களாகும். இரண்டாம் உலகப் போருக்கு முன்பு இருந்ததுபோல உலகைப் பிரதேச வாரியாக மறுபங்கீடு செய்து கொள்ளுதல் என்பது இப்போது கட்டாயமானதாக இல்லை என்றும், அதற்குக் காரணம் புதுக்காலனிய நிலைமைகளாகும் என்றும் உலகிலுள்ள பல மார்க்சிய-லெனினியர்கள் கருதுகின்றனர். உலகச் சந்தையைக் கட்டுப்படுத்துவதற்கான போட்டி இப்போது வேறொரு மட்டத்தில் நடந்து கொண்டிருக்கிறது என்றும் இப்போட்டியானது இப்போது முதன்மையாக வட்டாரப் போர்கள் (Local Wars), மாற்றாள் போர் (Proxy War)[6] என்ற அளவுக்கு மட்டுப்படுத்தப்படுகிறது என்றும், இப்போர்கள் பின்னொரு கட்டத்தில் இறுதியாக ஒரு உலகப் போருக்கு இட்டுச் செல்லும் என்றும் இவர்கள் கருதுகின்றனர். இரண்டாம் உலகப போருக்குப் பின்பு ஒப்பீட்டு நோக்கில் (உலகப்போர் இல்லாத) நீண்ட காலகட்டம் நிலவுவதைப் புரிந்து கொள்ள வேண்டுமானால் ஏகாதிபத்தியத்தின் புதுக்காலனியக் கட்டத்தின் திட்டவட்டமான தன்மையைப் புரிந்துகொள்ள வேண்டும் என்பது இவர்களது நிலைப்பாடு. ஏகாதிபத்தியத்தின் இயக்கம் பற்றிய லெனினிய விதிகள் அடிப்படையில் மாறாதிருக்கின்றன என்றபோதிலும் அதன் இயக்கத்தில் காணப்படும் பண்பு வகையில் மாறுபட்ட கட்டங்களை வேறுபடுத்திப் பார்க்க வேண்டியது இன்றியமையாதது. இப் புரிதலானது புதுக்காலனியக் கட்டத்தில் ஏகாதிபத்திய உறவுகளின் திட்டவட்டமான வடிவங்கள் பற்றிய ஆய்வின் தேவையைப் புரிந்துகொள்ள வழிவகுக்கும்.

மூன்றாம் அகிலத்தின் இரண்டாம் பேராயத்தில் (Congress) 1920 ஜூலை 20இல் பேசுகையில் லெனின் கூறினார்:

> "நேரடியான அரசியல், சட்டவகைப் பட்ட சார்புத்தன்மை தவிர, நிதி, பொருளாதார சார்புத்தன்மை உறவுகள் பலவற்றையும் காலனிய சார்புத்தன்மை முன்பே கொண்டிருக்கிறது."

காலனியத்தின் சிறப்பியல்புகளில் ஒன்று நேரடியான அரசியல் மற்றும் சட்ட வகைப் பட்ட சார்புத் தன்மை என்பதை லெனினின் கூற்றிலிருந்து அறியலாம். ஆனால் இத்தகைய நேரடியான அரசியல்-சட்டவகைக் கட்டுப்பாடு இல்லாமலேயே பொருளாதார ஆதிக்கம் இருக்க முடியும் என்பதை லெனின் இதற்கு முன்பு கூறியிருந்தார். கீழ்க்காணும் மேற்கோள்கள் அதற்குச் சான்று பகரும்:

படிப்பகம்

www.padippakam.com



"நிதி மூலதனமானது முழுமையான அரசியல் சுதந்திரத்தை அனுபவித்துக் கொண்டிருக்கும் அரசுகளைக் கூடத் தனக்குக் கீழ்ப்படிய வைக்கும் ஆற்றலை உடையது. உண்மையிலேயே அவற்றைத் தனக்குக் கீழ்ப்படுத்துகிறது. இந்த அளவுக்கு அது எல்லாப் பொருளாதார, அனைத்துலக உறவுகளிலும் ஒரு பெரும் தீர்மானகரமான ஆற்றலாக உள்ளது என்று கூறலாம்" "(ஏகாதிபத்தியம்-முதலாளியத்தின் உச்சகட்டம்"(1916), முன்னேற்றப் பதிப்பகம் மாஸ்கோ, மூன்றாம் பதிப்பு)

"ஒரு நாட்டின் பெரும் நிதி மூலதனத்தால் அரசியல் சுதந்திரமுள்ள மற்றொரு நாட்டிலுள்ள போட்டியாளர்களை எப்போதும் விலைக்கு வாங்க முடியும்; இடைவிடாது வாங்கிக்கொண்டுதான் இருக்கின்றது. பொருளாதார ரீதியாக இது முழுமையாகச் சாதிக்கப்படக் கூடியதுதான். பொருளாதார ரீதியாக ஒரு நாட்டைக் 'கைப்பற்றிக் கொள்வது' என்பது அரசியல ரீதியாக 'கைப்பற்றிக் கொள்ளாமலேயே' முழுமையாகச் சாத்தியப்படக் கூடியது. இது பரவலாகக் கடைப்பிடிக்கப் படுகிறது" (Imperialist Economism : A Caricature of Marxism — Vol 23, FLPH Moscow)

இத்தகைய நாடுகளுக்கு எடுத்துக்காட்டாக நார்வே, போர்ச்சுகல், அர்ஜெண்டினா முதலியவற்றை லெனின் சுட்டிக்காட்டுகிறார். இவை ஏற்கனவே அரசியல் சுதந்திரம் பெற்றிருந்தவை; அவற்றின் அரசியல் சுதந்திரத்தை இழக்காமலேயே ஏகாதிபத்தியப் பொருளாதார ஆதிக்கத்துக்குக் கீழ்ப்படியச் செய்யப்பட்டவை. ஏற்கனவே காலனிகளாகவும் அரைக்காலனி நாடுகளாகவும் உள்ள நாடுகளில் புதிய உத்திகளைக் கையாள ஏகாதிபத்தியம் வகுத்த திட்டங்களைப் பற்றியும் லெனின் 1916இல் எழுதுகிறார். ஒடுக்கப்படும் நாடுகளிலுள்ள முதலாளி வர்க்கம் ஆதிக்கம் செலுத்தும் நாடுகளிலுள்ள முதலாளி வர்க்கத்துடன் செய்து கொள்ளும் "பிற்போக்கு ஒப்பந்தங்கள்" பற்றி "சோசலிசப் புரட்சியும் தேசங்களின் தன்னாட்சி உரிமையும் பற்றிய ஆய்வுரைகளில்" லெனின் குறிப்பிடுகிறார். 1920இல்— மூன்றாவது அகிலத்தின் இரண்டாவது பேராயத்தில் லெனின் குறிப்பிடுவது மிகவும் முக்கியமானது:

"அரசியல் ரீதியான சுதந்திரமான அரசுகளை உருவாக்குதல் என்ற வேடத்தின்கீழ் ஏகாதிபத்தியச் சக்திகள் ஒடுக்கப்படும் நாடுகளிலுள்ள சலுகை பெற்ற வர்க்கங்களின் ஒத்துழைப்புடன் திட்டமிட்டு நடத்தும் மோசடியானது. ஏகாதிபத்தியச் சக்திகளைப் பொருளாதார ரீதியிலும் இராணுவ ரீதியிலும் முற்றிலுமாகச் சார்ந்து நிற்கும் அரசுகளை உருவாக்குகிறது."

இதற்குக் காரணம் ஏகாதிபத்தியத்தால் காலனி நாடுகளில் உருவாக்கப்பட்ட வரையறுக்கப்பட்ட முதலாளிய வளர்ச்சியுடன் பாட்டாளி வர்க்கமும் உழவர் வர்க்கமும் விழிப்புணர்வு பெறத் தொடங்கியதுதான். மூன்றாம் அகிலத்தின் 4ஆம் பேராயத்தில் ஏற்கப்பட்ட தீர்மானம் கூறுவதாவது:

"காலனி நாடுகளில் புரட்சிகர இயக்கங்களுக்கு முன்னோடியாக முதலில் இருப்பவர்கள் சுதேசி முதலாளி வர்க்கமும் அறிவு ஜீவிகளுமாவர். ஆனால் பாட்டாளிய, அரைப் பாட்டாளிய வெகுமக்கள் இவ்வியக்கங்களில் இழுக்கப்படுகையில், கீழ்நிலை வர்க்கங்களின சமூக நலன்கள் எந்த அளவிற்கு முன்னணிக்கு வருகின்றனவோ அந்த அளவுக்குப் பெருமுதலாளி வர்க்கமும முதலாளிய—நிலக்கிழமைச் சக்திகளும் இயக்கத்திலிருந்து விலகிச்செல்வர்".

(Theses on Eastern Question, Adopted In 4th Congress of Comintern)

இங்கு 'அரசியல் சுதந்திரம' என்றால என்ன எனபது பற்றிச் சுருக்கமாகக் கூறுவோம். 'பொதுவுடைமை அறிக்கை' (Communist Manifesto)யின் 1ஆம் பதிப்புக்குத் தான் எழுதிய முன்னுரையில் ஏங்கல்ஸ் கூறுகிறார்: "அரசியல் சுதந்திரம

படிப்பகம்

www.padippakam.com



இல்லாத எந்த நாட்டையும் முதலாளி வர்க்கத்தால் ஆளமுடியாது". மூன்றாம் உலக நாடுகள் பெரும்பாலானவற்றைப் பொறுத்த வரை 'அரசியல் சுதந்திரம்' என்பதன் பொருள் அந்நாடுகளில் ஆளும் வர்க்கங்களாக இருப்பவை அந்தந்த தேசத்தின் முதலாளி வர்க்கங்களேயன்றி காலனியாட்சியின் கீழ் இருந்ததுபோல ஒடுக்கும் (ஏகாதிபத்திய) நாடுகளின் முதலாளி வர்க்கங்கள் அல்ல. இதற்கு இவ்வளவுதான் பொருள். ஒரு நாட்டை (அரசு அதிகாரம் கொண்டு) ஆள்வது (இது 'அரசியல் சுதந்திரம்') வேறு; சுதந்திரமான அரசியல் பொருளாதாரக் கொள்கைகளைப் பின்பற்றுதல் என்பது வேறு. "பொருளாதாரத்தின் செறிவான வெளியீடே அரசியல்" என்றார் லெனின். எத்தகையதொரு பொருளாதாரம் நிலவுகிறதோ அது ஆளும் வர்க்க அரசியலில் பிரதிபலிக்கப்பட்டே தீரும்; அந்த ஆளும் வர்க்க அரசியலும் அத்தகைய பொருளாதாரத்தையே வழிநடத்திச் செல்லும். மேலும் இந்த மூன்றாம் உலக நாடுகளில் எத்தகைய முதலாளி வர்க்கம் ஆட்சிக்கு வந்துள்ளது என்பதும் கவனிக்கப்பட வேண்டிய விடயமாகும். இம் முதலாளி வர்க்கம் உற்பத்திச் சக்திகளின் இயல்பான வளர்ச்சியிலிருந்தும் நிலக்கிழமைக்கெதிரான வர்க்கப் போராட்டத்திலிருந்தும் உருவாகி வந்த மேற்கு நாட்டு முதலாளி வர்க்கத்தைப் போன்றதல்ல. இது ஏகாதிபத்தியத்தால் தோற்றுவிக்கப்பெற்று ஊட்டி வளர்க்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருவதாகும். இத்தகைய வர்க்கத்தைப் போலி முதலாளி வர்க்கம் (Pseudo-bourgeoisie) என்று மாபெரும் ஆப்பிரிக்க மார்க்சிய-லெனினியப் புரட்சியாளரான அமில்கார் கப்ரால் கூறினார். உதிரி முதலாளி வர்க்கம் என்றும் (Lumpen bourgeoisie) பிச்சை எடுக்கும் முதலாளி வர்க்கம் (mendicant bourgeoisie) என்றும் லத்தீன் அமெரிக்கப் புரட்சியாளர் சிலர் கூறுகின்றனர்.

ஏகாதிபத்தியத்தின் பின்னிணைப்பாகப் பிறந்த அவ்வர்க்கம் இப்போது புதுக் காலனியச் சூழலில் வகிக்கின்ற பாத்திரத்தைக் காண்கையில் இதற்கு எத்தகையதொரு அருவறுப்பான பெயரும் தகும் என்பது விளங்கும். 20ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் உலகிலுள்ள முதலாளி வர்க்கத்தைப் பற்றிப் பேசுகையில் ஸ்டாலின் குறிப்பிட்டார்:

''முன்பு முதலாளி வர்க்கம் தேசத்தின் தலைவராகக் கருதப்பட்டது; தேசத்தின் உரிமைகளையும் சுதந்திரத்தையும் அது உயர்த்திப் பிடித்து அவற்றை ''எல்லாவற்றுக்கும் மேலானதாக'' வைத்தது. இப்போது ''தேசியக் கொள்கையின்'' ஓர் அடையாளம் கூட எஞ்சவில்லை. இப்போது முதலாளி வர்க்கம் தேசத்தின் உரிமைகளையும் சுதந்திரத்தையும் டாலர்களுக்காக விற்று விடுகிறது. தேசிய சுதந்திரத்தினதும் தேசிய இறைமையினதும் பதாகை தூக்கி எறியப்பட்டு விட்டது." (J. Stalin, Speech at Nineteenth Party Congress, 1952; See Appendix to J. Stalin, Report to the Eighteenth Congress of the CPSU (B), New Book Centre, Calcutta, 1976)

இத்தகைய முதலாளி வர்க்கத்தை நாம் தரகு முதலாளி வர்க்கம் என்றே அழைப்போம். இங்குள்ள (குறிப்பாக இந்தியாவிலுள்ள) ஆளும் தரகு முதலாளி வர்க்கமோ, அல்லது அதிகார வர்க்க முதலாளிகளோ சீனாவிலிருந்தவர்களிடமிருந்து பண்பு ரீதியில் அல்லது அளவு ரீதியில் மாறுபட்டிருக்கலாம். ஆனாலும் வேறு பொருத்தமான சொல் மார்க்சிய-லெனினியர்களால் உருவாக்கப்பட்டுப் பரவலாக ஏற்றுக் கொள்ளப்படும் வரை இச்சொல்லையே கையாளுவோம். மாசேதுங் கூட தரகு முதலாளிகளை என்பதை ஒரே பொருளில் கையாளவில்லை என்பதற்கும், 1926ல வணிக வர்க்கத்தைக் குறிக்க இச்சொல்லை அவர் கையாண்டாலும் பின்னர் ஏகாதிபத்தியத்திற்கு நாட்டைக் காட்டிக் கொடுத்து நிலப் பிரபுத்துவ உற்பத்தி உறவுகளைப் பாதுகாத்த பெரும் முதலாளி வர்க்கத்தைக் குறிக்கவே இச்சொல்லைக் கையாண்டார் என்பதற்கும் கீழ்க்காணும் மேற்கோள் சான்று தருகிறது:

"அரசு அதிகாரத்துடன் இணைந்துள்ள இந்த முற்றுரிமை மூலதனம், அரசு-முற்றுரிமை மூலதனமாகியுள்ளது. வெளிநாட்டு

படிப்பகம்

www.padippakam.com



ஏகாதிபத்தியம், உள்நாட்டு நிலக்கிழமை வர்க்கம், பழையவகைபபணக்கார உழவர்கள் ஆகியவற்றுடன் நெருக்கமாகப் பிணைக்கப் பட்டுள்ள இந்த முற்றுரிமை முதலாளியம், தரகு, நிலப் பிரபுத்துவ, அரசு-முற்றுரிமை முதலாளியமாக ஆகியுள்ளது. சியாங்கே ஷேக்கின் பிற்போக்கு ஆட்சியின் பொருளாதார அடிப்படை இத்தகையதுதான். இந்த அரசு-முற்றுரிமை முதலாளியம் தொழிலாளர்களையும் உழவர்களையும் மட்டுமல்லாது நகர்ப்புறக் குட்டி முதலாளி வர்க்கத்தையும் ஒடுக்குகிறது. அது மத்திய நிலையிலுள்ள (middle) முதலாளி வர்க்கத்திற்கும் ஊறு விளைவிக்கிறது. இந்த அரசு-முற்றுரிமை முதலாளியம், எதிர்ப்புப் போரின் போதும் ஜப்பானியர்களின் சரணடைவுக்குப் பின்னரும் தனது வளர்ச்சியின் உச்ச நிலையை அடைந்தது. அது புதிய குடியாட்சிப் புரட்சிக்கான செழுமையான பொருள்ாயத நிலைமைகளை உருவாக்கியுள்ளது. இந்த மூலதனம் சீனாவில் அதிகார வர்க்க மூலதனம் என்று பிரபலமாகியுள்ளது. அதிகார வர்க்க-முதலாளி வர்க்கம் என்று அழைக்கப்படும் இந்த முதலாளி வர்க்கமே சீனாவின் பெரும் முதலாளி வர்க்கமாகும்'' (Mao Tsetung, Selected works, Volume IV. Foreign Language Press, Third Printing 1969, Page 167).

மீண்டும் லெனினிடம் திரும்பி வருவோம். லெனின், பிரதேசக் கைப்பற்றல் தேவைப்படாத பொருளாதார ஆதிக்கம், ஏகாதிபத்திய முதலாளிகளும் ஒடுக்கப்படும் நாட்டு முதலாளிகளும் ஏற்படுத்திக் கொள்ளும் ''பிற்போக்குத்தனமான ஒப்பந்தங்கள்'', ''அரசியல் சுதந்திரம் வழங்குதல் என்ற வேடத்தின்கீழ்'' ஏகாதிபத்திய முதலாளிகள் செய்யும் மோசடி என்பனவற்றைப் பற்றிக் கூறியிருந்தாலும் புதுக் காலனியம் பற்றிய ஒரு தத்துவத்தை உருவாக்குவது அவருக்கு சாத்தியமில்லாமல் போயிற்று. ஏனெனில் லெனின் காலத்திற்குப் பிறகுதான் புதுக் காலனியமானது முற்றுரிமை முதலாளியத்தின் மேலோங்கிய ஆதிக்க வடிவமாக உலகம் முழுவதிலும் பரவிற்று. எனவே ஏகாதிபத்தியம் பற்றிய லெனினின் கோட்பாட்டுச் சட்டகம் இன்னும் சற்று விரிவுபடுத்தப்பட வேண்டும்.

## உலகப்போருக்குப் பிந்திய காலகட்டத்தின் முற்றுரிமை முதலாளியம்

புதுக் காலனியம் என்பது உலக முதலாளியத்தின் வளர்ச்சி, நசிவு ஆகியவற்றின் விளைபொருள் எனலாம். ''வளர்ச்சி'' ''நசிவு'' இரண்டும் முரண்பட்டவை. ஆயினும் இயங்கியல் சிந்தனை எல்லா நிகழ்ச்சிப் போக்குகளிலும் ஒன்றுக்கொன்று முரண்பட்ட கூறுகளின் இணைந்த போராட்டத்தைக் காண்கிறது. ''ஏகாதிபத்தியம்-முதலாளியத்தின் உச்சக்கட்டம்'' என்ற நூலில் லெனின் முதலாளியம் நசிவடைந்து வந்த போதிலும் ஒட்டு மொத்தமாகக் கூறுவதானால் அது முன்னை விட வேகமாக வளர்ந்து வருகிறது என்று குறிப்பிட்டார்.

முதலாளியம் முற்றிலுமாகத் தேக்கமடைந்துபோய் உடைந்து நொறுங்கிக் கொண்டிருக்கிறது என்று சிலர் கருதியதற்கு மாறாக நெருக்கடி காலகட்டங்களில்தான் முதலாளியமானது சில முக்கியமான சீரமைப்புகளையும் சரிக்கட்டல்களையும் மேற்கொள்கிறது, தன்னை ஒழுங்குபடுத்திக் கொள்கிறது என்பதைலெனின் சுட்டிக் காட்டினார். இரண்டாம் உலகப் போருக்குப் பிந்தியகால கட்டத்தில் உலக முதலாளியம் மிகப் பெரும்சீரமைப்பிற்குத் தன்னை உட்படுத்திக் கொண்டது; அதாவது புதுக் காலனியக் காலகட்டத்துக்குள் நுழைகிறது. காலனி நாடுகளில் ஏற்பட்டிருந்த முதலாளிய வளர்ச்சி, காலனியம் புதுக் காலனியமாக உலக அளவில் மாற்றமடைவதற்கான பொருளாதார அடிப்படையை ஏற்படுத்தி இருந்தது. இதன் காரணமாகத்தான் புதுக்காலனியம் என்பது உலக முதலாளியத்தின் வளர்ச்சி—நசிவு ஆகியவற்றின் விளைபொருள் எனக் குறிப்பிட்டோம்.

புதுக் காலனியத்தின் முதன்மையான பொருளாதாரக் கூறுகள் யாவை?

படிப்பகம்

www.padippakam.com



1) அரசு-முற்றுரிமை முதலாளியம்[7] ஏகாதிபத்திய நாடுகளில் வலுப்படுதல் 2) பன்னாட்டுக் குழுமங்கள் (அல்லது நாடு கடந்து செயல்படும் குழுமங்கள்) 3) அனைத்துலக ஏகாதிபத்திய அரசு எந்திரங்களுடன் நெருக்கமாகப் பிணைந்து மூலதனம் அனைத்துலக மயமாக்கப்படுதல் 4) அனைத்துலக நிதிநிறுவனங்களின் தோற்றமும் வளர்ச்சியும் 5) கடன் பொருளாதாரம் (debt economy) அனைத்துலகமயமாதல் 6) ஒடுக்கப்படும் நாடுகளில் அரசு முதலாளியம் (அதிகாரவர்க்க முதலாளியம்) வலுப்பெறுதல்.

ஏகாதிபத்திய அரசின் பொருளாதார நடவடிக்கைகளில் ஏற்பட்டுள்ள பண்பு வகை மாற்றமானது உலகப் போருக்குப் பிந்திய முதலாளியத்தின் முக்கிய இயல்புகளில் ஒன்றாகும். உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியின் காரணமாகவும் முற்றுரிமை அதிகரிப்பதன் காரணமாகவும் பொருளாதாரத்தை ஒழுங்குபடுத்துவதிலும் கட்டுப்படுத்துவதிலும் அரசு முன்னைக் காட்டிலும் அதிகமான முக்கியப் பாத்திரத்தை மேற்கொள்கிறது. ''தேசிய மயமாக்கப்பட்ட'' தொழில்கள், அரசாங்கத் துறைகள், வாரியங்கள், குழுமங்கள் முதலிய பல்வேறு வடிவங்களில் அரசு முற்றுரிமை செயல்படுகிறது. அதே வேளையில் தனியார் தொழில்களிலும் அரசு அதிகரித்த அளவில் தலையிடுகிறது. அரசு-முற்றுரிமை முதலாளியத்துக்கு ஏற்பட்டுள்ள முக்கியத்துவமே, அதை நோக்கிய வளர்ச்சியே புதுக்காலனியத்தின் மிக முக்கிய இயல்புகளில் ஒன்றாகும்.

அரசு-முற்றுரிமை முதலாளியத்தின் வளர்ச்சிக்கு இணையாகப் பன்னாட்டு வாரியங்களின் வளர்ச்சியையும் அவற்றின ஆதிக்கத்தையும் காணலாம். முன்பு தனித்தனி நாடுகளில் இருந்த முற்றுரிமைக் குழுக்களுக்கு மட்டுமே உரியதாயிருந்த சர்வதேசக் கார்டெல்கள்[8] பல்வேறு நாடுகளிலுள்ள முற்றுரிமைக் குழுக்களையும் தழுவுகின்ற கார்ட்டெல்களாக மாறியுள்ளன. இவை முன்னெப்போதும் இல்லாத வகையில் பரந்து விரிந்துள்ள உலகப்பகுதிகளை எட்டித் தொடுகின்றன; இவற்றில் ஊடுருவுகின்றன.

பன்னாட்டு முற்றுரிமை மூலதனம் இரண்டு முதன்மையான வடிவங்களை எடுத்துள்ளது.

1) பொருளுற்பத்தியிலும் தயாரிப்பிலும் நேரடியாகத் தொடர்புள்ள முற்றுரிமை இணைப்புக் குழுமங்கள் (Conglomerates)

2) பொருளுற்பத்திக்கும் சேவைகளுக்கும் (Services) இன்றியமையாத பணமூலதனத்தைக் கட்டுப்படுத்துகின்றதும் வழங்குகின்றதுமான முற்றுரிமை இணைப்புக் குழுமங்கள். பன்னாட்டுக் குழுமங்கள், அரசு முற்றுரிமை நிறுவனங்களுடனும் பல வகைகளில் தொடர்பு கொண்டுள்ளன.

''சோவியத் யூனியனில் சோசலிசத்தின் பொருளாதாரப் பிரச்சினைகள்'' (1952) என்ற நூலில் ஸ்டாலின் நவீன முற்றுரிமை முதலாளியத்தின் உந்து சக்தியாகச் செயல்படுவது உயர்ந்த பட்ச ஆதாயத்துக்கான வேட்டையே எனக் குறிப்பிடுகின்றார்.

ஆதாய விகிதம் வீழ்ச்சியடைதல் (declining rate of Prefit), மொத்த மூலதனத்தில் நிலையான மூலதனத்தின் (Constant Capital)[9] பங்கு அதிகரித்தல் என்ற வரலாற்று நிகழ்ச்சிப் போக்கின் விளைவாக இரண்டாம் உலகப் போருக்குப் பிந்திய கால கட்டத்தில் தொழில் நுணுக்கம் பெரும் மாற்றங்களுக்குள்ளாகி இருக்கிறது. இது குறுகிய காலத்தில், உயர் அளவு ஆதாயம் தரும் 'தொழில் நுணுக்கமாகியுள்ளது. இப்போக்கின் விளைவு என்னவென்றால் பொருட்கள் விரைவில் பழசாகிப் போகும் வகையில் உற்பத்தி செய்யப்படுவது என்பது (built-in-obsolescense) அதிகரித்த அளவில் நடைபெறுகிறது. புதுக் காலனிகள் இத்தொழில் நுட்பங்களைக் கொட்டித் தள்ளுவதற்கான களங்களாகச் செயல்படுகின்றன; இதற்கு ஒரு காரணம், இங்கு மலிவான உழைப்பு (மலிவான மூலப்பொருள்களும் கூட) ஏராளமாகக் கிடைப்பதுதான். ஏகாதிபத்திய நாடுகளில் மூலதனமானது மிகையாகத் திரட்டப்படுவதனால் உற்பத்திப் பொருட்களுக்கான சந்தை, மூலதனத்துக்கான சந்தை இரண்டையுமே விரிவுபடுத்த வேண்டிய தேவை அந்நாடுகளுக்கு

படிப்பகம்

www.padippakam.com



ஏற்படுகின்றது. இன்றைய நிலைமைகளில் புதிய பகுதிகளைத் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதன் மூலம் சந்தையை விரிவு படுத்தும் சாத்தியக் கூறு என்பது பெரும்பாலும் இல்லை. எனவே சந்தை விரிவாக்கம் என்பதைப் பொதுவாக ஒடுக்கப்படும் (மூன்றாம் உலக) நாடுகளிலுள்ள மக்களின் ஒரு பகுதியினரின் வாங்கும் ஆற்றலை வளர்ப்பதன் மூலம் புதிய பிரிவுகளைத் தனது நீரோட்டத்திற்குள் கொண்டு வரும் உத்தியின் மூலம் ஏகாதிபத்தியம் மேற்கொள்கிறது. இந்த இயக்கப் போக்கானது புதுக் காலனி நாடுகளில் உள்கட்டுமானத்தையும் உற்பத்திச் சக்திகளையும் வளர்ப்பதற்காக முதலீடுகளை அதிகரிப்பதன் மூலம் துவக்கப்பட்டது; எனவே இந்த இருவழிகளிலும் (பொருட்களைக் குவித்தல், முதலீடுகளைச் செய்தல்) ஏகாதிபத்திய நாடுகளிலிருந்து ஒடுக்கப்படும் நாடுகளுக்குத் தொழில் நுட்பம் தொடர்ந்து மாற்றப்பட்டு வருகிறது. இந்தத் தொழில் நுட்பம் முன்னேற்றமடைந்த தொழில் நுட்ப அளவுடன் ஒப்பிடுகையில் மிகவும் பழையது. தொழில் நுட்பம் இவ்வாறு ஒடுக்கப்படும் நாடுகளுக்கு மாற்றப்படுவதன் காரணமாக இந்நாடுகளின் சமூகப் பொருளாதாரக் கட்டமைப்பு சீர்குலைகிறது. ஏனெனில் மேலிருந்து இறக்குமதி செய்யப்படும் முன்னேற்றமடைந்த தொழில் நுணுக்கத்திற்கும் கீழே உள்ள மிகப் பிற்பட்ட சமூகக் கட்டமைப்புக்கும் இடையில் ஓர் உயிருள்ள பிணைப்பு ஏதும இல்லை. (நம் நாட்டின் பலஇடங்களில் சுற்றுப்புறப் பகுதிகளுடன் எவ்விதப் பிணைப்பும் இல்லாத நவீன தொழிற்பகுதிகளைக் கொண்ட இத் தொழுற்பகுதிகள் தனித்து நிற்கிற தீவுத் திடல்களைப் போலக் காணப்படுகின்றன)

எனவே புதுக்காலனியம் என்பது உலக அளவில் புதிய வர்க்க அணிச் சேர்க்கையை உருவாக்குகிறது. எதிரெதிரான வர்க்க ஆற்றல்களை (சக்திகளை) உருவாக்குகிறது. இதற்கு அடிப்படையாக இருப்பது பன்னாட்டு முற்றுரிமை மூலதனத்திற்கும் உள்நாட்டுத் தரகு-அதிகார வர்க்க முதலாளி வர்க்கங்களுக்கிடையிலான கூட்டு ஆகும்.

புதுக் காலனியம் என்பது மேலை நாட்டு முதலாளி வர்க்கத்தால் முன்னாள் காலனி மற்றும் பின்தங்கிய நாடுகளின் முதலாளி வர்ககங்களுக்குத் தவிர்க்க முடியாமல் கொடுக்கப்பட்ட சலுகை மட்டுமல்ல, இது அனைத்துலக முதலாளிய உழைப்புப் பிரிவினையில் ஏகாதிபத்திய நாட்டு முதலாளி வர்க்கத்திற்கும் மூன்றாம் உலக நாட்டு முதலாளி வர்க்கத்திற்கும் இடையிலான உறவிலும் ஓர் மாற்றத்தை ஏற்படுத்துகிறது. இந்த மாற்றங்களுக்கான பொருளாதார அடிப்படைகள்:-

1. மூன்றாம் உலக நாடுகளில் அரசு வகிக்கும் பாத்திரமும் பொருளாதார வாழ்வில் தலையிடக்கூடிய ஆற்றலும்.

2. அந்த நாடுகளில் ஏற்படும் புதுக் காலனியச் சார்புத் தன்மை கொண்ட தொழில் வளர்ச்சி.

பழைய ஏகாதிபத்தியத்தின்கீழ் அரசு-முற்றுரிமை முதலாளியம் ஏகாதிபத்திய நாடுகளில் மிக வேகமாக வளர்ச்சி பெற்றது போல் புதுக் காலனியத்தின்கீழ இத்தகைய வளர்ச்சி மூன்றாம் உலக நாடுகளிலும் தவிர்க்க முடியாதபடி ஏற்படுகிறது. காரணம், மூலதனம் திரட்டிக் கொள்வதில் உள்நாட்டு முதலாளி வர்க்கத்துக்குள்ள ஆற்றல் மிகக் குறைவாக உள்ளதுதான். மூன்றாம் உலக நாடுகளின் முதலாளியத்தின் வளர்ச்சியை இரு கட்டங்களாகப் பிரிக்கலாம். முதல் கட்டம், இறக்குமதி செய்யப்பட்டு வந்த இயந்திரங்கள், கருவிகள் முதலியவற்றையும் சில மூலப் பொருட்களையும் உள்நாட்டிலேயே தயாரிக்கத் தொடங்கும் கட்டம் (Import Substitution). இது மூன்றாம் உலக நாடுகளில் முதலாளியத் தொழில்மயமாக்குதலுக்கான அடிப்படைத் தூண்டுதலை வழங்கியதுடன் சுதேசி (தொழில்) முதலாளி வர்க்கத்தின் வளர்ச்சிக்கும காரணமாயிற்று. அரசு முதலாளியமும், நிலச்சீர்திருத்தம் மூலம் முதலாளியஉறவுகளை வேளாண்மைத் துறையில் விரிவுபடுத்தியதும் இக்கட்டத்தின் முகாமையான கூறுகளிற் சில. உண்மையில் இந்த இயக்கப் போக்கு ஏகாதிபத்திய எதிர்ப்புத் தன்மை கொண்டதல்ல. ஏனெனில் சார்புத் தன்மை என்பது சிறுரக நுகர்வு

படிப்பகம்

www.padippakam.com



பொருட்களை இறக்குமதி செய்தல் (இவை இப்போது உள்நாட்டிலேயே தயாரிக்கப்படுகின்றன அல்லது "அசெம்பிள்" செய்யப்படுகின்றன) எனபதிலிருந்து மூலதனப் பொருட்களை (Capital Goods) இறக்குமதி செய்தல் என்பதற்கு மாறியது. இறக்குமதியின மாற்றீடு என்பது புதுக் காலனிய சார்பு முதலாளியம் விரிவு பெறுவதற்கும், வலுப் பெறுவதற்கும் அடிப்படையிட்டது. ஏகாதிபத்திய நாட்டுச் சந்தைகளுக்கு ஏற்றுமதி செய்வதற்காகப் பொருட்களை உற்பத்தி செய்தல் என்பதுதான் இரண்டாவது கட்டத்தின் சிறப்பியல்பு. அதாவது ஒரு புதிய அனைத்துலக உழைப்புப் பிரிவினை தோற்றுவிக்கப்பட்டது; உற்பத்தி அனைத்துலக மயமாக்கப்பட்டது; மூலதனம் மிகுதியாகத் தேவைப்படுகிற சிலவகைத் தொழில்கள் பன்னாட்டு வாரியங்களின்கீழ் மூன்றாம் உலக நாடுகளுக்கு என ஒதுக்கப்பட்டன. "இறக்குமதிக்கு மாற்றீடு" எனற கட்டத்தை அடுத்து "திறந்த கதவுக் கொள்கை" (Open door policy) வருகிறது; தனியார் முற்றுரிமை மூலதனம் இப்போது முதலாளிய அரசின் மீது தனது ஆளுகையைச் செலுத்துகிறது. உள்நாட்டு முதலாளி வர்க்கம் உள்நாட்டுச் சந்தைக்காக மட்டுமே முதன்மையாக உற்பத்தி செய்வதில் அக்கறை காட்டுவதில்லை. எனெனில் உள்நாட்டுச் சந்தையானது இப்போது தனது பசியைத் தீர்க்கத் தேவையான மிகை மதிப்பைப் (Surplus Value) பெறுவதை உறுதி செய்வதில்லை. இறக்குமதிக்கான மாற்றீடு, அரசு ஆதரவு ஆகியவற்றின்கீழ் முதிர்ச்சியடைந்த உள்நாட்டுத் தனியார் துறை இப்போது பழைய அரசு முதலாளிய வடிவங்களை உதறி எறிந்துவிட்டு முன்பு அரசு முதலாளியத்துக்கு எனறே தனியாக ஒதுக்கப்பட்டிருந்த துறைகளிலும் நுழைகிறது. உள்நாட்டுத் தனியார மூலதனம், அனைத்துலக முற்றுரிமை மூலதனததுடன் ஐக்கியப்பட்டு அதற்குக் கீழ்ப் படிவதன்மூலம், வெளிநாட்டு மூலதனம், தொழில்நுணுக்கம், சந்தைகள் ஆகியவற்றைப் பெற்றுக் கொள்கிறது. அதேவேளையில் அதிகார வர்க்க முதலாளியம் தன்னை ஒரு வலிமைமிக்க ஆற்றலாக நிலைநாட்டிக் கொள்வதும் நிகழ்கிறது.

வெளிநாட்டு மூலதனத்துடன் ஏற்படும் இத்தகைய நெருக்கமான பிணைப்பு என்பது உள்நாட்டு முதலாளி வர்க்கம் தான் முன்பு ஈடுபட்டிருந்த (ஒப்பீட்டு நோக்கில்) எளிமையான தொழில் நுணுக்கம் மட்டுமே தேவைப் பட்டிருந்த தொழில்களிலிருந்து (எடுத்துக் காட்டாக-ஜவுளித் தொழில், தோல் பதனிடல், உணவுப் பொருட்களைப் பதப் படுத்துதல், சணல் பொருட்கள் முதலியன) மேம்பாடானதும், நுட்பமானதுமான தொழில் நுணுக்கங்களும் ஒழுங்கமைப்பும் தேவைப்படுகின்ற துறைகளுக்குச் செல்கையில ஏற்படுகிறது. உள்நாட்டு முதலாளி வர்க்கம இப்போது அனைத்துலக மூலதனத்தின் உள்நாட்டுக் கையாள் என்ற பாத்திரத்தை மேறகொள்கிறது. பன்னாட்டுக் குழுமங்கள் வழங்கும் துணை-ஒப்பந்தவேலைகளை நிறைவேற்றுகின்றது அல்லது கூட்டுத் தொழிற் குழுமங்களை ஏற்படுத்துகிறது. இதற்குக் கைம்மாறாக, தம் நாட்டு மக்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட மிகை மதிப்பில் ஒரு பகுதியைப் பெற்றுக் கொள்கிறது. உள்நாட்டு வங்கியும் நிதிமூலதனமும் பன்னாட்டுக் குழுமங்களுக்கு வேண்டிய மூலதனத்தை உள்நாட்டில் திரட்டித் தருகின்றன. இவ்வாறு உள்நாட்டு மூலதனம் உலக நிதி மூலதனததுடன் இணைக்கப்படுகின்றது. உள்நாட்டு முதலாளிகள் விற்பனையிலிருந்து கிடைக்கும் உரிமைக் கட்டணங்கள், உரிமங்கள் முதலியவற்றில் ஒரு பங்கு என்ற வடிவத்தில் மிகை மதிப்பில் ஒரு பங்கை எதிர்பார்க்கின்றன.

பன்னாட்டுக் குழுமங்கள் மூன்றாம் உலக நாடுகளல் முதலீடு செய்வதற்கு மற்றொரு காரணமும் உண்டு. இவ்வாய்ப்பைப் பயன் படுத்திச் சுற்றுப்புறச் சூழல்களைக் களங்கப் படுதத் நச்சுமயமாக்கும சில தொழில்களை (எடுத்துக் காட்டாக செயற்கை நூல்/துணி ஆலைகள், பிளாஸ்டிக் தொழில், தோல் பதனிடும தொழில், இரசாயன உரத் தொழில், சிமெண்ட் போன்றவை) உலகின் "தெற்கு" பகுதிகளுக்கு மாற்றப்பட்டு விடுகின்றன. சுற்றுப்புறங்கள் களங்கமடைவதைத் தடுப்பதற்கான பாதுகாப்பு நடவடிக்கைகளை அந்தந்தத் தொழிற்சாலை

படிப்பகம்

www.padippakam.com



களே மேற்கொள்ளவேண்டும் என்று ஏகாதிபத்திய நாடுகளில் அரசாங்கங்கள் சட்டமியற்றியுள்ளன. ஆனால் பாதுகாப்பு நடவடிக்கைகளால் ஏற்படும் செலவை ஏற்றுக்கொள்ளாத பன்னாட்டுக் குழுமங்கள் இத்தொழில்களை மூன்றாம் உலக நாடுகளுக்குத் தள்ளிவிடுகின்றன. காலனியத்தின் கீழும் புதுக் காலனியத்தின் துவக்க காலத்திலும் நேரடியான வெளிநாட்டு முதலீடு என்பது பெருந்தோட்டத்துறை (தேயிலை, காப்பி, இரப்பர், கோகோ போன்றவை), சுரங்கங்கள், மூலப்பொருட்கள் தயாரிக்கும் துறைகள் ரயில்வே, மின்சாரம் போன்றவற்றில் குவிந்து இருந்தது. ஆனால், பின்னரோ பொருளுற்பத்தித் துறையில் குவியத் தொடங்கியது. புதுக்காலனியத்தின் கீழ் மூன்றாம் உலக நாடுகளில் செயற்கை நூலாலைகள், நூற்பு-நெசவு ஆலைகள், (உதிரி உறுப்புகளைச் சேர்த்து உருவாக்கப்படும்) மோட்டார் வாகனத் தொழிற்சாலைகள், பெட்ரோ-கெமிக்கல் தொழிற்சாலைகள் மின்னணுக் கருவி உற்பத்தி, ஏற்றுமதிக்காக உணவுப் பொருட்களைப் பதப்படுத்தும் சிறுரகத் தொழில்கள், கனரக எந்திரங்கள் உற்பத்தி முதலியன ஏராளமாகத் தோன்றியுள்ளன. இதற்கேற்றாற்போல் இந்த நாடுகளில் தொழில் துறைப் பாட்டாளி வர்க்கத்தின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது. மூன்றாம் உலக நாடுகளில் ஏற்பட்டுள்ள கணிசமான அளவு தொழில் மயமாக்கல் (சார்புத்தன்மை வாய்ந்தது) மரபு வழிப்பட்ட மார்க்சிய ஆய்வுகளால் சரியாகப் புரிந்து கொள்ளப்படவில்லை; மாறாக இந்த ஆய்வுகள் காலனியத்தின்கீழ் தொழில் வளர்ச்சி எவ்வாறு சாத்தியமற்றிருந்ததோ அவ்வாறே நேரடிக் காலனியம் இல்லாத காலத்திலும் இருக்கும் எனத் தவறாகக் கருதுகின்றன.

மூன்றாம் உலக நாடுகளில் இத்தகைய முறையில் ஏற்பட்டுள்ள தொழில் வளர்ச்சியால் ஏற்பட்டுள்ள விளைவுகள் யாவை? முதல் விளைவு, உலக முதலாளிய அமைப்புக்குள் மூன்றாம் உலக நாடுகளுக்குக் கிடைத்துள்ள மாறுதலான பாத்திரம். ஏகாதிபத்திய நாட்டிற்கு வேண்டிய மூலப்பொருட்களை வழங்கி அந்நாட்டு உற்பத்திப் பொருட்களை வாங்கிக் கொண்ட வேளாண்மைப் பின்னிலம்/சந்தை என்ற நிலையிலிருந்து முதலாளிய உலகச் சந்தைக்கு நிறை மற்றும் பண்டங்களை வழங்கும் விவசாயத்தொழில் உற்பத்திப் பொருட்களின் ஏற்றுமதி மேடையாக மாறியது. இரண்டாவது விளைவு, உலக முதலாளிய அமைப்புக்குள் மூன்றாம் உலக நாட்டுப் பொருளாதாரங்கள் ஏகாதிபத்திய நாட்டுப் பொருளாதாரங்களுடன் மேலும் இறுக்கமாக இன்னும் சொல்லப் போனால் முழுமையாக ஒன்றிணைக்கப்படுதலும், இதன் காரணமாக சுயமான சுதந்திரமான முதலாளிய வளர்ச்சிக்கான எந்தவொரு சாத்தியப் பாட்டையும் முற்றாக மறுத்தலும் ஆகும். ஏகாதிபத்திய நாடுகளில் காணப்படுவது போன்ற சுயமான, தன் சொந்தக் காலில் நிற்கின்ற இயல்பான முதலாளிய வளர்ச்சியில், நுகர் பொருட்களை உற்பத்தி செய்யும் சாதனங்களின் உற்பத்திக்கும் நுகர் பொருள் உற்பத்திக்கும் உள்ள உறவு உள்நாட்டுத் தேவையால் தீர்மானிக்கப்படுகிறது. ஆனால் மூன்றாம் உலக நாடுகளில் இவ்வுறவு வெளிநாட்டுத் தேவைகளால் தீர்மானிக்கப்படுகிறது. அதாவது மூன்றாம் உலக நாட்டுப் பொருளாதாரத்தின் வளர்ச்சிக்கான தூண்டுதல் வெளிநாடுகளிலிருந்தே வருகின்றது. உற்பத்தித் தொடர்பான முடிவுகள் வெளிநாடுகளில் உருவாக்கப்படுகின்றனவேயன்றி உள்நாட்டுச் சந்தையின் எல்லைகளுக்குள் அல்ல. மூன்றாம் உலக நாட்டு முதலாளியம் ஏற்றுமதிக்காகவே முதன்மையாக உற்பத்தி செய்யத் தொடங்குகிறதேயன்றி உள்நாட்டுச் சந்தைக்காக அல்ல. அதே வேளையில் உள்நாட்டில் நுகரப்படுபவற்றில் பல வெளிநாட்டில் தயாரிக்கப்படுபவை. இது காலனியத்தின் கீழும் காணப்பட்ட போக்காக இருக்கலாம். ஆனால் புதிய விடயம் என்னவெனில் மூன்றாம் உலக நாட்டில் எந்தவொரு முதலாளிய வளர்ச்சியும் தவிர்க்க முடியாதபடி ஒரு புதுக் காலனிய சார்புத் தன்மையை கொண்டிருக்க முடியும், அந்த அளவுக்கு மூலதனம் அனைத்துலக மயமாக்கப்பட்டுள்ளது; மையப்பட்டுள்ளது; ஒன்று குவிந்

படிப்பகம்

www.padippakam.com



துள்ளது. அதாவது உலக முதலாளிய அமைப்புடன் நெருக்கமாக ஒன்றிணைக்கப் பட்டுள்ளது. சுதந்திரமான ''தேசிய'' முதலாளியம் என்பது இப்போது மூன்றாம் உலக நாடுகளை அநேகமாக எதிலும் இல்லை.

இதன் பொருள், மூன்றாம் உலக நாடுகளின் தேச சுதந்திரமும் இறைமையும் பெருமளவு பறிக்கப்படுகிறது என்பதாகும். உள்நாட்டு முதலாளி வர்க்கத்தின் புதிய தேவைகள் அவற்றின் அரசாங்கங்களின் பொருளாதாரக் கொள்கைகளில் எதிரொலிக்கப்படுகின்றன. இந்த நாடுகளின் பொருளாதாரத்தில் உள்நாட்டுச் சேமிப்பு அளவு குறைவாகவே உள்ளது. காரணம் மக்களின் வறுமை அதிகமாக உள்ளது. எனவே உள்நாட்டு ஊற்றுக்கண் களிலிருந்து முதலீட்டுக்கான மூலதனத்தைத் திரட்டுவது என்பது குறைவாகவே உள்ளது. எனவே வெளிநாடுகளிலிருந்து பெறப்படுகின்ற கடன்களையும் 'உதவி'களையும் கொண்டு வெளிநாட்டு முதலீட்டுக்குத் தேவையான நிலைமைகளை இங்கு உருவாக்க வேண்டியுள்ளது. அதாவது இந்த நாடுகள் தொடர்ந்து முதலாளிய வளர்ச்சியை மேற்கொள்வதற்கான ஒரே வழியப்பு அனைத்துலக முற்றுரிமை மூலதனத்துடன் பெருமளவு சார்ந்து நிற்பதும், அதற்குக் கீழ்ப்படிவதும், அதனுடன் ஒத்துழைப்பதும்தான்.

ஏகாதிபத்திய நாட்டு முதலாளி வர்க்கத்துடன் சரிசமமற்ற கூட்டை மேற்கொள்ளுமாறு உள்நாட்டு முதலாளி வர்க்கத்தைத் தூண்டுகின்ற மற்றொரு காரணியும் உண்டு. அதாவது இந்த நாடுகள் தொழில் மயமாக்கப்படுவதன் காரணமாகப் பாட்டாளி வர்க்கம் விரைவாக வளர்ச்சி பெற்று வர்க்கப் போராட்டம் கடுமையாகிறது. லெனின் கூறினார்: "முதலாளி வர்க்கமானது புரட்சிகரப் பாட்டாளி வர்க்கத்தை எதிர்த்து நிற்க நேருகையில், சுதந்திரம், தாய்நாடு, மொழி, தேசம் ஆகியவற்றின் நலன்களை காட்டிக் கொடுத்துள்ளது என்பதைப் பாட்டாளிகளாகிய நாம் ஏராளமான முறை பார்த்துள்ளோம்"

தற்போதைய புதுக்காலனியக் காலகட்டத்தில் மிகவுயர்ந்த அளவுக்கு மூலதனம் அனைத்துலக மயமாக்கப்பட்டு, ஒன்று குவிக்கப்பட்டு உலக முதலாளிய அமைப்பு மிக நெருக்கமாக அமைக்கப்பட்டிருக்கும் சூழலில், சுதந்திரமான தேசிய முதலாளிய ஆளும் வர்க்கம் என்பது ஏதும் இருக்க முடியாது. இடைநிலை (middle) முதலாளியப் பிரிவுகளை, ஆட்சி செய்யாத முதலாளியப் பிரிவுகளை வேண்டுமானால் தேசிய முதலாளி வர்க்கம் என்று கூறலாம். தேசிய நலன்களை உண்மையாகவே முகவாண்மை செய்கின்றதும் தேசிய விடுதலைக்காகவே உண்மையாக நிற்கிறதுமான ஆளும் முதலாளி வர்க்கம் ஏதும் இருக்கமுடியாது.

இதன் பொருள் மூன்றாம் உலக நாட்டு முதலாளி வர்க்கத்திற்கும் ஏகாதிபத்திய நாடுகளிலுள்ள அவர்களது ஆண்டைகளுக்கும் இடையில் எந்த ஒரு முரண்பாடும் இல்லை என்பதல்ல. உண்மையில் மூன்றாம் உலக நாடுகளிலுள்ள உழைக்கும் மக்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட மிகை மதிப்பை மறு பங்கீடு செய்வதற்கு இவர்களிடையே ஒரு போட்டி நிலவுகிறது. இந்தப் போட்டியின் கடுமை நாட்டுக்கு நாடு, பகுதிக்குப் பகுதி வேறுபடுகிறது. இவ்வேறுபாட்டுக்குக் காரணம் அந்தந்த நாட்டிலும், பகுதியிலும் ஏற்பட்டுள்ள முதலாளிய வளர்ச்சியின் அளவு, அவ்வளர்ச்சியின் குறிப்பிட்ட தன்மைகள், உலக முதலாளிய அமைப்பில் ஒன்றிணைக்கப்பட்ட குறிப்பிட்ட நாட்டு முதலாளி வர்க்கத்தின் வரையறுக்கப்பட்ட சுதந்திரத்தின அளவு, ஒரு குறிப்பிட்ட நாடு அல்லது உலகப் பகுதி முழுவதிலுமுள்ள வர்க்கச் சக்திகளின் சமநிலை இரண்டு ஏகாதிபத்திய முகாம்களுக்கிடையேயுள்ள முரண்பாட்டைப்பயன்படுத்தி பேரம் பேசுவதில் உள்நாட்டுத்தரகு அதிகார வர்க்க முதலாளி வர்க்கத்துக்குள்ள ஆற்றல் ஆகியவை ஆகும். (மிகவலுவானதும் பரந்ததுமான ஓர் பொருளாதார அடித்தளத்தைக் கொண்ட சோவியத் யூனியன் 1960களில் சமூக-ஏகாதிபத்தியமாக மாறியதும் அமெரிக்காவைத் தலைமையாகக் கொண்ட ஏகாதிபத்தியத்துடன் உலகைச் சுரண்டவும், தன் மேலாண்மையை நிறுவவும் அது மேற்கொண்ட போட்டி முயற்சிகளும், மூன்றாம் உலக நாடுகள சிலவற்றிலுள்ள (குறிப்பாக

படிப்பகம்

www.padippakam.com



இந்தியா போன்ற விரிந்த சந்தையும், வளங்களுமுள்ள) தரகு-அதிகார வர்க்க முதலாளிகளின பேரம் பேசும் ஆற்றலை அதிகரித்தன. அமெரிக்காவின் தலைமையிலுள்ள ஏகாதிபத்திய முகாமை ஒப்பிடுகையில் சோவியத் சமூக ஏகாதிபத்தியம் பொருளாதாரத்தில்-குறிப்பாக தொழில் நுணுக்கத்தில் வலுக் குன்றியதாக இருந்தாலும இராணுவ வலிமை மிகுந்ததாக இருந்தது. அது மூன்றாம் உலகநாடுகளில அதிகாரவர்க்க முதலாளியத்தை வலுப்படுத்துவதிலேயே அக்கறை செலுத்தியது. அது மூனறாம் உலக நாடுகளுக்கு வழங்கும் கடன்கள், ''உதவிகள்'' அங்கு நிறைவேற்றும் ''திட்டங்கள்'' முதலியன பிற ஏகாதிபததியச் சுரண்டல் முறையிலிருந்து எவ்வகையிலும் மாறுபடவில்லை. அது மூன்றாம் உலக நாடுகளுடன் நடத்தும் வாணிபமும் கூட ஏற்றத் தாழ்வான பரிமாற்றத்தையே அடிப்படையாகக் கொண்டிருந்தது. தனது பொருளாதாரத்தை இராணுவமயமாக்கல் என்பதில் பிற ஏகாதிபத்தியங்களுடன் கடும் போட்டியில் இறங்கியது) மேலே குறிப்பிட்ட இம் முரண்பாடு ஒரு வர்க்கத்துக்குள்ளேயே உள்ள முரண்பாடாகவே பார்க்கப்பட வேண்டுமேயொழிய வெவ்வேறு வர்க்கங்களுக்கு இடையிலுள்ள முரண்பாடாக அல்ல. எனவே மூன்றாம் உலக நாட்டிலுள்ள ஆளும் முதலாளி வர்க்கம் (எந்தவொரு பொருளிலும்) ஒடுக்கப்படும் வர்க்கமாகவோ அல்லது சுரண்டபபடும் வர்க்கமாகவோ கருதப்படக்கூடாது. இது வர்க்கப போராட்டமல்ல. மாறாக வர்ககத்துக்குள்ளேயே நடக்கும் போட்டியாகும். இதில் ஓங்கி நிற்கும் போக்கு சமரசமேஆகும். இதற்கு மாறாக ஓர் புறம் ஏகாதிபத்தியம், சமூக-ஏகாதிபத்தியம், மூன்றாம் உலக நாட்டு ஆளும் முதலாளி வர்க்கங்கள் ஆகியோருக்கும் மற்றோர் புறம் மூன்றாம் உலக நாட்டு உழைக்கும் மக்களுக்கும் இடையேயுள்ள முரண்பாடு பகைத்தன்மையுள்ளதாகும். இந்த முரண்பாடுதான் மூன்றாம் உலக நாட்டு சமூக-பொருளாதார உருவாக்கங்களின் வளர்ச்சியின் திசையை இனறு தீர்மானிக்கின்ற முதன்மையான முரண்பாடாகும்.

அதாவது ஒரு புறம் தரகு-அதிகார வர்க்க முற்றுரிமை மூலதனத்திற்கும், மற்றொரு புறம உழவர் வர்க்கத்துடனும நகர்ப்புற வறியவர்களுடனும் ஒன்றிணைகின்ற மூன்றாம் உலக நாட்டுப் பாட்டாளி வர்க்கத்திற்குமிடையிலான முரண்பாடு ஒடுக்கப்படுவோருக்குச் சார்பாகத் தீர்க்கப்படுமேயானால் அத்தீர்வு மூன்றாம் உலக நாட்டுப் பொருளாதாரங்களின் புதுக் காலனியச் சார்புத்தன்மையின் மூலவேரையே அடிதகர்த்துக் தகர்க்கும். தற்காலத்தில் புதுக்காலனிய ஊடுருவலை எந்தவொரு மூன்றாம் உலக நாட்டாலும் குறிப்பிடத்தக்க அளவுக்கு தடுத்து நிறுத்த முடியாது. முதலாளிய உலகச் சந்தையில் ஏகாதிபத்திய நாட்டு முதலாளி வர்க்கத்துடன் எந்தவொரு நீடித்த போட்டியிலும் மூன்றாம் உலக நாட்டு முதலாளி வர்க்கத்தால் வெற்றி பெற முடியாது. இதற்குக் காரணம் ஏகாதிபத்திய நாட்டு முதலாளி வர்க்கத்திடம் உள்ள மேம்பட்ட பொருளாதாரமும், தொழில் நுணுக்கமும், நிதி வசதியும் ஆகும். மேலும் ஏகாதிபத்திய நாட்டு முதலாளியத்தின் மிகவுயர்ந்த முற்றுரிமைத் தன்மை மேன்மேலும் வலுப்பட்டு வருவதானது முதலாளிய உலகச் சந்தையில் அதற்குள்ள மேலாண்மையை உறுதிப்படுத்துகிறது. உலக முதலாளிய அமைப்பிலிருந்து உடைத்துக் கொண்டு வெளியேறாமல் எந்தவொரு மூன்றாம் உலக நாட்டுப் பொருளாதாரத்தாலும் முதலாளிய உலகச் சந்தையில் நடைபெற்று வரும் சரிநிகரற்ற பரிமாற்றம் என்ற செயல்பாட்டிலிருந்து தன்னைக் காத்துக் கொள்ள முடியாது. உள் நாட்டில் உலவுகினற முதலாளிய உற்பத்தி உறவுகளின் காரணமாக புதுக் காலனியச் சார்புத் தன்மை தவிர்க்க முடியாததாகையால் ஒரு சுதந்திரமான பொருளாதார வளர்ச்சிஎனபது, அதாவது உலக முதலாளிய அமைப்பிலிருந்து வெளியேறுவது என்பது குறிப்பிட்ட மூன்றாம் உலக நாட்டின் முழுப் பொருளாதாரக் கட்டமைப்பில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்துவதன் மூலமே ஏற்படும். ஆளும் தரகு முதலாளி வர்க்கத்தின் வெவ்வேறு பிரிவுகளின் நலன்களை முகவாண்மை செய்யும் எந்தொரு முதலாளிய அரசியல் கட்சியாலும் அல்லது அரசியல் அமைப்

படிப்பகம்

www.padippakam.com



பாலும் இத்தகைய மாற்றத்தை கொண்டு வர முடியாது என்பது தெளிவு. ஓர் கட்சிக்குப் பதிலாக மற்றொரு கட்சி அரசாங்கத்தை ஆள்வதனாலும் இம்மாற்றத்தை ஏற்படுத்த முடியாது. அரசியல் கட்சிகளின் தலைவர்களில் ஒருவருக்குப் பதிலாக மற்றொருவர் வந்தாலும் இது கைகூடாது. முதலாளியக் கட்டமைப்புக்குள் செயல்படுகின்ற எந்தவொரு அரசியல் அமைப்பும் ஏன் ஒரு இடதுசாரி அரசாங்கமும்கூட, முதலாளிய உறவுகள் மறு உற்பத்தி செய்யப்படுவதையோ, புதுக்காலனியச் சார்புத்தன்மை அதிகரிப்பதையோ தவிர்க்க முடியாது. அற்பச் சீர்திருத்தங்கள் மூலம் நிலவுகின்ற சமூகப் பொருளாதாரக் கட்டமைப்புக்களை மாற்ற முயற்சிக்கும் ஒரு இடதுசாரிக் கட்சியின் முயற்சிகள் அனைத்தும் இக்கட்டமைப்புக்களை வலுப்படுத்துவதிலேயே போய் முடியும். ஓரளவுக்கு முற்போக்குத் தன்மை கொண்ட சீர்திருத்தங்களைக் கொண்டு வர முயற்சித்தாலோ அந்த அரசாங்கம் முதலாளி வர்க்கத்தின் ஒடுக்குமுறைக் கருவியால் மிகக் கொடூரமாக நசுக்கப்பட்டுவிடும். இதற்கு எடுத்துக்காட்டு சிலி. இப்போது நிலவுகின்ற சமூக பொருளாதாரக் கட்டமைப்புக்களைச் சிறிது சிறிதாகச் சீர்திருத்த முடியாது. அதன் ஓட்டை உடைசல்களை கொஞ்சம் கொஞ்சமாக அடைத்துவிடமுடியாது. மாறாக அவை ஒரு புரட்சிகரமான வழியில் உடைத்து நொறுக்கப்பட வேண்டும். அதாவது இக்கால கட்டத்தில் தேசிய சுதந்திரத்தை மீட்பதும் அதை வலுப்படுத்துவதும் ஒரு ஏகாதிபத்திய எதிர்ப்பு மற்றும் நிலக்கிழமை எதிர்ப்பும் போராட்டத்தின் மூலமே—சோசலிசப் பொருளாதாரத்திற்கு வழிகோலுகின்ற புதிய குடியாட்சிப் (சனநாயக) புரட்சி மூலமே — கைகூடும்.

## புதுக்காலனியமும் முதலாளியத்துக்கு முந்திய கட்டுஉறவுகளும்

மூன்றாம் உலக நாடுகள் உலக முதலாளிய அமைப்பில் மேன்மேலும் ஒன்றிணைக்கப்படுவதன் காரணமாக அவற்றின் பொருளாதாரத்திலுள்ள முதலாளியத்திற்கு முந்தைய கட்டத்துறைகள் (Pre Capilist) வீழ்ச்சியடைகின்றன. காலனியமும், துவக்க கால புதுக் காலனியமும் முதலாளியத்திற்கு முந்தைய உறவுகளைப் பாதுகாத்துப் பயன்படுத்திக் கொண்டன. ஆனால், இன்றைய புதுக்காலனியம் அவ்வுறவுகளை மிக வேகமாக உடைத்து நொறுக்குகிறது. முதலாளியத்திற்கு முந்தைய உறவுகள் தொடர்ந்து நீடித்து வந்த போதிலும் முதலாளிய உற்பத்திமுறையின் மேலாண்மையே இங்கு நிலவுகிறது. நிலக்கிழமை கட்டமைப்புக்குள்ளமுதன்மைப் பாத்திரம் அழிந்துவிட்டது. பொருளாதாரத்தில் அவற்றின் பங்கு மிகவும் குறைந்து விட்டது. வடிவத்தில் நிலக்கிழமையாகவும் உள்ளடக்கத்தில் முதலாளியமாகவும் உள்ள உறவுகள் தோன்றியுள்ளன. வேளாண்மைத் துறைகள்கூட முதலாளிய உலகச் சந்தையில் ஒன்றிணைக்கப்பட்டுள்ளது. நிலம், உலகச் சந்தைக்கான பொருள்களை உற்பத்தி செய்வதற்காகப் பயன்படுத்தப்படுவது அதிகரித்து வருகிறது. ஓர் புறம், சரக்கு உற்பத்தி மேலோங்கிவர, கிராமப்புறங்களில் சிறு நில மற்றும் விளிம்பு நிலை உழவர்கள் நிலமற்ற கூலி உழைப்பாளர்களாக மாற்றப்படும் போக்கு அதிகரித்து வருகிறது. வேளாண்மைத் துறையிலும் முதலாளிய உற்பத்தி உறவுகள் விரிவடைவதும் அதுவே மேலோங்கிய உற்பத்தி உறவாக மாறிக் கொண்டிருப்பதுமான போக்கு காணப்படுகிறது. வேளாண்மைத் துறையில் இடுபொருள் மற்றும் விளைபொருள்களுக்கான சந்தைகள் ஆகிய இரண்டையும் பொறுத்தவரை புதுக்காலனியத் தன்மையே காணப்படுகிறது. பசுமைப் புரட்சியால் உருவாக்கப்பட்ட வேளாண்மை உற்பத்தி முறைக்குத் தேவையான இடுபொருள்கள், ஒன்று ஏகாதிபத்திய நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்றன அல்லது

www.padippakam.com



ஏகாதிபத்திய நாடுகளின் மூலதன உதவியுடன் நிறுவப்படும் தொழிற்சாலைகளால் உருவாக்கப்படுகின்றன. மற்றொருபுறம் வேளாண்மை உற்பத்திப் பொருள்களான பழவகைகள், காய்கறிகள், சர்க்கரை, எண்ணெய், புகையிலை, மஞ்சள் போன்றவையும் கைவினைப் பொருட்களும் அதிகரித்த அளவில் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. பன்னாட்டுக் குழுமங்கள், உலக வங்கி, ஐ.எம்.எப். போன்றவற்றின் ஊடுருவல் மீன்வளத்துறை, வனத்துறை போன்றவற்றிலும் போக்குவரத்துத் துறை, நீர்ப்பாசனம், மின்சாரம், நகர மேம்பாடு, சேவைத் துறைகள் போன்றவற்றிலும் அதிகரித்த அளவில் ஏற்பட்டு வருகிறது. ஏகாதிபத்தியங்களுக்கு இப்போது நேரடியான அரசியல் ஆட்சி தேவைப்படாததன் காரணமாக நிலக்கிழமைச் சக்திகளிடமிருந்து தனக்கு வேண்டிய அரசியல் அடிப்படைக்கான ஆதரவு என்பது ஏகாதிபத்தியத்தைப் பொறுத்தவரை தேவையற்றதாகிறது. ஆனால், முதலாளிய உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சி என்பது "மேலிருந்து" தூண்டி விடப்படுவதன் காரணமாக, புதுக் காலனிகளில் மேற்கு நாடுகளில் காணப்பட்டதைப் போன்ற இயல்பான, சீரான, நாடு தழுவிய நிலக்கிழமையை முற்றிலுமாகத் தகர்த்த முதலாளியத் தொழில் மயமாக்கல் நடைபெறுவதில்லை. கட்டமைப்புச் சீர்குலைவுகள் உருவாக்கப்படுவதுடன் ஆங்காங்கே நிலக்கிழமை எச்சங்கள் துடைத்தெறியாமல் விட்டு வைக்கப்படுகின்றன.

## குறை வளர்ச்சியின் வளர்ச்சி

வெளிநாட்டு மூலதனத்துடன் கூட்டுச் சேர்ந்து முதலாளிய வளர்ச்சியை உருவாக்க முயற்சிப்பது என்பது மூன்றாம் உலக நாடுகளின் சார்புத் தன்மையை அதிகரிப்பது மட்டுமல்லாமல் சமச்சீரற்ற பரிமாற்றத்தையும் (unequal exchange) புதிய வடிவங்களில் வலுப்படுத்தவும் செய்கிறது. இதன் காரணமாக இந்த நாடுகளின் குறைவளர்ச்சி நிலை (under development) மேலும் மோசமடைகிறது. குறைவளர்ச்சி என்பது இடைவிடாது தொடரும் நிகழ்வாகும். இந்த நிகழ்வு காலனியக் காலகட்டத்தில் மூன்றாம் உலக நாட்டுப் பொருளாதாரங்கள், முதலாளிய உலகப் பொருளாதாரத்தின் பின்னிணைப்பாக்கப்பட்டதன் விளைவாகத் தோன்றியதாகும். சார்புத் தன்மையின் செயல்பாடே, குறைவளர்ச்சியை இடைவிடாது ஏற்படுத்திக் கொண்டிருப்பதுதான். முதலாளிய உலக அமைப்பை ஏகாதிபத்திய நாடு என்றும் மூன்றாம் உலக நாடென்றும் பிரிப்பது அந்தந்த நாட்டில் நிலவும் முதலாளிய வளர்ச்சியின் அளவைக் கொண்டு மட்டுமல்லாமல் இந்த முதலாளிய உலக அமைப்பில் ஒவ்வொன்றும் எத்தகைய செயல்பாட்டை மேற்கொள்கிறது என்பதைப் பொறுத்துமாகும். இவற்றின் செயல்பாடுகளை உலக அளவில் மூலதனத் திரட்டல் என்ற இயக்கப் போக்கிலேயே புரிந்து கொள்ளமுடியும். மூலதனத் திரட்டல் என்பது சீரான அல்லது சரி நிகரான முறைகளில் நடைபெறுவதில்லை. முதலாளிய உற்பத்தி முறையின் உயிர் நாடி, மூலதனத் திரட்டல் தான் என்பதைச் சுட்டிக்காட்டிய மார்க்ஸ், முதலாளியச் சமுதாயத்தின் ஒரு முனையில் செல்வம் திரட்டப்படுவதானது மற்றொரு முனையில் வறுமையையும் துயரத்தையும் உருவாக்குகிறது என்றார். இப்போக்கு இன்று உலக அளவில் நடைபெற்று வருகிறது. ஏகாதிபத்திய நாடுகளில் மூலதனம் திரண்டு வருகையில் மூன்றாம் உலக நாடுகளில் உழைக்கும் மக்கள் உருவாக்கும் மிகை மதிப்பு அந்தந்த நாடுகளிலேயே தக்க வைத்துக் கொள்ளப்படுவதில்லை. மாறாக அவர்களது தேச எல்லைக்கப்பாலுள்ள ஆற்றல்களால் உறிஞ்சப்பட்டு அமெரிக்கா, மேற்கு ஐரோப்பா, ஜப்பான், சோவியத் யூனியன் போன்ற நாடுகளில் மூலதனமாகத் திரட்டப்படுகிறது. இந்த நிகழ்ச்சிப் போக்கு தான் மூன்றாம் உலக நாடுகளின் குறைவளர்ச்சிக்கும் காரணமாகிறது. எனவே மூன்றாம் உலக நாடுகளை, வளர்ந்து வரும் நாடுகள் என்று கூறுவது பொருத்தமற்றது. உலக முதலாளிய அமைப்பிலுள்ள நாடுகளை

படிப்பகம்

www.padippakam.com



வரிசையாக நிற்கவைத்து அதில் ஏகாதிபத்திய நாடுகளை ஏற்கனவே வளர்ச்சி அடைந்த நாடுகளென்றும் ஏனைய நாடுகளை வளர்ச்சி குன்றிய (ஆனால் அடிப்படையில் அதே முதலாளிய வளர்ச்சிப் பாதையில் சென்று கொண்டிருக்கின்ற) நாடுகளென்றும் சித்தரிப்பது பொருத்தமானதல்ல. முதலாளிய வளர்ச்சிக்கான முன்மாதிரி பிரிட்டன் என்றும் அதைப் பின்பற்றும் கட்டாயம் மற்ற எல்லா நாடுகளுக்கும் நேரிடுமென்றும் மார்க்ஸ் கருதினார். முதலாளியத்தின் முற்றுரிமைக் கட்டத்திற்கு முன்பு வாழ்ந்த மார்க்சால் சமச்சீரற்ற வளர்ச்சி பற்றிய கருத்தாக்கத்தை உருவாக்க முடியவில்லை. ஏகாதிபத்தியத்தைப் பற்றிச் சரியாக ஆய்வு செய்து காலனி, அரைக் காலனி நாடுகளில் ஏற்பட்டு வந்த முதலாளிய வளர்ச்சியை லெனின் சுட்டிக் காட்டினாலும் முதல் உலகப் போரானது காலனிகளை அவற்றின் பிற்பட்ட தன்மையிலிருந்து உலுக்கி எடுத்து முதலாளிய வளர்ச்சியில் அவற்றைப் பொதுவான "ஐரோப்பிய வழிகளில்" செலுத்தும் என்ற அவரது கருத்துக்குச் சற்று மாறுபட்ட வழியில் வளர்ச்சிகள் ஏற்பட்டுள்ளன.

உண்மையில் ஐரோப்பா மற்றும் இதர ஏகாதிபத்திய நாடுகளின் வளர்ச்சிக்கு எரிபொருளாக இருந்த அதே வரலாற்றுப் போக்குகள்தாம் மூன்றாம் உலக நாடுகள் "ஐரோப்பிய வழிகளில்" முதலாளிய வளர்ச்சி அடைவதைத் தடுத்துக் கொண்டிருக்கின்றன.

உலக வரலாற்றுப் போக்கு என்பது எல்லா நாடுகளும் ஒன்றை ஒன்று நகல் செய்து தவிர்க்கவியலாதபடி ஒரே வளர்ச்சிக் கட்டங்களில் ஒரே வரிசைக் கிரமப்படி செல்வதல்ல. வரலாற்று வளர்ச்சி சீரான நேர்கோட்டில் செல்கிறது என்ற இறுக்கமான யாந்திரிகச் சிந்தனையையும் அதே போல புரட்சிக்கு முந்திய அரைக்காலனி-அரை நிலக்கிழமைச் சீனா போன்ற நாடுகளின் சமூகப் பொருளாதார நிலைமைகளை முன்மாதிரியாகக் கொண்டு இன்றைய பின்தங்கிய நாடுகளைப் பார்ப்பதையும் கைவிட்டால்தான் மூன்றாம் உலக நாடுகளிலுள்ள இன்றைய சார்புத் தரகு முதலாளிய உற்பத்தி முறையின் அல்லது ஒட்டுமொத்தமான பொருளாதாரத்தின் குறிப்பிட்ட தன்மைகளைப் புரிந்து கொள்ள முடியும்.

## பொருளாதாரச் சுரண்டலும் அரசியல் அடிமைத்தனமும்

மூன்றாம் உலக நாடுகள் பழைய காலனி ஆட்சியின்கீழ் இருந்ததைப் போல மூலப் பொருட்களை மட்டுமே உற்பத்தி செய்பவையாக இப்போது இல்லை என்றாலும் அவற்றின் பொருளாதாரங்கள் பெருமளவு இன்னும் வெளி நாட்டு வாணிபத்தையே சார்ந்துள்ளன. அவற்றின் வெளிநாட்டு வாணிப முறைகள் முதலாளிய உலகச் சந்தை என்ற வலையில் அவை சிக்கிக் கொண்டிருப்பதையே காட்டுகின்றன. இக் கட்டுக்கோப்புக்குள் சில புதுக்காலனிய நாடுகள் முகாமையான வாணிப மையங்களாக உருவாகியுள்ளன. தம்மை விடவும் வளர்ச்சியில் பின்தங்கிய நாடுகளில் இவை சந்தைகள் பிடிக்கின்றன; தொழில்களையும் நிறுவுகின்றன. ஆனால் ஏற்றத்தாழ்வான பரிமாற்றம் (ஏகாதிபத்திய நாடுகளுக்கு நன்மை பயக்கின்ற வணிக நெறிகள், வெளிநாட்டுச் செலாவணிப் பற்றாக்குறை முதலியன) ஏகாதிபத்திய நாடுகளால் மிகை மதிப்பு உறிஞ்சப்படுவதற்கும் ஒடுக்கப்படும் நாட்டின் குறை வளர்ச்சிக்குமான முக்கிய உத்தியாகச் செயல்படுகின்றது. வெளிநாட்டு வாணிபத்தில் துண்டு விழுவதைச் சரிக்கட்டுவதற்காக ஆளும் முதலாளி வர்க்கங்கள் வெளிநாட்டுக் கடன்களையும் உதவியையும் நாடுவது அதிகரித்து வருகிறது. ஐ எம்.எப். (IMF), ஐ.பி.ஆர்.டி (IBRD), எய்ட் இண்டியா கான்சோர்டியம் (Aid India Consortium) போன்ற அனைத்துலக நிதி நிறுவனங்கள்

படிப்பகம்

www.padippakam.com



அமெரிக்கா, மேற்கு ஜெர்மனி, ஜப்பான் போன்ற நாடுகளுமே கடன்களில் பெரும்பாலானவற்றை வழங்குகின்றன. 3—5 ஆண்டுகளில் அடைக்கப்பட வேண்டிய இக் குறுகிய காலக் கடன்களுக்கு ஆண்டுக்கு 8%—12% வரை வட்டி அளவு தீர்மானிக்கப்படுகிறது. வெளிநாட்டுக் கடன்கள் மலைபோல் குவிந்து வருவதானது மூன்றாம் உலக நாட்டுப் பொருளாதாரங்களின் நிலையான கூறாகி வருகின்றது. ஏற்றுமதி வருமானத்தின் பெரும் பகுதி வாங்கிய கடனுக்கு வட்டி கொடுப்பதற்காகவே பயன்படுத்தப்படும் நிலைமை இருப்பதுடன், வட்டி கொடுப்பதற்காகவே புதிய கடன்களை வாங்க வேண்டிய கட்டாயமும் ஏற்படுகிறது. அது மட்டுமல்லாமல் வாங்கப்படுகின்ற கடன்கள் உள் நாட்டு வளர்ச்சிக்காகவும் தொழில் வளர்ச்சிக்காகவும் பயன்படுத்தப்படாமல் ஆடம்பரப் பொருட்களை வாங்குவதற்காகவோ அல்லது அப்பொருட்களை உற்பத்தி செய்யும் தொழில்களை வளர்ப்பதற்காகவோ பயன்படுத்தப் படுகின்றன.

பெரும்பாலான கடன்களும் 'உதவி'களும் இரு வகைப்பட்டவை. ஒன்று திட்டத்துடன் பிணைக்கப்பட்டது (Project-tied) அதாவது இன்னின்ன திட்டங்களுக்கு அல்லது இந்தந்தக் காரியங்களுக்கு இன்னின்ன வகையில்தான் பயன்படுத்தப் பட வேண்டும் என்ற விதிகளுடன் வழங்கப்படுவது. இரண்டாவது, மூலாதாரத்துடன் பிணைக்கப்பட்டது (Resource tied) அதாவது எத்தகைய பொருட்கள் வாங்கப்பட வேண்டும். எங்கிருந்து வாங்க வேண்டும், எந்தச் சந்தையில் நிறைபொருட்கள் விற்கப்பட வேண்டும் என விதிகளுடன் வழங்கப்படக் கூடியவை. சோவியத் சமூக-ஏகாதிபத்திய முகாமிலிருந்து வந்த கடன்களும் "உதவி"களும்கூட இத்தகையனவே.

சமூக நலத்திற்காக ஒதுக்கப்படும் நிதியைக் குறைத்தல், உள்நாட்டுப் பணத்தின் மதிப்பைக் குறைத்தல் ஆகியவை, "உதவி" களையும் கடன்களையும் வழங்கும் நாடுகளால் அடிக்கடி திணிக்கப்படும் விதிகளாகும். மூன்றாம் உலக நாடுகளிலுள்ள ஆளும் முதலாளி வர்க்கம் தரகு-முதலாளி வர்க்கம் மட்டுமல்ல; தமது நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தைக் கீழ்மட்டத்திற்குத் தள்ளிவிட்ட ஏகாதிபத்திய நாட்டு ஆண்டைகளிடமிருந்து "கடன்கள்" "உதவிகள்" என்ற பெயரில், சில ரொட்டித் துண்டுகளைப் பெறுவதற்காக அம்மக்களை வறியவர்களாக்கி விட்ட பிச்சைக்கார முதலாளிகளும் ஆவர். தற்போதைய புதுக் காலனியக் காலகட்டத்தில் புதுக் காலனியச் சார்புத் தன்மைக்கும் சுரண்டலுக்குமான முகாமையான உத்தியாக இருப்பது பன்னாட்டுக் குழுமங்கள் என்றோம். மூன்றாம் உலக நாட்டின் ஆளும் முதலாளி வர்க்கத்தின் பொருளாதார வளர்ச்சிக்குத் தேவையான மூலதனத்தை வெளிநாட்டு 'உதவி'யும் வெளிநாட்டு 'முதலீடும்' தரும் என்று சிலர் கூறுகிறார்கள். உண்மை என்னவென்றால் பன்னாட்டுக் குழுமங்களால் கொண்டு வரப்படும் மூலதனங்களைக் காட்டிலும் மிக அதிகமாக ஆதாயங்கள் (Profits), பங்கீட்டுத் தொகைகள், உரிமைத் தொகைகள், தொழில் நுணுக்கக் கட்டணங்கள், உரிமக் கட்டணங்கள் போன்ற வடிவங்களில் வெளி நாடுகளுக்குச் செல்லும் மிகை மதிப்பே மிக அதிகமாகும். அதேபோல் கடன்களுக்காகவும் உதவிக்காகவும் தரப்படும் வட்டி, கடன் தீர்நிதி போன்றவை பெறப்பட்ட உதவியின் அளவைக் காட்டிலும் மிக அதிகம். விற்பனை-வாங்குதலிலும் சுரண்டல்தான். மூன்றாம் உலக நாடுகளில் இறக்குமதி செய்யப்படும் மூலப் பொருட்களுக்கும் இயந்திரங்கள்-கருவிகட்கும் பன்னாட்டுக் குழுமங்களின் தாய் நிறுவனங்கள் மிக உயர்ந்த விலை வைத்து மூன்றாம் உலக நாட்டிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களுக்கு குறைந்த விலை வைக்கின்றன. அது மட்டுமல்லாமல் அகக் கட்டுமானத்தை உருவாக்கித் தருதல், வரிச் சலுகைகள், கடன் வசதிகள், வெளிநாட்டுச் செலாவணிக் கட்டுப்பாட்டைத் தளர்த்துதல் போன்றவற்றின் மூலம் பன்னாட்டுக் குழுமங்களின் சுரண்டலுக்கு மூன்றாம் உலக நாட்டு அரசாங்கங்கள் உதவுகின்றன. இக் காரணிகள் யாவும் உள்நாட்டில் மூலதனத் திரட்சிக்கு மிகப் பெருந் தடையாக உள்ளன என்பது தெளிவு. தேசிய எல்லைகளுக்கப்பால் வேறு நாடுகளால் உறிஞ்சப்படும் இந்த மிகை மதிப்பை தேசிய வளர்ச்சிக்குப் பயன்படுத்தி

படிப்பகம்

www.padippakam.com



யிருக்க முடியும். ஆனால் ஆளும்வர்க்கங்களின் ஆடம்பர நுகர்வுக்காகவும் மிகை மதிப்பு பயன்படுத்தப்படுவதாலும், படைச் செலவுக்காக மிகையான தொகை ஒதுக்கப்படுவதாலும், உள் நாட்டு மூலதனத் திரட்டலும் மறு உற்பத்தியை விரிவுபடுத்தலும் தடைப்படுகின்றன. தொழில் வளர்ச்சி பெருகுவதும் விரைவு படுவதும் தடைப்படுகிறது. ஏற்றுமதி விலைகளில் ஏற்படும் அதிகரிப்பு கூட மூன்றாம் உலக நாட்டுப் பொருளாதாரத்துக்கு நன்மை பயப்பதில்லை. மாறாக முதலீடு செலுத்தியுள்ள வெளி நாட்டுக் குழுமமே உயர் அளவு ஆதாயங்கள், பங்கீட்டுத் தொகைகள், உரிமக் கட்டணங்கள் என்ற வகையில் இப்பயனைக் கைக்கொள்கின்றது. விலைகளும்கூட முற்றுரிமை கொண்ட முதலாளிய உலகச் சந்தையால் கட்டுப்படுத்தப் படுகின்றன.

பன்னாட்டுக் குழுமங்களின் மூலதனத்துடனும் வெளிநாட்டு "உதவி"யுடனும் மூன்றாம் உலக நாட்டுப் பொருளாதாரத்தின் உற்பத்தி ஆற்றல்கள் வளர்க்கப்பட்டாலும் அவை உள் நாட்டு வளர்ச்சித் தேவைகளுக்குப் பொருத்தமற்றவையாக இருக்கின்றன. எடுத்துக்காட்டாக ஏற்றுமதிக்காக பணப் பயிரையோ வேளாண்மை மூலப் பொருளையோ உற்பத்தி செய்யும் பொருட்டு மக்களுக்கு இன்றியமையாத உணவு உற்பத்தி செய்வது புறக்கணிக்கப்படலாம். அன்றாட வாழ்வுக்குத் தேவையான நுகர் பொருள் உற்பத்தி புறக்கணிக்கப்பட்டு ஆடம்பரப் பொருட்களின் உற்பத்திக்கு முதன்மை வழங்கப்படலாம். நிலத்தடியில் உள்ள கரி போன்றவற்றைப் பயன்படுத்தி வெப்ப மின் நிலையங்களைக் கட்டுவதற்குப் பதிலாக வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட இயந்திரங்கள், மூலப் பொருட்களைக் கொண்டு அணுமின் நிலையங்களைக் கட்டலாம். இதற்கெல்லாம் காரணம் மிக உயர்ந்த ஆதாயம் தரும் துறைகளையும், முதலாளிய உலகச் சந்தையுடன் நேரடியாகப் பிணைக்கப்பட்டுள்ள துறைகளையும் தேர்ந்தெடுத்திரும்பது பன்னாட்டு-முற்றுரிமை மூலதனம்தான். உள்நாட்டு மூலதனம் பெரும்பாலும் பகிர்வு, வங்கித் தொழில், காப்புறுதி (Insurence), உதிரிப் பொருட்கள் வழங்குதல், உற்பத்தித் துறையில் இறுதி கட்டமாக ஏற்கனவே 90-95% உற்பத்தி செய்யப்பட்டவற்றை நிறைவு செய்யும் (Finishing) வேலை முதலியவற்றில் மட்டுமே ஊக்குவிக்கப்படுகிறது. தொழிற் துறையில் உள்ள தொழில் நுணுக்க வல்லுனர்களும் மேல்நிலை அலுவலர்களும் பெரும்பாலும் வெளிநாட்டவர். தொழில் நுட்ப ஒப்பந்தங்கள் உள்நாட்டில் செய்யப்படும் ஆராய்ச்சிகளுக்குத் தடையாக நிற்கின்றன. அனைத்துலக முதலாளிய உழைப்புப் பிரிவினையானது குறிப்பிட்ட ஒரே பாத்திரத்தையே வகிக்குமாறு மூன்றாம் உலக நாட்டுத் தொழிற்துறையை வரம்புக்குட்படுத்துகிறது. சோவியத் சார்பு நாடுகளிலும் இதே நிலைதான். அதாவது பன்னாட்டுக் குழுமங்கள் ஒரே இயந்திரத்திற்காக அல்லது ஒரே மோட்டார் வண்டிக்காக, வெவ்வேறு நாடுகளிலுள்ள தம் துணைக் குழுமங்கள் வெவ்வேறு உதிரிப் பாகங்களை மட்டுமே உற்பத்தி செய்யுமாறு பார்த்துக் கொள்கின்றன. இதிலும்கூட மூன்றாம் உலக நாட்டுப் பொருளாதாரத்திற்குப் பாதுகாப்பில்லை. ஏனெனில் ஊதிய உயர்வுக்காகத் தொழிலாளர் போராடினாலோ அல்லது ஊதியத்திற்கான செலவு கூடினாலோ பன்னாட்டுக் குழுமங்களால் ஒரு நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பொருளை வேறு நாட்டில் உற்பத்தி செய்யக்கூடிய அளவுக்கு தனது மூலதனத்தையும் தொழில் நுணுக்கத்தையும் இடம் பெயர்க்கும் அதிகாரம் பெற்றுள்ளன. பன்னாட்டு மூலதனக் குழுமங்களுடன் கூட்டாக நிறுவப்படும் தொழிற்சாலைகள் மூலதனம் மிகுதியாகத் தேவைப்படும் (Capital Intensive) தொழில்களாகும். எனவே வேலைவாய்ப்பு வழங்குதல் என்பதைப் பொறுத்தவரை இவற்றின் பங்களிப்பு மிகக் குறைவே. பயிற்சி பெற்ற அல்லது ஓரளவு பயிற்சி பெற்ற தொழிலாளர்களுக்கு இங்கு பெரும் வாய்ப்பில்லை. மாறாக, பயிற்சி தேவைப்படாத மிக எளிய வேலைகளைச் செய்கின்ற பயிற்சி பெறாத தொழிலாளர்களுக்கு மட்டும் ஓரளவு இங்கு வாய்ப்புண்டு. உள்நாட்டுத் தொழில்நுட்ப வல்லுனர்கள், அலுவலர் போன்றவர்களுக்கு வழங்கப்படுவதைக் காட்டிலும் மிக அதிக

படிப்பகம்

www.padippakam.com



மான ஊதியங்கள் ஏறத்தாழ இதே வேலையைச் செய்யும் வெளிநாட்டுத் தொழில்நுட்ப வல்லுனர்கள், அலுவலர்கள் ஆகியவர்களுக்குக் கொடுக்கப்படுவதுடன் வரிவிலக்கு, வெளிநாட்டுச் செலாவணிக் கட்டுப்பாட்டில் இருந்து விலக்கு, மிகச் சிறந்த வீட்டுவசதி போன்றவையும் இவர்களுக்குத் தரப்படுகின்றன. தவிரவும் உற்பததித் தொடர்பில்லாத சேவைத்துறை ஒன்று தழைத்தோங்கத் துவங்குகிறது. உணவு விடுதிகள், திரை அரங்குகள், டிஸ்கோ நடன அரங்குகள், வேசையர் விடுதிகள், மதுக் கடைகள் போன்றவை தழைத்தோங்குகின்றன. புது வகையான உதிரி முதலாளிகள், உதிரிப் பாட்டாளிகளின் எண்ணிக்கை பெருகப் பெருக, நகர்ப்புறங்களில் மக்கட் தொகைப் பெருக்கமும் சேரிகளின் நெருக்கமும் மிகுதியாகின்றன. மூன்றாம் உலக நாடுகளில் வேலையற்றோர் தொகை 1972ஆம் ஆண்டில் மொத்த மக்கட் தொகையில் 30% மாக இருந்தது. மூன்றாம் உலக நாடுகளில் உள்ள நகர்ப்புற வேலையற்றோர் தொகை வளர்ச்சியடைந்த நாடுகளிலுள்ள மொத்த நகர்ப்புறத் தொழிலாளிகளைக் காட்டிலும் மிகவும் அதிகமாகும்! உண்மையில் மூன்றாம் உலக நாடுகள் ஏகாதிபத்திய நாடுகளால் சுரண்டப்படும் அளவு இந்த நாடுகள் அரசியல் சுதந்திரம் அடைந்த பிறகே, அதாவது அந்தந்த நாட்டின் தரகு முதலாளி—வர்க்கம் அரசு அதிகாரத்தை எடுத்துக் கொண்ட பிறகே அதிகரித்தது. மிக அண்மையில் அமெரிக்காவிலுள்ள எம்.ஐ.டி. (M.I.T) நிறுவனத்தைச் சேர்ந்த போல் ரோசன் ஸ்டீன்ரோடன் (Paul Rossen Steen Rodden) என்பார் மேற்கொண்ட ஆய்வில் அதிர்ச்சி தரும் செய்திகள் சொல்லப்படுகின்றன.

குறை வளர்ச்சி உடைய நாடுகளில் தனியாள் ஒருவரின் ஆண்டு வருமானம் இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் மேற்கு நாடுகளில் உள்ள தனியாள் ஆண்டு வருமானத்தில் சரிபாதியாக இருந்தது. இப்போது அது மேற்கு நாட்டவரின் தனியாள் வருமானத்தில் இருபதில் ஒரு பங்காகிவிட்டது. புதிய காலனியத்தால் பணக்கார நாடுகளுக்கும் ஏழை நாடுகளுக்கும் இடையிலுள்ள பிளவு விரிந்துள்ளது மட்டுமல்ல, மூன்றாம் உலக நாடுகளுக்குள்ளேயே செல்வருக்கும் வறியோருக்கும் இடையிலான பிளவும் தொடர்ந்து விரிவடைந்து வருகிறது. மூன்றாம் உலக நாடுகளின் மக்கள் தொகையில் ஐந்து விழுக்காட்டினர் மிகு செல்வர்கள். இவர்களிடமுள்ள செல்வம் அங்குள்ள மிக வறியவர்களான 40% மக்களுக்குமுள்ள செல்வத்தைக் காட்டிலும் 16இலிருந்து 30 மடங்கு அதிகமானதாகும்.

ஏகாதிபத்திய முற்றுரிமை முதலாளியத்தின் உலகு தழுவிய நெருக்கடி ஆழமடைந்து வருவதானது இன்றைய உலகின் மெய்யான நிகழ்ச்சிப் போக்காகும். உலக முதலாளியத்தின் வரலாற்றில் ஏற்பட்ட நெருக்கடிகளில் 1914லிருந்து 1949 வரை நீடித்த நெருக்கடி முதலாளிய உலகமைப்பினை ஆட்டம் காண வைத்தது. இந்த 35 ஆண்டுகளில் இரண்டு உலகப் போர்கள் நடைபெற்றன; ரஷ்யப் புரட்சியும், சீனப்புரட்சியும் நிகழ்ந்தன; சோசலிச முகாமொன்றும் எழுந்தது; காலனி அமைப்பு முழுவதிலும் நெருக்கடி தோன்றியது. இக்கால கட்டத்தில் முதலாளிய உலகப் பொருளாதாரத்தைக் கவ்விப் பிடித்த ஆழமான நெருக்கடியின் விளைவாகவும் அதற்கான காரணமாகவும் இருந்தவை இந்தப் போர்களும் புரட்சிகளும் ஆகும். 1950களிலும் 1960களின் முதல் பகுதியிலும் உலக முதலாளியத்திற்கு மற்றொரு "நல்ல காலம்" அடித்தது. ஆனால், 1960களின் இடைப் பகுதியிலிருந்தே வீழ்ச்சி தொடங்கலாயிற்று. 1973-1974-ல்இப்பொருளாதாரம் கடும் பின்னடைவை அடைந்தது. இன்று வரை இந்நெருக்கடி தணிந்து வருவதற்கான அறிகுறி ஏதுமில்லை. 1970களிலிருந்து உயர்ந்த அளவு வேலையில்லாத் திண்டாட்டமும், பண வீக்கமும், உற்பத்தி அளவுகளில் வீழ்ச்சியும் தொடர்ந்து நிகழ்ந்து வருகின்றன. நத்தை வேக வளர்ச்சியும் உயர்ந்த அளவு பணவீக்கமும் சேர்த்து தேக்க வீக்கம் (Stagflation) என்று மேற்கு நாட்டுப் பொருளாதார வல்லுனரால் சுட்டிக் காட்டப்படும் நிகழ்ச்சிப் போக்கைத் தோற்றுவித்துள்ளன. இதுவரை இந்த மிகக் கடுமையான பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள முடியவில்லை. அமெரிக்கா, மேற்கு ஐரோப்பா, ஜப்பான் ஆகியவை முத்தரப்புக்

படிப்பகம்

www.padippakam.com



குழு (Tripartite Commission) ஒன்றை ஏற்படுத்திக்கொண்டு மூன்றாம் உலக நாடுகளை தம் வலைக்குள் இழுத்துக் கொண்டு ஒருங்கிணைந்தது. அரசியல் பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொண்டாலும் இம்மூன்று மையங்களுக்கிடையே நடக்கும் வாணிபப் போட்டிகளையும் நிதிப் போட்டிகளையும் கணிசமான அளவு குறைக்க முடியவில்லை. இந்தப் போட்டியானது அமெரிக்கப் பொருளாதாரத்தையும் மேற்கத்தியப் பொருளாதார அமைப்பு முழுவதையும் மேலும் வலுக்குன்றச் செய்வதாக அமெரிக்கா புகார் சொல்கிறது. நெருக்கடியிலிருந்து மீண்டு வருவதற்கான அறிகுறிகள் ஏதுமில்லை. மாறாக முதலாளிய உலகப் பொருளாதாரத்தை இப்போது சுற்றித் தழுவும் பின்னடைவு, 1929—1932ல் ஏற்பட்ட பொருளாதார மந்தத்திற்கு இணையான மற்றொரு கடும் நெருக்கடிக்கு இட்டுச் செல்லும் அறிகுறிகளைப் புள்ளி விபரங்கள் சுட்டுகின்றன. சோவியத் முகாமின் பொருளாதாரத்தில் ஏற்பட்டுவரும் தேக்க நிலையும் இத்தகையதே. போலந்து போன்ற ''சோசலிச'' நாடுகளில் அமெரிக்க, மேலை ஐரோப்பிய மூலதனத்தின் ஊடுருவல் பற்றிச் சொல்லத் தேவையில்லை.

மூன்றாம் உலக நாட்டுப் பொருளாதாரங்களை ஏகாதிபத்திய நாட்டுப் பொருளாதாரங்களுடன் மேலும் ஒன்றிணைத்தல் மூலம் வளர்ச்சி அடைந்த நாடுகள் கடுமையான உலகப் பொருளாதார நெருக்கடிப் பளுவின் பெரும் பகுதியை மூன்றாம் உலக நாட்டு மக்கள் மீது சுமத்திவிட முடிகிறது. ஏகாதிபத்திய நாட்டு முதலாளியமானது மிகை மதிப்புச் சுரண்டல் அளவைஅதிகரித்து தன் உயர்நிலை ஆதாயத்தைப் பேணிப் பாதுகாத்துக் கொள்வதன் மூலம் உலகளாவிய மூலதனத் திரட்டல் என்ற சிக்கல்களைத் தற்காலிகமாகவும் ஓரளவிற்கும் தீர்த்துக் கொள்ளக்கூடிய ஆற்றலுடையதாக இருக்கிறது ஆனால் மிகை மதிப்பை அதிக அளவில் ஏகாதிபத்திய நாடுகளிலேயே சுரண்டுவது என்பது முடியாது. ஏனெனில் இப்படிச் செய்தால் முதலாளி வர்க்கங்களின் சொந்தத் தாயகத்தில் சமூக, அரசியல் கொந்தளிப்புகள் ஏற்பட்டு விடும். எனவே மூன்றாம் உலகத்திலுள்ள பாட்டாளி வர்க்கமும், உழவர் வர்க்கமுமே சுரண்டலுக்கான குறியிலக்காக இருக்க நேர்கிறது. இந்தச் சூழலில் மூன்றாம் உலக நாடுகளில் முதலாளிய வளர்ச்சி என்பது தேசிய இறைமையைப் பன்னாட்டு குழுமங்களுக்குப் பலி கொடுப்பதன் மூலமே கைகூடுகிறது. இதன் தவிர்க்கமுடியாத விளைவு ஆளும் தரகு-அதிகார வர்க்க முதலாளி வர்க்கங்கள் மேற்கு நாட்டால் திணிக்கப்படும் நிபந்தனைகளை ஏற்றுக் கொண்டாக வேண்டும் என்பதாகும். தற்போதைய உலக நெருக்கடியும் இதிலிருந்து மீள மேற்கு நாடுகள் கையாளும் புதிய தந்திரமும் மிகக்கடினமான நிபந்தனைகளை ஐ.எம்.எப்., ஐ.பி.ஆர்.டி ஆகியவற்றின் மூலம் விதிக்கின்றன. பன்னாட்டுக் குழுமங்களும் இவற்றின் சார்பாக ஐ எம் எப்., ஐ.பி.ஆர்.டி. போன்றவையும் உயர் அளவு ஆதாயங்களை அடைவதற்காகத் தொழில் அமைதி, வேலை நிறுத்தத் தடை ஆகியவற்றை உறுதி செய்யுமாறு மூன்றாம் உலக நாட்டு ஆளும் வர்க்கங்களிடம் கோருகின்றன. சுரண்டல் சுமையை எதிர்த்துப் பல்வேறு வகைகளில் போராடும் உழைக்கும் மக்களை ஒடுக்குவதற்கு ஆளும் வர்க்கங்கள் கடுமையான வழிமுறைகளை நாடுகின்றன. இச்சூழலில் (சர்வாதிகார) கொடுங்கோல் (பாசிச) ஆட்சி வடிவங்களை நாடுகின்றன. உழைக்கும் மக்களால் வென்றெடுக்கப்பட்ட உரிமைகள், இறைமைகள், சலுகைகள் பறித்தெடுக்கப்படுகின்றன.

இவற்றைப் பழைய குடியாட்சி அரசு சட்டகத்திற்குள் செய்யமுடியாது என்பதால் இச்சட்டகமே தீவிரமாக மாற்றப்பட்டு பிறகு உடைத்து எறியப்படுகிறது. இப்பொழுதுள்ள பொருளாதார அடித்தளத்துக்குத் தேவையான புதிய அரசியல் மேலடுக்கு கட்டப்படுகிறது. மூன்றாம் உலக நாடுகள் பலவற்றில் குடியாட்சி உரிமைகள் நசுக்கப்பட்டு கடுமையான சர்வாதிகாரங்கள் திணிக்கப்பட்டுள்ளன. ஆயிரக்கணக்கானோர் சிறைவாசத்திற்கும், சித்திரவதைக்கும், படுகொலைக்கும் உள்ளாயினர். பிரேசிலில் முதன் முறையாக உருவாக்கப்பட்ட ஒரு புதிய அரசு வடிவம், மூன்றாம் உலக நாடுகள் பலவற்றிலும் இப்போது மெல்ல மெல்ல உருவாக்கப்பட்டு வருகிறது. அரசுஅதிகாரம் முற்றிலுமாக மையப்படுத்தப்படுதலும்

படிப்பகம்

www.padippakam.com



இராணுவத் தன்மையாக்கப்படுதலும்தான் இது. ஆயுதப்படைகள், காவல்படை, உளவுத் துறை, தேசியப் பாதுகாப்புக்குழு ஆகியவை இதன்முக்கிய அங்கங்கள். நாட்டின் உறுதித் தன்மை, பாதுகாப்பு என்பனவற்றின் மீது மட்டுமே அக்கறை செலுத்தப்படுகின்றன. எல்லா வகையான எதிர்ப்பு வடிவமும் தேசப் பகையாகக் கருதப்படுகிறது. அரசுக்குள்ள சமூக அடித்தளம் தொடர்ந்து குறுகிக் கொண்டே போய் எல்லா எதிர்ப்புச் சக்தி களையும் — இடதுசாரிக் கட்சிகள், தொழிற் சங்கங்கள், மாணவர் குழுக்கள், தேசியச் சிறுபான்மையினர், (ஏன் சமய நிறுவனங் கள் ஆகியவற்றையும்கூட) — முற்றிலுமாக ஒழித்துக் கட்டும் திட்டம் துவங்குகிறது. இன்னும் சில (இந்தியா போன்ற) நாடு களில் நாடாளுமன்றத் திரைச் சீலையைப் பயன்படுத்திக் கொண்டே கொடுநெறி முறை களை அதிகரித்த அளவில் பயன்படுத்தும் போக்கும் நிலவுகிறது.

## புதுக்காலனியம்—வரையறுப்பு குறித்து

எந்த ஒரு கருத்தாக்கத்தையும் முழுமுற் றான பொருளில் (absolute sense) ஒரு போதும் பயன்படுத்த முடியாது. இவ் வுண்மை புதுக் காலனியம் என்ற கருத்தாக் கத்திற்கும் பொருந்தும். புதுக்காலனியம் பற்றிய புரிதலை 'ஹவானா'வில் 1966-ம் ஆண்டு நடந்த மூன்றாம் உலக நாடுகளின் மாநாட்டில் வழங்கப்பட்ட வரையறுப்புக்குள் மட்டுப்படுத்திவிட முடியாது. ''பொம்மை அரசாங்கங்களும்'', இராணுவத் தளங்களும் இருந்தால் மட்டுமே புதுக்காலனி என்று கூற வேண்டும் என்பது சரியல்ல. பொம்மை அரசாங்கங்கள் என்று கூறப்படுபவை கூட 'அரசியல் சுதந்திரம்' பெற்ற அரசாங் கங்களைப் போல அவ்வப்போது சில ''சுயேச்சையான'' கொள்கைகளைப் பின் பற்றுவதைக் காணலாம். அண்மையில் பிலிப் பைன்ஸ் குடியாட்சித் தலைவர் மார்கோஸ், தான் ''அமெரிக்காவின் நாயல்ல'' என்று கூறியதை நினைவுகூறவேண்டும். இரண் டாவதாக, வளர்ச்சி அடைந்த மேற்கு ஐரோப்பிய நாடுகளிலும்கூட அமெரிக்கா வின் இராணுவத் தளத்தைக் காணலாம். மேலும் 1966-ஆம் ஆண்டு ஹவானா மா நாடு, சோவியத் சமூக-ஏகாதிபத்தியத்தை தனது வரையறுப்பில் உள்ளடக்கவில்லை. லெனின் கூறிய சார்பு முதலாளியம் நிலவிய காலத்திலிருந்து பன்னாட்டுக் குழுமங்கள் நிலவும் இன்றைய காலகட்டம்வரை ஏகாதி பத்தியச் சுரண்டலில் ஏற்பட்டுள்ள பண்பு வகை வேறுபாடுகளைக் கருத்தில் கொள்ள வேண்டும். புதுக்காலனியச் சுரண்டலின் கீழுள்ள ஒவ்வொரு நாடும் தனக்கேயுரிய குறிப்பிட்ட நிலைமைகளையும் பண்புகளை யும் கொண்டுள்ளது. இவை வரலாற்று ரீதி யாகத் தீர்மானிக்கப்படுபவை. எனவே தற் போதைய பொருளாதார நிலைமைக்குப் பின்னால் உள்ள உண்மையைக் கண்டறிய நாம் ''வரலாற்று-பொருளாதார'' முறை யைப் பயன்படுத்த வேண்டும். இக்கட்டுரை யில் நாம் ஒரு பொதுவான புரிதலை வழங்க முயன்றுள்ளோம். எந்த ஒரு குறிப்பிட்ட அலகும் (unit)—அதாவது இந்தியா போன்ற நாடு—எந்தவொரு உலகப் பின்னணியில் பார்க்கப்பட வேண்டும் என்பதற்காகவே இப்பொதுவான புரிதல் தேவை.

—எம்.வி. பாஸ்கர்

[நவம்பர்-டிசம்பர் 1984-'மார்க்சியம் இன்று' இதழில் வெளிவந்த கட்டுரை]

### குறிப்புகள் :

1. சர்வதேச டிரஸ்ட் (International Trust) : முற்றுரிமை (ஏகபோக) நிறுவனங்களின் அடிப்படை வடிவங்களில் ஒன்று. மற் றவை கார்டெல், சிண்டிகேட், கார்ப்ப ரேசன் ஆகியவை. தனித்தனியான தொழிலுற்பத்தி, வாணிப நிறுவனங் கள் தம் சுயேச்சைத் தன்மையைக் கை விட்டு ஒரே அமைப்பாக இணைவது

படிப்பகம்

www.padippakam.com



தான் டிரஸ்ட். இதன் உற்பத்தி, நிதி, வாணிபச் செயல்பாடுகளை ஒரு வாரியம் (board) நிர்வகிக்கிறது. இந்த வாரிய உறுப்பினர்களைப் பங்குதாரர்கள் தேர்ந்தெடுக்கின்றனர். ஏராளமான பங்குகளை வைத்திருப்பவர்தான் உறுப்பினராக முடியும்.

2. உற்பத்திச் சக்திகள் (ஆற்றல்கள்) (Productive Forces): நிலம், சுரங்கங்கள், மூலப்பொருட்கள், இயந்திரங்கள், தொழிற்சாலைகள் முதலிய உற்பத்திச் சாதனங்கள், இந்த உற்பத்திச் சாதனங்களைப் பயன்படுத்தித் தேவையான பொருள்களைச் செய்கிறமனித உழைப்பு (வலிமையையும் திறமையையும் பயன்படுத்துகிற தொழிலாளரின் உழைப்பு); கடந்த கால உழைப்பின் திரட்சியாக உள்ள அறிவியல்-தொழில் நுணுக்க அறிவு ஆகிய மூன்றும் சேர்ந்தவையே உற்பத்திச் சக்திகள் (ஆற்றல்கள்). இவற்றில் மிகவும் முக்கியமானது மனித உழைப்புதான்.

3. உள்கட்டுமானம் (Infrastructure): தொழிலுற்பத்திக்கும் வேளாண்மை உற்பத்திக்கும் வாணிபத்துக்கும் தேவையான அடிப்படையான ஏந்துகள் (வசதிகள், சுரங்கங்கள், உருக்காலைகள் மின்நிலையங்கள், அணைக்கட்டுகள், கால்வாய்கள், இருப்புப்பாதை, சாலைகள், கப்பல் போக்குவரத்து, செய்தித் தொடர்பு, பயிற்றுவிக்கும் கல்விக்கூடங்கள் முதலானவை.

4. குடியாட்சிப் புரட்சி (Democratic Revolution): நிலக்கிழமை உற்பத்தி உறவுகளையும் நிலக்கிழமை ஆட்சியையும் (முடிமன்னர்கள், இளவரசர்கள். கிழார்கள், மதகுருமார்கள்) தூக்கி யெறிந்து, முதலாளிய ஜனநாயக ஆட்சியை நிறுவி, முதலாளிய உற்பத்திச் சக்திகளைக் கட்டவிழ்த்து, முதலாளிய உற்பத்தி உறவுகளையும் சமூக உறவுகளையும் ஏற்படுத்தும் புரட்சி.

5. காலஞ் சென்ற அமெரிக்கப் பத்திரிகையாளரான அன்னா லூயிஸ்ஸ்ட்ராங் எழுதியCash and Violence in Laos (New World Press, Peking, 1971) என்ற நூலைக் காண்க. 1964-லேயே புதுக் காலனியம் (Neo-Colonialism) என்ற சொல் வழக்குக்கு வந்துவிட்டது என்பதும் இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் அமெரிக்கா தனியொரு வலிமை வாய்ந்த ஏகாதிபத்தியமாக மாறியது பற்றி மாசேதுங் தெளிவாக அறிந்திருந்தார் என்பதும் இந்நூல் தரும் செய்திகளாகும். 1963இல் உலகப் பொதுவுடைமைஇயக்கத்தில் வெளிப்படையாக நடக்கத் தொடங்கிய சித்தாந்த போராட்டத்தின் போக்கில் சீனப் பொதுவுடைமைக் கட்சி வெளியிட்ட ஆவணங்களில் ஒன்றுApologists of New Colonialism. ஆனால் புதுக்காலனியம் பற்றிய முழுமையானதொரு ஆய்வை சீனப் பொதுவுடைமைக் கட்சி ஒரு போதும் வழங்கவில்லை. சோவியத் முகாமைச் சேர்ந்த சிலரும், ஹவானாவில் 1966இல் வெளியிடப்பட்ட ஆவணமும் புதுக்காலனியம் பற்றிய விளக்கங்கள் கூறின. ஆனால் அவை அமெரிக்காவால் பிலிப்பைன்ஸ், தாய்லாந்து, தைவான், தென் கொரியா போன்ற நாடுகளில் உருவாக்கப்பட்ட 'பொம்மை' அரசாங்கங்களும் அமெரிக்காவின் இராணுவத் தளங்கள் உள்ளதுமான நாடுகளை மட்டுமே குறிக்க இச் சொல்லைக் கையாள்கின்றன.

இந்தியப் பொதுவுடைமைக் கட்சி (மா-லெ)யின் முன்னோடியான ஒருங்கிணைப்புக் குழு 1968இல் 'லிபரேசன்' என்ற ஆங்கில ஏட்டைத் தொடங்கியது. அப்போது இந்தியாவின் அரசியல்-சமூக நிலைமைகள் பற்றிய மனந்திறந்த கருத்தாடல்கள் நடைபெற்றன. 1969-ல் கட்சி அதிகார பூர்வமாகத் தொடங்கப்பட்டதும் கருத்தாடல்களுக்கு முற்றுப் புள்ளி வைக்கப்பட்டது. ஆயினும் 1970 ஆண்டுக் கட்சித் திட்டத்தில் அரைக் காலனி என்ற சொல்லோடு புதுக் காலனி என்ற சொல்லும் பயன்படுத்தப் படுவது குறிப்பிடத்தக்கது.

6. மாற்றாள் போர் (Proxy War): அமெரிக்க-சோவியத் ஏகாதிபத்தியங்

படிப்பகம்

www.padippakam.com



கள் தமது அரசியல்-பொருளாதார செல்வாக்குக்கு உட்படுத்த விரும்பும் நாடுகளில் தமது சொந்தப் படைகளை அனுப்பாமல், தமது புதுக்காலனியச் சுரண்டலின் கீழுள்ள அரசாங்கங்களின் படைகளைக் கொண்டோ அல்லது அந்தந்த நாட்டில் கூலிப்படைகளைக் கொண்டோ நடத்தும் போர்.

7. அரசு-முற்றுரிமை முதலாளியம் (State-Monopoly Capitalism): முதலாளியத்தின் ஏகாதிபத்தியக் காலக் கட்டத்தில் முதலாளிய அரசு, நிதியாதிக்க கும்பலின் (Finacial Oligarchy) நலன்களின் பொருட்டு நாட்டின் பொருளாதார வாழ்வில் நேரடியாகத் தலையிட்டு அதை ஒழுங்குப்படுத்துகிறது. பொருளாதாரத் துறையில் சிலவற்றை நாட்டுடைமையாக்குகிறது இது அரசு முதலாளியமாகும். இதுவும் தனியார் முற்றுரிமை முதலாளியமும் இணைந்ததே அரசு-முற்றுரிமை முதலாளியமாகும்.

8. சர்வதேசக் கார்டல்கள் (International Cartel) குறிப்பு எண் 1ஐ பார்க்க. பெரிய முதலாளிய நிறுவனங்களின் கூட்டமைப்பே கார்டல். இதன் உறுப்பினர்கள், தமது பொருட்களின் விற்பனை, மூலப் பொருட்களை வாங்குதல், அவற்றுக்கான பணம் செலுத்துதல் போன்றவற்றில் பொது நிபந்தனைகளை ஏற்றுக் கொண்டு சந்தைகளைத் தமக்குள் பங்கு போட்டுக் கொள்கின்றனர். உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள், வாங்கும் மூலப் பொருட்கள் ஆகியவற்றுக்கு விலை நிர்ணயிக்கிறார்கள். ஒவ்வொரு உறுப்பினரும் உற்பத்தி செய்ய வேண்டிய பொருளின் அளவு பற்றியும் தீர்மானித்துக் கொள்கின்றனர். கார்டலில் சேர்ந்த உறுப்பு நிறுவனங்கள் தம் சுயேச்சைத் தன்மையைத் தக்க வைத்துக் கொள்கின்றன.

9. நிலையான மூலதனம் (Constant Capital): உற்பத்தித் துறையில் முதலீடு செய்யப்படும் மூலதனம் நிலையான மூலதனம், மாறுகின்ற மூலதனம் (Variable Capital) என்ற இரு பகுதிகளைக் கொண்டது. மூலப் பொருட்கள், இயந்திரம், கருவிகள், கட்டிடங்கள் போன்றவை நிலையான மூலதனம் ஆகும். உழைப்புச் சக்தியை வாங்குவதற்காக (தொழிலாளிகளுக்கு ஊதியமாகக் கொடுப்பதற்காக) ஒதுக்கப்படும் மூலதனமே மாறுகின்ற மூலதனம் ஆகும். முதலாளிகளுக்குள்ளேயே இருக்கின்ற இடைவிடாப் போட்டியின் காரணமாக, அதிகத் திறன் வாய்ந்த மேம்பாடான தொழில் நுணுக்கம் கொண்ட இயந்திரங்களும், உற்பத்தி முறைகளும் புகுத்தப்பட்டுத்தான் உழைப்பாளியிடமிருந்து குறைந்த நேரத்தில் அதிகமான மிகை மதிப்பைப் பிழிந்தெடுக்க முடியும். எனவே மொத்த மூலதனத்தில் தொழிலாளரின் ஊதியத்துக்காகச் செலவிடப்படும் பகுதியை விட இயந்திரம், தொழில் நுணுக்கம் போன்றவற்றில் முதலீடு செய்யப்படும் மூலதனம் தொடர்ந்து அதிகரித்தே செல்கிறது.

**இக்கட்டுரைக்கான அடிப்படை நூல்கள்:**

கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ள மார்க்ஸ், லெனின், ஸ்டாலின், மாசேதுங் ஆகியோரின் படைப்புகள் தவிர கீழ்க்காணும் நூல்கள் பயன்பட்டுள்ளன:

1. Anna Louisie Strong, Cash and Violence in Laos, New World Press; Peking 1961.
2 Andre Gunder Frank, Development of Underdevelopment, MRP, NewYork.
3. Amilcar Cabral, National Liberation and the Social Structure.
4. Cheryl Payer, The Debt Trap, MRP, NewYork.
5. Cheryl Payer, For National Independence and social Liberation, Monthly Review NewYork Vol.35, No.5.
6. C. Bhawbrie, The World Bank and India.
7. Raymond Lotta (Ed.), Soviet Union: Socialist or Social Impelialist, Banner Press, Chicago 1983.

படிப்பகம்

www.padippakam.com

# தமிழ் தேசத் தன்னுரிமை புரட்சியா? புரட்டலா?

சமீபத்தில் தமிழர் தேசிய இயக்கம், த.தே.பொ.க, தீலிபன் மன்றம் ஆகிய அமைப்புகள் இணைந்து தமிழ்தேசத் தன்னுரிமை முன்னணியின் 'கொளகைப் பட்டயம்' ஒன்றை வெளியிட்டிருக்கின்றன.

''தமிழ்த் தேசிய இனம் தனது அரசியல் பொருளாதார, பண்பாட்டு வாழ்வியலைத் தானே தீர்மானித்துக் கொள்ளும் உரிமை—அதாவது தன்னுரிமை பெற வேண்டும்'' எனக் கூறும் அப்பட்டயம் தமிழக அரசுகது என்னென்ன உரிமைகள், அதிகாரங்கள், அரசியல், பொருளாதார, பண்பாட்டுத்துறைகளில் வழங்கப்படவேண்டும் என பின்வருமாறு பட்டியலிடுகிறது :

- தமிழ்நாட்டிற்குள் குடியுரிமை வழங்கும் அதிகாரம் தமிழக அரசிடமே இருக்க வேண்டும். தமிழகத்தின் எல்லைகளைத் தீர்மானிப்பதில் தமிழக அரசின் ஒப்புதலை கட்டாயமாக்க வேண்டும்.
- தமிழ் உள்ளிட்ட அனைதது மொழிகளும் இந்தியாவின் ஆட்சி மொழிகளாக வேண்டும் தமிழ் நாட்டில் அனைத்து நிலைகளிலும தமிழே பயிற்று மொழியாகவும் ஆட்சி மொழியாகவும், நீதி மொழியாகவும் விளங்க வேண்டும்.
- தொழில், வணிகத் துறைகளின் முழுமையான அதிகாரஙகள் தமிழ்நாடு அரசுக்கு வேண்டும்.
- அனைத்து வரிகளையும் விதித்து திரட்டும் அதிகாரம் தமிழக அரசுக்கே வேண்டும்.
- தொலைக்காட்சி, வானொலி, செய்தித்தாள், திரைப்படத் தணிக்கை துறை அதிகாரங்கள் அனைத்தும் தமிழக அரசுக்கு வேண்டும்.
- தமிழகத்தில் உள்ள இந்திய அரசு அலுவலகங்கள், தொழிற்நிலையங்கள், நிதி நிறுவனங்களில் தமிழ் மக்களுக்கே முன்னுரிமை வேண்டும். தில்லியில் உள்ள இந்திய அரசு அலுவலகங்களில் தமிழ்நாட்டு மக்கள் தொகைக்கு ஏற்ப தமிழர்கள் நியமிக்கப்பட வேண்டும்.
- தமிழக ஆட்சியிலும், அன்றாட நிர்வாகத்திலும் இந்திய அரசு தலையிடவோ, அரசியல் உரிமையைப் பறிக்கவோ கூடாது.

என்றிவ்வாறு பட்டியலிடும் பட்டயம் இந்திய அரசியல் அமைப்புச்சட்டம் தமிழ் தேசிய இனத்தின் 'அடிமை முறி' என்றும் அதற்கு உட்பட்டோ அதில் சில திருத்தங்கள் செய்தோ தமிழ்த் தேசிய இனத்தின் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது என்றும் கூறுகிறது.

சாராம்சமாகக் கூறுவதெனில் இந்திய அரசியல் அமைப்பில் தமிழக அரசு ஒரு தன்னுரிமை பெற்ற அரசாக இருக்க வேண்டும். அதற்கேற்ப ஒரு புதிய அரசியல் அமைப்புச் சட்டம் வரையப்பட வேண்டும் என்பதே 'கொள்கைப் பட்டயத்தின் கருத்தாகும்.

ஆனால் இந்தப் பட்டயம் புதிய இந்திய அரசியல் அமைப்பு எப்படிப்பட்டதாக

படிப்பகம்

www.padippakam.com



இருக்க வேண்டும் என்று எதுவும் கூறவில்லை. பிப் 25,1990ல் நடைபெற்ற தமிழ்த் தேசிய தன்னுரிமை மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானமும், ஏப் 20, 1991ல்தஞ்சை மாநாட்டில் நெடுமாறன் நிகழ்த்திய பேருரையும் புதிய இந்திய அரசியல் அமைப்பு தன்னுரிமை பெற்ற தேசிய இனக்குடியரசுகளின் ஒன்றியமாக இருக்கவேண்டும் எனக் கூறுகின்றன. கொள்கைப் பட்டயத்தில் இவ்வாறு எதுவும் கூறப்படாததால் புதிய இந்திய அரசியல் அமைப்பைப் பொருத்தவரை கொள்கைப் பட்டயம் இரு சாத்தியப்பாடுகளைக் கருத்தில் கொண்டுள்ளது எனக் கருதலாம். முதலாவது, தன்னுரிமை அங்கீகரிக்கப்பட்ட தேசிய இனக் குடியரசுகளின் ஒன்றியத்துக்கான அரசியல் அமைப்பு; இரண்டாவது, தமிழ் தேசத்திற்கு மட்டும் தனிச்சலுகையாக தன்னுரிமையை அங்கீகரிக்கும் அரசியல் அமைப்பு.

ஆனால் இந்த இரு சாத்தியப்பாடுகளும் கற்பனையே. காரணம் இந்தியா ஒரு தரகு-பார்ப்பனிய ஏகாதிபத்தியம்; தரகு முதலாளிகளும், பார்ப்பனிய சக்திகளும் தமது உயிர் வாழ்க்கைக்கு தேசிய (இன) ஒடுக்குமுறையையே ஆதாரமாகக் கொண்டிருக்கின்றன. தேசிய இனங்களின் தன்னுரிமையை அங்கீகரிப்பது ஒவ்வொரு தேசிய இனமும் தனது சொந்த தேசியப் பொருளாதாரத்தை—சுதந்திரமான, சுய சார்பான பொருளாதாரத்தை கட்டியமைத்துக் கொள்ள அங்கீகரிப்பதாகும். இது தரகு முதலாளித்துவப் பொருளாதாரத்துக்கு எழுதப்படும் மரண சாசனமாகும். எனவே எக்காரணம் கொண்டும் இந்தியத் தரகு-பார்ப்பனிய ஏகாதிபத்திய சக்திகள் தேசிய இனங்களின் தன்னுரிமையை அங்கீகரிக்கும் அரசியல் அமைப்புச் சட்டத்தை ஏற்றுக் கொள்ளப் போவதில்லை. தனி ஒரு சலுகையாக தமிழ்த் தேசிய இனத்திற்கு மட்டுமே தன்னுரிமை வழங்கும் ஒரு புதிய அரசியல் அமைப்புச் சட்டத்தையும் அங்கீகரிக்கப் போவதில்லை. காரணம் அதுவே பிற தேசிய இனங்களும் அதே மாதிரியான கோரிக்கைக்காகப் போராடுவதைத் தூண்டிவிட்டு தரகு முதலாளித்துவ வர்க்கத்தின் அழிவைத் துரிதப்படுத்தும் என்பது இந்திய ஆளும் வர்க்கங்கள் அறியாததல்ல.

ஆனால் பட்டயம் தரகு முதலாளிகளைப் பெருமுதலாளிகள் என்றே மிகவும் கவனமாகக் குறிப்பிடுகிறது. மேலும் பன்னாட்டு முதலாளிகள் அவர்களுடைய கூட்டாளிகள் என்று வர்ணிக்கிறது. அதாவது இந்தியப் பெருமுதலாளிகள் பட்டயத்தைப் பொருத்தவரை தரகு முதலாளிகள் அல்லர். பன்னாட்டு முதலாளிகளுக்குக் கூட்டாளிகளாய் இருக்கும் அளவுக்கு (அவர்களைச் சார்ந்தவர்கள் அல்லர்) சுதந்திரத்தன்மை பெற்ற 'தேசிய' முதலாளிகள். இவர்களுடைய உயிர் வாழ்விற்கு ஆதாரமாய் இருப்பது தேசிய (இன) ஒடுக்குமுறையல்ல; மாறாக முதலாளித்துவச் சுரண்டலே. தேசிய இனங்களின் தன்னுரிமை தற்போது மறுக்கப்பட்டிருப்பது ஆளும் வர்க்கங்களின் வாழ்க்கைக்கே அது ஆதாரம் என்பதால் அல்ல, மக்கள் இன்னும் தேசிய (இன) உணர்வு பெற்று போராடாமல் இருப்பதால்தான். எனவே தமிழகத்தில் பலமான தன்னுரிமை இயக்கம் கட்டப்பட்டால் இந்திய ஆளும் வர்க்கங்கள் மேற்கூறிய இரு சாத்தியப்பாடுகளில் ஒன்றை நிறைவேற்றுவது சாத்தியமே. இதுதான் 'கொள்கைப் பட்டயக்'காரர்களின் கோட்பாடு. மக்கள் போராட்டங்களுக்குப் பின்னும் ஒரு வேளை ஆளும் வர்க்கங்கள் தன்னுரிமையை மறுத்துவிட்டால் அப்போது தேசிய விடுதலைப் புரட்சியை முன்னெடுப்போம் என்று இந்தப் பட்டயக்காரர்கள் கூறலாம். இப்படித்தான் அமைதிவழியில் புரட்சிக்கு முயல்வது முடியாவிட்டால் ஆயுதப் புரட்சி செய்வது என நம்பூதிரிக் கும்பல் பசப்பி வருகிறது. நாம் அவர்களிடம் கேட்கும் கேள்வி இதுதான். இந்திய ஆளும் வர்க்கங்களைப் பற்றிய உங்கள் மதிப்பீடு என்ன? நம்பூதிரி பாட் புரட்டல்வாதிகளிடமிருந்து பெற்றுக் கொண்ட மதிப்பீடே பட்டயக்காரர்களின் மதிப்பீடு. அதுதான் அவர்களுடைய கோட்பாட்டிற்கு ஆதாரம். புரட்டல்வாதிகளின் மதிப்பீட்டிலிருந்து கோட்பாடுகளை உருவாக்கிக் கொண்டவர்கள் அவர்களைவிட புரட்சிக்காரர்களாய் இருக்கமுடியும் என்று ஆசைப்படக்கூடாது.

படிப்பகம்

www.padippakam.com



தேசிய விடுதலை இயக்கம் தமிழகத்தில் ஒரு தீர்மானகரமான சக்தியாக வளர்ச்சியடையும் நிலை தோன்றும்போது ஒருவேளை இந்திய ஆளும் வர்க்கங்கள் தமது சுரண்டல் ஆதிக்கத்தைத் தொடர்ந்து பாதுகாத்துக் கொள்வதற்காக இந்த தன்னுரிமைக்காரர்களிடமிருந்து மகாத்மாக்களைக் கண்டறிந்து ஒரு உடன்பாட்டுக்கு வரலாம். ஆனால் அந்த உடன்பாடு வரலாற்றில் ‘துரோகம்’ என்று குறிக்கப்படுமே தவிர புரட்சி என்று குறிக்கப்படாது.

தன்னுரிமை என்பது இரண்டு சாத்தியப்பாடுகளை கொண்டது ஒன்று, பிரிந்துபோகும் உரிமையுடன் ஒரு கூட்டரசில் நீடிப்பது. இரண்டு, விடுதலைபெற்று தனியரசு அமைப்பது. ஒரு பல்தேசிய அரசில் ஒடுக்குமுறைக்கு உள்ளாகி இருக்கும் ஒவ்வொரு தேசிய இனமும் இந்த இரு சாத்தியப்பாடுகளில் ஒன்றைத் தேர்வு செய்யவேண்டும். பிரிந்துபோகும் உரிமையுடன் ஒரு கூட்டரசு அமைப்பது சாத்தியமில்லாதபோது தேசிய விடுதலைதான் அதன்முன் உள்ள ஒரே வழி.

இந்தியாவைப் பொருத்தவரை இந்திய ஆளும் வர்க்கங்களின் உயிர் வாழ்க்கை தேசிய இன ஒடுக்குமுறையையே ஆதாரமாகக் கொண்டிருப்பதாலும் இங்கு ஒடுக்கும் தேசிய இனமோ அதில் ஒடுக்கபபடும் தேசிய இனங்களின் தன்னுரிமையை அங்கீகரிக்கும் பலம் வாய்ந்த பாட்டாளி வர்க்கக் கட்சியோ இல்லாததாலும் இங்கு பிரிந்து போகும் உரிமையுடன் தேசிய இனக் குடியரசுகளின் ஒரு கூட்டரசு என்ற திட்டத்திற்கு வாய்ப்பே இல்லை இந்நிலையில் இங்கு ஒடுக்கப்படும் தேசிய இனம் ஒவ்வொன்றுக்கும்—தமிழ் தேசிய இனத்திற்கும் தன்னுரிமை என்பது தேசிய விடுதலையின் மூலம் தனி அரசு அமைப்பது என்பதைத் தவிர வேறு எதுவும் இல்லை.

எனவே தமிழக விடுதலைப்புரட்சி என்ற முழக்கத்தை ‘தீவிரவாதம்’, ‘தாவல்’ என்று விமர்சிப்பதும் அதற்கு மாற்றாக, ‘தமிழ்தேசத் தன்னுரிமை’ என்ற சட்டவாத முழக்கத்தை முன்வைத்து அதை ‘தன்னுரிமைப் புரட்சி’, ‘தமிழகப் புரட்சியின் மறுபெயர்’ என்றெல்லாம் வர்ணிப்பதும் வெறும் புரட்டலேயாகும்.

படிப்பகம்

www.padippakam.com

# தேசிய விடுதலைப் புரட்சியும் - சாதி ஒழிப்பும்

## (தாழ்த்தப்பட்டோர் தலைமை பற்றி)

தேசிய விடுதலையிலும், தாழ்த்தப்பட்ட மக்களின் விடுதலையிலும் அக்கறை கொண்ட சிலர் 'தாழ்த்தப்பட்டோர் தலைமை' என்ற கருத்தை சமீப காலமாக முன்வைத்து வருகிறார்கள்.

பாட்டாளி வர்க்கத் தலைமைக்கு மாற்றீடாக 'தாழ்த்தப்பட்டோர் தலைமை' என்ற கருத்தை அவர்கள் முன்வைப்பதற்கு காரணம் என்ன? பாட்டாளி வர்க்கத் தலைமையிலிருந்து 'தாழ்த்தப்பட்டோர் தலைமை' எவ்விதம் வேறுபடுகிறது?

தாழ்த்தப்பட்டோர் தலைமைக்கு சாராம் சமாகப் பின்வரும் காரணங்களைக் கூறுகிறார்கள்:

பிற நாடுகளைப் போல் அல்லாது இங்கு சமுதாயம் சாதிய சமுதாயமாக உள்ளது. சாதியை ஒழிக்காமல் மக்களை தேசிய விடுதலைப் புரட்சிக்கு அணிதிரட்ட முடியாது. மேலும் எந்த ஒரு சமுதாயப் புரட்சியும் சாதிய ஒழிப்பை உள்ளிட்டதாகவே இருக்க வேண்டும். இதற்குப் பாட்டாளி வர்கக்த் தலைமை போதுமானதல்ல. சாதியத்தால் ஒடுக்கப்பட்ட மக்களின் தலைமையில்லாமல சாதியத்தை ஒழிக்க முடியாது. எனவே தாழ்த்தப்டோர் தலைமை என்பது அவசியமாகும.

அதாவது, தாழ்த்தப்பட்டோர் தலைமை என்பதில் மையமாக எழுப்பப்படும் பிரச்சினை சாதி ஒழிப்பு என்பதே. பட்டாளி வர்க்கத் தலைமை இதற்குப் போதுமானதல்ல என்ற கருத்தின் அடிப்படையிலேயே தாழ்த்தப்பட்டோர் தலைமை என்ற கருத்தை முன் வைக்கிறார்கள்.

எனவே பாட்டாளி வர்க்கத் தலைமை மற்றும் சாதி ஒழிப்பு பற்றி முதலில் பரிசீலித்து விட்டு பின்னர் அதிலிருந்து தாழ்த்தப்பட்டோர் தலைமையின் பரிந்துரையாளர்கள் எப்படி வேறுபடுகிறார்கள் என்பதைப் பார்ப்போம.

ஒவ்வொரு சமுதாயமும் ஒரு உற்பத்தி முறையைக் கொணடிருக்கிறது. ஒவ்வொரு உற்பத்தி முறையும் ஒரு வர்க்கத் தலைமையைக் கொண்டிருக்கிறது. உதாரணமாக, முதலாளித்துவ சமுதாயம் முதலாளித்துவ உற்பத்தி முறையையும் முதலாளித்துவ உற்பத்தி முறை முதலாளிய வர்க்கத்தின் தலைமையையும் கொண்டிருக்கிறது. இதன் மூலம் முதலாளித்துவ சமுதாயத்தின் தலைமையாக முதலாளி வர்க்கம் திகழ்கிறது. அதாவது முதலாளிய உற்பத்தி முறையில் பல்வேறு வர்க்கங்கள் ஈடுபட்டிருந்தாலும் முதலாளி வர்க்கமே தலைமை வர்க்கமாகும். அதே போல சோசலிச சமுதாயம் சோசலிச உற்பத்தி முறையைக் கொண்டது. அந்த உற்பத்திமுறையில் பல்வேறு வர்க்கங்கள் பங்கு கொணட போதும் அதற்குத் தலைமையளிப்பது பாட்டாளி வர்க்கமே. இதன்மூலம் சோசலிச சமுதாயத்தின் தலைமையாக பாட்டாளி வர்க்கம் திகழ்கிறது.

எனவே சமுதாய மாற்றம் என்பது உற்பத்தி முறையை மாற்றுவது அதன்மூலம் சமுதாயத்திற்கு தலைமையளிக்கும வர்க்கத்தை மாற்றுவது ஆகும். ஒரு கட்சி சமுதாய மாற்றத்திற்காகப் பணியாற்றுகிறது என்று சொல்லும்போது அது சமுதாயத்தின் உற்பத்தி முறையையும் அதன் மூலம் அதன் தலைமையளிக்கும் வர்க்கத்தையும் மாற்றுவதற்காக பணி செய்கிறது என்று பொருளாகும்.

படிப்பகம்

www.padippakam.com



இதுவே அக்கட்சியின் வர்க்கத் தன்மையையும புரட்சித் தலைமையையும் தீர்மானிக்கிறது. உதாரணமாக ஒரு கட்சி முதலாளிய உற்பத்தி முறைக்காகப போராடும் திட்டத்தைக் கொண்டு செயல்படுமானால் அக்கட்சி முதலாளிததுவக் கட்சி என்றும, அப்புரட்சியின தலைமை முதலாளி வர்க்கத் தலைமை என்றும கூறப்படும ஒரு கட்சி புதிய ஜனநாயக-சோசலிச உற்பத்தி முறையை நோககம், திட்டமாகக் கொண்டு செயல்படுமானால் அக்கட்சி பாட்டாளி வர்க்கக் கட்சி என்றும் அப்புரட்சியின் தலைமை பாட்டாளி வர்க்கம என்றுப கூறப்படும். சமுதாயத்தின் அடுத்த கட்ட உற்பததி முறைக்காகப் போராடும் கட்சிகள் முற்போக்கான கட்சிகள் என்றும், பழைய பிற்போக்கான உற்பத்தி முறைக்காகப் போராடும் கட்சிகள் பிற்போக்குக் கட்சிகள் என்றும் கூறப்படும்.

இன்று இந்தியாவில் தரகு முதலாளித்துவ-அரைநிலப்பிரபுத்துவ உற்பத்தி முறை நிலவுகிறது. இதற்கு தரகு முதலாளித்துவ நிலப்பிரபுத்தவ சக்திகள் தலைமையளிக்கின்றன. இந்த உற்பத்தி முறையைக் கட்டிக் காப்பதற்காக நிற்கும் கட்சிகள் தரகுமுதலாளித்துவ- நிலப்பிரபுத்துவக் கட்சிகளாகும்.

தரகு முதலாளித்துவ-அரைநிலப்பிரபுத்துவ உற்பத்திமுறைபிற்போக்கானது, தகர்த்தெறியப்பட்டு இதைவிட முற்போக்கான தேசிய தொழிற் உற்பத்தியால் மாற்றீடு செய்யப்பட வேண்டியது. இதற்கு இந்திய தரகு-பார்ப்பனிய ஏகாதிபத்தியத்திடமிருந்து ஒவ்வொரு தேசிய இனமும விடுதலைபெற்று அவற்றின தேசிய அரசுகள் அமைவது அவசியமாகும். இத்தகைய தேசிய அரசுகள் தரகு-முதலாளித்துவ, அரை நிலப்பிரபுத்துவ உற்பததி முறையை முற்றாக அகற்றிவிட்டு தேசியத் தொழிற் உற்பத்தியை முதலாளித்துவ முறையிலோ, புதிய ஜனநாயக-சோஷலிச முறையிலோ கட்டியமைக்கலாம்.

தேசியத் தொழிற்உற்பத்தியை முதலாளித்துவ முறையில் கட்டியமைப்பதை நோக்கமாகக் கொண்டு தேசிய விடுதலைக்கு-தேசிய அரசுக்கு ஒரு கட்சி போராடுமானால் அந்தக் கட்சி முதலாளித்துவக் கட்சியாகும். அது நடத்த விரும்பும் புரட்சி முதலாளித்துவ வர்க்கத் தலைமையிலானதாகும். இதற்கு மாறாக தேசிய தொழில் உற்பத்தியை புதிய ஜனநாயக-சோசலிச முறையில் கட்டியமைக்கும நோக்கம், திட்டத்துடன் தேசிய விடுதலைக்கு-தேசிய அரசுக்கு ஒரு கட்சி போராடுமானால் அந்தக் கட்சி பாட்டாளி வர்க்கக் கட்சியாகும். அது நடத்த விரும்பும் புரட்சி பாட்டாளிவர்க்க தலைமையிலான தாகும்.

எனவே ஒரு புரட்சியில் தலைமை என்பது அப்புரட்சியின்மூலம் எத்தகைய உற்பத்தி முறை கட்டமைக்கப்படவிருக்கிறது என்பதோடு தொடர்புடையதாகும்.

தரகு முதலாளித்துவ-அரைநிலப்பிரபுத்துவ உற்பத்தி முறையைத் தேசியத் தொழிற் உற்பத்தியால் மாற்றீடு செய்வதற்கு முதலாளித்துவ உற்பத்திமுறை, புதிய ஜனநாயக-சோசலிச உற்பத்தி முறை ஆகிய இருமுறைகளைத் தவிர மூன்றாவது உற்பததி முறை எதுவும் இல்லாததால் புரட்சிக்குத் தலைமை முதலாளி வர்க்கமா? பாட்டாளி வர்க்கமா? என்பது மட்டுமே விவாதத்துக்குரியதாகும்.

மார்க்சிய-லெனியவாதிகள் புதிய ஜனநாயக சோசலிச உற்பத்திமுறையை — சமுதாயத்தை நோக்கம், திட்டம் கொள்கையாகக் கொண்டு செயல்படுவதால் அவர்கள் தமது கட்சியைப் பாட்டாளி வர்க்கக் கட்சி என்றும் தாம நடத்தும் புரட்சியை பாட்டாளி வர்க்கத் தலைமையிலான புரட்சி என்றும் உறுதிபடக் கூறுகிறார்கள். அவர்களுக்கு வழிகாட்டும் தத்துவமாக மார்க்சிய-லெனினியம் இருப்பதால் அதைப் பாட்டாளி வர்க்கத் தத்துவம என்கிறார்கள்.

இப்போது சாதி ஒழிப்புப் பிரச்சினையைக் கவனிப்போம். தேசிய விடுதலைப் புரட்சியின் மூலம் புதிய ஜனநாயக-சோசலிச சமுதாயத்தைக் கட்டமைக்கும் புரட்சி பாட்டாளி வர்க்கத் தலைமையிலான புரட்சி. இத்துடன் சேர்ந்து சாதி ஒழிப்புக் கடமை எவ்வாறு நிறைவேற்றப்படுகின்றது?

சாதியை ஒழிக்க வேண்டுமானால் இரண்டு பணிகள் நிறைவேற்றப்பட வேண்

படிப்பகம்

www.padippakam.com



டும். முதலாவது, சாதிய உறவுகளால் பயன் பெறும் சாதிய ஆதிக்கச் சக்திகள் தனிமைப் படுத்தப்பட்டு சாதி வேறுபாடற்ற முறையில் உழைக்கும் மக்கள் ஓரணியில் திரட்டப்பட வேண்டும். இது அரசியல் பணி. இரண்டாவது, சாதியம் நிலவுவதற்கான பொருளாதார அடித்தளம் ஒழிக்கப்பட வேண்டும். இது பொருளாதார அரங்கிலான பணி.

பின்தங்கிய நிலப்பிரபுத்துவ மற்றும் முதலாளியத்துக்கு முந்திய உற்பத்தி உறவுகளே சாதியம் தொடர்ந்து நீடித்திருப்பதற்கானப் பொருளாதார அடிப்படையாக இருக்கின்றன. தொழிற்துறை உற்பத்தி பெருமளவுக்கு வளர்ச்சியடைந்து மிகப் பெரும்பான்மையான மக்கள் அவ்வுற்பத்தியில் ஈடுபடுகின்றவர்களாக மாறும் போதுதான் சாதிய உறவுகள் படிப்படியாக தளர்ந்து இறுதியில் ஒழியும். ஆனால் இன்று தொழிற்துறை வளர்ச்சி என்பது தரகு முதலாளித்துவ வளர்ச்சியாகவே இருப்பதால் மிகப் பெரும்பான்மையான உழைக்கும் மக்கள் தொழிற்துறை உறவுக்குள் ஈர்க்கப்படாமலேயே விட்டு வைக்கப்பட்டிருக்கிறார்கள். பெருமளவு மக்கள் முன்னேறிய தொழிற்துறை உற்பத்தியில் ஈர்க்கப்பட வேண்டுமானால் தரகு முதலாளித்துவ—அரை நிலப்பிரபுத்துவ உற்பத்திமுறை முற்றாக ஒழிக்கப்பட்டு தேசிய தொழிற்உற்பத்தி கட்டற்ற முறையில் வளர்க்கப்பட வேண்டும். இதை ஒரு தேசிய விடுலைப் புரட்சி சாதிக்கும். அதாவது சாதியம் நிலவுவதற்கானப் பொருளாதார அடித்தளத்தை நொறுக்கி எறியும் பணியை தேசிய விடுலைப் புரட்சி நிறைவேற்றும்.

சாதி ஆதிக்கச் சக்திகளைத் தனிமைப் படுத்த உழைக்கும் மக்களை ஓரணியில் அணி திரட்டும் பணி எவ்வாறு நிறை வேறும்?

உழைக்கும் மக்கள் சாதிய ஒடுக்கு முறைக்கு மட்டும் அல்லாமல் சாதி வேறுபாடற்ற முறையில் தேசிய ஒடுக்குமுறைக்கும் உள்ளாகி இருக்கிறார்கள். எனவே ஒரு சரியான தேசியத் திட்டத்தின் அடிப்படையில் தேசிய விடுதலை மற்றும் தேசியக் கோரிக்கைகளை முதன்மைப்படுத்தி நடத்தப்படும் போராட்டங்களை உழைக்கும் மக்கள் மத்தியில் கட்டமைப்பதன் மூலம் அவர்களை சாதிவேறுபாடற்ற முறையில் ஒரு முகாமில் அணிதிரட்ட முடியும். இது சாதி ஆதிக்கச் சக்திகளை மககளிடமிருந்து தனிமைப்படுத்தும். அதாவது சாதி ஆதிக்கச் சக்திகளை தனிமைபடுததி உழைக்கும மக்களை ஓரணியில் திரட்டுவதற்கு பலமான தேசிய இயக்கம் கட்டப்படுவது அவசியமாகும்.

இவ்வாறு ஒரு பலமான தேசிய இயக்கத்தின் மூலம் சாதியாதிக்கச் சக்திகளைத் தனிமைப்படுத்துவது; தேசிய விடுதலைப் புரட்சியின் மூலம் சாதியத்தின் பொருளாதார அடித்தளத்தை தகர்த்தெறிவது; இதுதான் சாதியத்தை ஒழிப்பதற்கான வழியும் தேசிய விடுதலைப் புரட்சிக்குப் பாட்டாளிவர்க்கம தலைமையளிப்பது பற்றிய கோட்பாடும் ஆகும்.

இப்போது 'தாழ்த்தப்பட்டோர்' தலைமையின் பரிந்துரையாளர்கள் இதில் எங்கே வேறுபடுகிறார்கள் என்று பார்ப்போம்.

முதலாவதாக: சாதியின்பெயரால் பிரிந்து கிடக்கும் மக்களை தேசிய விடுதலைக்கு ஒன்றுபடுத்த சாதி ஒழிப்பு அவசியம் என்கிறார்கள். சாதியை ஒழிக்க வேண்டுமானால் முதலில் சாதியாதிக்கவாதிகள் அரசியல் ரீதியில் தனிமைப்படுத்தப்பட்டு உழைக்கும் மக்கள் ஒன்றிணைக்கப்பட வேண்டும். அடுத்து சாதியாதிக்கத்துக்கான பொருளாதார அடித்தளம் தகர்க்கப்பட்டு தேசியப் பொருளாதாரம் கட்டமைக்கப்பட வேண்டும். முதலாவது ஒரு தேசியத்திட்டத்தை முன் வைத்து அதன் அடிப்படையில் ஒரு பலம் வாய்ந்த தேசிய இயக்கத்தைக் கட்டமைப்பதன் மூலமும் இரண்டாவது ஒரு தேசிய விடுதலைப் புரட்சியை நிறைவேற்றுவதன் மூலமுமே சாதிக்க முடியும் என்பதை அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. தேசிய விடுதலைப் புரட்சிக்கு முன்னிபந்தனையாக அவர்கள் சாதிய ஒழிப்பைப் பற்றி பேசுவதில் சாதி ஒழிப்புக்கு ஒரு புரட்சியின் தேவையை மறுக்கும் சீர்திருத்தவாதம்தான் இருக்கிறது.

இரண்டாவதாக: ஒரு தேசிய இயக்கம் கட்டியமைக்கப்படுவதன் சாத்தியப்பாட்டை

படிப்பகம்

www.padippakam.com



அவர்கள் மறுக்கிறார்கள். 1938, 1965ஆம் ஆண்டுகளைப் போலன்றி இன்று இந்தி, ஆங்கில மொழிகளை உழைக்கும் மக்களே ஏற்றுக்கொள்ளும் உணர்வில் இருப்பதால் தேசிய இயக்கம் கட்டமைப்பது சாத்திய மில்லை என்கிறார்கள். இந்தி, ஆங்கில மொழிகளை உழைக்கும் மக்களே ஏற்றுக் கொள்ளும் உணர்வில் இருக்கிறார்கள் என்று வாதத்திற்கு ஏற்றுக்கொண்டாலும் அது உழைக்கும் மக்கள் மீதான தேசிய ஒடுக்குமுறையை மறுப்பதற்கான சான்றோ, தேசிய இயக்கம் கட்டும் தேவை இல்லை என்பதற்கான சான்றோ அல்ல. மாறாக, ஒரு தேசிய திட்டத்தின் அடிப்படையில் இன்னும் துரிதமாக மிகுந்த முக்கியத்துவம் கொடுத்து உழைக்கும் மக்களிடம் தேசிய இயக்கத்தைக் கட்டும் அவசியத்தையும், சாத்தியப்பாட்டையும் உணர்த்தும் சான்றே ஆகும். உண்மையில் அன்னிய மொழிகளை மக்கள் ஏற்றுக் கொண்டுவிட்டார்கள் என்பது ஆளும்வர்க்கத்தின் பிரச்சாரம் ஆகும்.

மூன்றாவதாக: தமிழகத்தில் இருக்கும் தெலுங்கு பேசும் மக்கள் இங்கு தேசிய இயக்கத்தைக் கட்டத் தடை என்பதாக முன் வைக்கிறார்கள். தெலுங்கு மற்றும் பிற மொழி பேசும் உழைக்கும் மக்களுக்கு தமிழ்த் தேசிய விடுதலை எவ்விதத்திலும் எதிரான தல்ல. மாறாக அவர்களுடைய நலனுக்கும அது அவசியமானதாகும். ஆளும்வர்க்கங்கள் தேசிய விடுதலை இயக்கத்தைச் சீர்குலைப்ப தற்காக இவ்வேறுபாட்டை ஊதிப்பெருக்கி பிரச்சாரம் செய்து வருகின்றன. தமிழ்தேச விடுதலைக்கு அனைத்து மக்களையும் அணி திரட்டும் ஒரு தேசிய இயக்கத்தை கட்டு வதற்குத் தடையாக இந்த வேறுபாட்டை முன்வைப்பது ஆளும்வாகக பிரச்சாரத்திற்குப் பலியாவதாகும்.

நான்காவதாக: சாதி ஒழிப்புக்கு ஆதிக்கச் சாதியின் பொருளாதார அடித்தளத்தையும், அரசியல் ஆதிக்கத்தையும் தகர்த்தெறிய வேண்டும் என்கிறார்கள். இதற்கு என்ன வழி? தாழ்த்தப்பட்ட மக்களின் சாதி சங்கங் களைக் கட்டி ஆதிக்கச் சாதிக்கு எதிராகப் போராடுவதுதான். இது ஆதிக்கச் சாதி யில் இருக்கும் வர்க்க வேறுபாட்டை மறுப்பதும் ஆதிக்கச் சாதியில் இருக் கும் உழைக்கும் மக்களை சாதியாதிக்க வாதிகளுக்குப் பலியாக்கி சாதிவேறுபாடற்ற முறையில் உழைக்கும் மக்களை ஓரணியில் திரட்டுவதற்கு எதிராக நிற்பதும் ஆகும். மேலும் தாழ்த்தப்பட்ட மக்களின் சாதிச் சங்கங்களையும் அவற்றின போராட்டங் களையும் சாதி ஒழிப்புக்கான அமைப்புகள், போராட்டங்கள் என்ற அளவுக்கு மிகைப் படுத்துவதாகும். தாழ்த்தப்பட்ட மக்களின் சாதிச் சங்கங்கள் சாதிய ஒடுக்குமுறைக்கு எதிராக விழிப்புணர்வு ஏற்படுத்துகின்ற அமைப்புகளாக, தற்காப்புக்கான அமைப்பு களாக இருக்கமுடியுமே தவிர சாதி ஒழிப்புக கான அமைப்புகளாக இருக்க முடியாது. அவ்வாறு இருக்க வேண்டுமாயின் அவை தேசிய இயக்கத்தின் ஒரு பகுதியாக மாறி, தாழ்த்தபபட்ட மக்களுக்கு தேசிய விழிப் புணர்வு ஊட்டுகின்ற, தேசிய ஒடுக்கு முறைக்கு எதிராகப் போராடுகின்ற அமைப்பு களாகச் செயல்படவேண்டும். அவ்வாறின்றி அவை சாதி ஒழிப்பு அமைப்புகளாக, ஆதிக்கச் சாதிகளின் அரசியல் பொருளாதார ஆதிக் கத்தை தகர்ப்பதற்கான அமைப்புகளாக சித்த ரிக்கப்படுமானால் அவை உழைக்கும் மக்களின் ஒற்றுமைக்கு எதிரானதாகவே இருக்கும்.

'தாழ்த்தப்பட்டோர் தலைமையின்' பரிந்துரையாளர்கள் இப்படித்தான் பாட் டாளி வர்க்கத் தலைமையிலிருந்து வேறுபடு கிறார்கள்.

சாராம்சத்தில் தாழ்த்தப்பட்ட தலைமை யின் பரிந்துரையாளர்கள் தேசிய விடுதலை பற்றியும், அதற்கான உழைக்கும் மக்களின் ஒற்றுமைபற்றியும் என்னதான் பேசினாலும் தேசிய விடுதலைக்கு முன்நிபந்தனையாக சாதி ஒழிப்பையும் தேசிய இயக்கத்திற்கு மாறாக சாதிப்போராட்டங்களையும் முன் வைப்பதன் மூலம் தேசிய விடுதலையையும், தேசியஇயக்கத்தையும் கைவிட்டு உழைக்கும் மக்களின் ஒற்றுமைக்கு எதிரான நடைமுறை கொண்டவர்களாகவே வெளிப்படுகிறார்கள். ○

படிப்பகம்

www.padippakam.com

# அம்பேத்கார் - பெரியாரின் வரலாற்றுப் பாத்திரமும் கம்யூனிஸ்டுகளும்

கம்யூனிஸ்டுகள் வர்க்கப் போராட்டத்திற்கு உணர்வுப்பூர்வமாக தலைமையளிப்பதன் மூலம் சமுதாயமாற்றத்தைச் சாதிக்கும் கொள்கை கொண்டவர்கள். இதற்கு ஏற்கனவே சமுதாயத்தில் நிகழ்ந்துகொண்டிருக்கும் வர்க்கப்போராட்டத்தையும் அதன் கடந்தகால வரலாற்றையும் புரிந்து கொள்வது அவசியமாகும்.

ஏடறிந்த வரலாறெல்லாம் வர்க்கப் போராட்டங்களின் வரலாறே என மார்க்சியம் கூறுகிறது. ஆனால் வர்க்கப் போராட்டம் எப்போதும் அதன் தூய வடிவில் நடைபெறுவதில்லை. ஜனநாயகத்துக்கானப் போராட்டம், தேசிய விடுதலைப் போராட்டம், பாசிச எதிர்ப்புப் போராட்டம், ஏகாதிபத்திய எதிப்புப் போராட்டம் என்றவாறு பல்வேறு வடிவங்களில்தான நடைபெற்று வருகிறது. இது ஒவ்வொரு நாட்டிற்கும் காலத்திற்கும் மாறுபடககூடியதாகும்.

எனவே ஒரு நாட்டின் வர்க்கப் போராட்டத்திற்குத் தலைமையளிக்க வேணடுமானால் மார்க்சிய அறிவோடு அந்நாட்டின் வர்க்கப் போராட்ட வரலாறு பற்றிய அறிவும் அதன் குறிப்பான வடிவத்தில் அவசியமாகும்.

இந்திய கம்யூனிஸ்டுகள் இந்த இரண்டு விசயங்களிலுமே தவறிழைத்தார்கள். அவர்கள் மார்க்சியத்தைப் புரிந்து கொள்வதிலும், இந்தியாவின் வர்க்கப் போராட்ட வரலாற்றை அதன் குறிப்பான வடிவத்தில் புரிந்து கொள்வதிலும் தவறிழைத்தார்கள். இதன் விளைவாக அவர்கள் கடந்த எழுபதாண்டு காலமாக உறுதியுடனும் மிகுந்த நம்பிக்கையுடனும் போராடி வந்திருந்தபோதிலும் வர்க்கப் போராட்டத்திற்குத் தலைமையளித்து ஒரு சமுதாய மாற்றத்தைச் சாதிப்பதில் வெற்றிபெற முடியவில்லை.

தொடக்கத்திலிருந்தே அவர்கள் இந்தியாவை ஒரு தேசம் என்று கருதியே தமது வேலைத்திட்டத்தை வகுத்துக் கொணடிருக்கிறார்கள். இது தேசம்பற்றிய ஸ்டாலின் வரையறுப்புக்கு எதிரானது; காலனி, அரைக்காலனி தேசம், ஏகாதிபததிய எதிர்ப்பு, நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு தேசம் என்கிற இனக்கூறு இல்லாத தேசம்பற்றிய கோட்பாட்டுக்கு உட்பட்டது; இக்கோட்பாட்டின் விளைவாக இந்தியா ஒரு பல் தேசிய அரசு சமூகமாய் இருந்தும் கட்சியால் தொடர்ந்து ஒரு தேசிய சமூகமாகக் கருதப்பட்டுவிட்டது. இது ஏகாதிபத்தியப் பொருளாதாரவாதமேயன்றி மார்க்சியமல்ல. 1943-53 வரையிலும் பின்னர் இ. பொ. க (மா—லெ) யும் ஸ்டாலின் வரையறுப்பின் அடிபபடையிலான தேசிய இனங்களையும் அவற்றின் சுய நிர்ணய உரிமையையும் அங்கீகரித்தன எனினும் அது தேசத்திற்குள் தேசம் எனப தாக, அதனால் ஏகாதிபத்திய வாதமாக இருந்ததேயனறி, ஏகாதிபத்தியப் பொருளாதாராவாதத்திலிருந்து விடுபட்டதாக இல்லை. அதாவது ஏகாதிபத்திய எதிர்ப்பு நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு இந்திய தேசம என்ற கருத்திலிருந்து விடுபட்டதாக இல்லை.

கடந்த எழுபதாண்டுகளாக கட்சி இந்த ஏகாதியத்தியப் பொருளாதார வாததனதயே மார்க்சியம் என நம்பி தத்துவ அடிப்படை



படிப்பகம்

www.padippakam.com



யாகக்கொண்டு தனது செயல்பாடுகளை அமைத்துக்கொண்டிருக்கிறது. இதன் விளைவாக அது இந்திய வரலாற்றின்—வர்க்கப் போராட்டத்தின் சிறப்புக்கூறுகளை இறுதி வரை பற்றிக் கொள்ளவே இல்லை.

இந்தியாவில் பார்ப்பனிய எதிர்ப்பையும், தேசிய விடுதலையையும் புறக்கணித்துவிட்டு இங்கு நடக்கும் வர்க்கப் போராட்டத்தை ஒருவர் புரிந்துகொள்ள முடியாது. ஆனால் வர்க்கப்போராட்டத்திற்குத் தலைமையளிப்பதையே தமது கொள்கை, கோட்பாடாகக் கொண்டிருக்கும் கம்யூனிஸ்டுகள் கடந்த எழுபது ஆண்டுகளாக இப்பிரச்சினைகளைப் புறக்கணித்தே வந்திருக்கிறார்கள். பார்ப்பனிய பிரச்சினையை வெறும் சாதிப் பிரச்சினையாகவும், தேசிய விடுதலையை வெறும் இனவாதமாகவும் பிரிவினைவாதமாகவுமே சித்தரித்து வந்திருக்கிறார்கள். இந்தியாவையே ஒரு தேசம் என்று கருதிய ஏகாதிபத்தியப் பொருளாதாரவாதத்தின் விளைவே இது.

கடந்த எழுபது ஆண்டுகளாக கட்சி ஒரு ஜனநாயகப் புரட்சித்திட்டத்துடன் செயல்பட்டு வந்திருக்கிறது. ஆனால் அந்த ஜனநாயகப்புரட்சி எந்த தேசிய இயக்கத்துடனும் இணைக்கப்படாததால் வெற்றி பெறவில்லை. அதை இந்தியத் தேசியத்துடன் இணைத்தவர்கள் தரகுப்பார்ப்பனிய-ஏகாதிபத்தியவாதிகளின ஆதரவாளர்களாய் திரிபுவாதிகளாய் சீரழிந்தார்கள். இரட்டை தேசியக் கொள்கையை ஏற்றுக் கொண்டவர்கள்— இந்தியத் தேசியததுடன் தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையை ஏற்றுக் கொண்டவர்கள்—தேசிய சூனியவாதிகளாய் மக்களிடமிருந்து தனிமைப்பட்டார்கள். இதன் விளைவாக கடந்த எழுபது ஆண்டுகால உறுதியும், அாப்பணிப்பும கொணட கம்யூனிஸ்டுகளின் செயல்பாடுகள் இந்திய வர்க்கப் போராட்டக் களத்தில் அவர்கள் தலைமை பெற உதவவில்லை.

ஆனால் அம்பேத்காரும், பெரியாரும் மார்க்சிய—லெனினியத்தை ஏற்றுக் கொணடவர்கள் அல்லர். வர்க்கப்போராட்டத்திற்கு உணர்வுப் பூர்வமான தலைமையளிப்பதன் மூலம் சமுதாய மாற்றத்தைச் சாதிக்க வேண்டும் என்கிற கொள்கையோ, கோட்பாடோ கொண்டவர்களும் அல்லர். எனினும் இந்தியாவில் நடக்கும் வர்க்கப் போராட்டத்திலிருந்து புறக்கணிக்கமுடியாத பார்ப்பனிய எதிர்ப்பு மற்றும் தேசிய விடுதலைப் பிரச்சினைகளில் செல்வாககான பாத்திரமாற்றியிருக்கிறார்கள்.

தாழ்த்தப்பட்ட மக்களின் விடுதலைக்காகவே தன்னை அர்ப்பணித்துக் கொண்ட அம்பேத்கார் தன் வாழ்நாள் முழுவதும் பார்ப்பனியத்திற்கு எதிராகப் போராடி வந்திருக்கிறார். இந்து மதமே பார்ப்பனிய மதம்தான், சாதிமதம்தான் என்று கூறிய அவர் சாதியைப் புனிதப்படுத்தும் இந்து இலக்கியங்களையும், நிறுவனங்களையும் தொடர்ந்து அம்பலப்படுத்தி வந்திருக்கிறார். பார்ப்பனியம் வரலாற்றில் ஆற்றிவந்திருக்கும் எதிர்ப்புரட்சிப்பணிகளை அவர்போல் வேறொருவர் இதுவரை அம்பலப்படுத்தவில்லை. தீண்டாமை ஒழிந்த, சாதி பேதமில்லாத ஒரு ஜனநாயக இந்திய சமுதாயமே தனது இலட்சியம் எனப் பிரகடனப்படுத்திக் கொண்டிருக்கிறார். வர்ண-சாதி ஒடுக்குமுறை, தேசிய ஒடுக்குமுறை எனும் இரண்டு பக்கங்களைக் கொண்டிருக்கிற பார்ப்பனியத்தின் வர்ண, சாதி ஒடுக்குமுறைக்கு எதிரானப் போராட்டத்தில் அம்பேத்கார் தலையாய இடம் வகிக்கிறார்.

பார்ப்பனியத்தின் வர்ண சாதி ஒடுக்குமுறைக்கு எதிராக மட்டுமின்றி அதன் தேசிய ஒடுக்குமுறைக்கு எதிராகவும் போராடியவர் பெரியார். இவரும் பார்ப்பனிய மதமான இந்துமதத்தை அதன் இலக்கியங்களின் புனிதத்தை அதன் நிறுவனங்களை அம்பலப்படுத்தினார். கூடவே இந்தியத் தேசியம் என்பதே பார்ப்பனியத் தேசம்தான் என்பதையும் அம்பலப்படுத்தினார். பார்ப்பனியத்தின் தேசிய ஒடுக்கு முறையை அம்பலப்படுத்திய பெரியார் 'தமிழ்நாடு தமிழருக்கே' என தேசியவிடுதலை முழககத்தையும் எழுப்பினார்.

பார்ப்பனியத்தின் வர்ண, சாதி ஒடுக்குமுறைக்கு எதிராகப்போராடிய அம்பேத்கார்

படிப்பகம்

www.padippakam.com



இன்று தாழ்த்தப்பட்ட மக்கள் விடுதலையின் குறியீடாக முன்வைக்கப்படுகிறார். பார்ப்பனியத்தின் தேசிய ஒடுக்குமுறைக்கு எதிராக தேசிய விடுதலை முழக்கத்தை முன்வைத்த பெரியார் இன்று தமிழ்தேச விடுதலையின் குறியீடாக முன்வைக்கப்படுகிறார். அவர்களுடைய நோக்கங்கள் வெற்றி பெறவில்லை எனினும் அவர்கள் வரலாற்றில் ஏற்படுத்தியிருக்கும் செல்வாக்கு வர்க்கப்போராட்ட வரலாற்றை முன்னெடுத்துச் செல்கின்றவர்களால் புறக்கணிக்க முடியாததாகும்.

அவர்களுடைய நோக்கங்கள் — தாழ்த்தப்பட்டோர் விடுதலையும், தேசிய விடுதலையும் — வெற்றி பெறாததற்குக் காரணம் என்ன?

அம்பேத்கார் தீண்டாமை ஒழிந்த, சாதி வேறுபாடற்ற, ஒரு ஜனநாயக சமுதாயத்தை விரும்பி அதற்காகப் பார்ப்பனியத்தின் வர்ண-சாதி ஒடுக்குமுறைக்கு எதிராகப் போராடினார் எனினும் சாதி ஒழிப்பு என்பது விவசாயப் புரட்சியும் தேசிய விடுதலையும் இணைக்கப்படும் போதுதான் அதாவது, தேசியவிடுதலைப் புரட்சி மூலம்தான் சாத்தியம் என்பதை உணரவில்லை. இதன் காரணமாக அவர் இந்தியத் தேசியத்தின் ஆதரவாளராக தேசிய ஒடுக்குமுறையின் ஆதரவாளராக இருந்தார்.

பெரியார் தேசிய விடுதலைக்குக் குரல் கொடுத்தார். அதேநேரத்தில் சுயமரியாதை, பகுத்தறிவு இயக்கங்களுக்கும் அதே அளவுக்கு அல்லது இன்னும் கூடுதலாக அழுத்தம் கொடுத்தார். இவற்றில் மையமான பிரச்சினை தேசிய விடுதலையே என்பதையோ அது விவசாயப் புரட்சியுடன் இணைக்கப்பட வேண்டும் என்பதையோ அவர் உணரவில்லை. இதன் காரணமாக அவர் ஓர் தேசிய விடுதலை இயக்கத்தின்-தேசிய விடுதலைப் புரட்சி இயக்கத்தின் தலைவராக வெளிப்படவில்லை.

பார்ப்பனிய எதிர்ப்பு என்பது சாதிய ஒடுக்குமுறை எதிர்ப்பு, தேசிய ஒடுக்குமுறை எதிர்ப்பு என்கிற இரண்டு முகங்களும், தாழ்த்தப்பட்டோர் விடுதலை, தேசிய விடுதலை என்கிற இரு இலக்குகளும் கொண்டது. இவ்விரு இலக்குகளும் தேசிய விடுதலையையும் விவசாயப் புரட்சியையும் இணைத்து ஒரு தேசிய விடுதலைப் புரட்சியாய நடத்துவதன் மூலமே அடையக்கூடியதாகும்.

தேசிய விடுதலைப்புரட்சி என்பது ஏகாதிபத்திய, தரகு முதலாளித்துவ, நிலப்பிரபுத்துவ வர்க்கங்களை ஒரு முகாமிலும், தேசிய, ஜனநாயக வர்க்கங்களை அதற்கு எதிர் முகாமிலும் நிறுத்தும் ஒரு வர்க்கப் போராட்டமாகும். இந்த வர்க்கப் போராட்டமே இந்திய வரலாற்றின் இன்றைய உந்து சக்தியாகும். இதைப் புரிந்து கொள்வதற்கும், வெற்றிகரமாக கையாள்வதற்கும் மார்க்சிய-லெனினிய தத்துவம் அவசியம்.

அம்பேத்காரும், பெரியாரும் இந்திய வரலாற்றில் பார்ப்பனிய எதிர்ப்பில் செல்வாக்கு மிக்க பாத்திரமாற்றினார்கள். ஆனால் அவர்கள் வர்க்கப் போராட்டத் தத்துவமான மார்க்சிய - லெனினியத்தை ஏற்றுக் கொண்டிருக்கவில்லை. சமுதாய மாற்றத்தை வர்க்கப் போராட்டத்திற்கு உணர்வுப் பூர்வமாக தலைமையளிப்பதன் மூலம் சாதிக்க வேண்டும் என்ற கோட்பாட்டைக் கொண்டிருக்கவில்லை. இதனால் இந்தியாவில் நடைபெற்று வரும் வர்க்கப் போராட்டகளத்தில் அவர்கள் இருந்தார்கள் எனினும் அதை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்கின்றவர்களாக இல்லை.

ஆனால், ஏகாதிபத்தியப் பொருளாதார வாதத்தினால் வர்க்கப் போராட்டக்களத்தில் தலைமை இழந்த கம்யூனிஸ்டுகள் ஏகாதிபத்தியப் பொருளாதார வாதத்திலிருந்து விடுபட்டு மார்க்சிய-லெனினியத்தைப்பற்றிக் கொள்ளும் போது அதில் தலைமைப் பாத்திரம் ஆற்றமுடியும்; அப்போது அவர்கள் தமது பணியை அம்பேத்கார், பெரியாரிலிருந்தே தொடர்வதாக இருக்கும். காரணம் மார்க்சிய-லெனினிய அடிப்படையில் அவர்கள் வந்தடையும் தேசிய விடுதலைப் புரட்சி எனும் செயல் திட்டம் வர்க்கப் போராட்டத்திற்குத் தலைமையளிக்கும் திட்டம் மட்டும் அல்ல பெரியார், அம்பேத்காரின்

படிப்பகம்

www.padippakam.com



பார்ப்பனிய எதிர்ப்பை வர்க்கப் போராட்டத்துடன் இணைத்து முன்னெடுத்துச் சென்று முழுமைப்படுத்துகின்ற திட்டம் ஆகும்.

கம்யூனிஸ்டுகள் வர்க்கப் போராட்டக் களத்தில் தமது பணியை அம்பேத்கார், பெரியாரிலிருந்து தொடர்வதாயிருக்கும் என்பது இந்திய நிலைமைகளின் சிறப்புத் தன்மைகளின் காரணமாக மார்க்சிய—லெனினியத்தின் போதாமை பற்றிக் கூறுவதோ அம்பேத்கார், பெரியார் சிந்தனைகளால் அதைச் செழுமைப்படுத்த வேண்டும் என்று கூறுவதோ அல்ல. வர்க்கப் போராட்டத்திற்குத் தலைமையளிக்கின்றதும், அம்பேத்கார் பெரியாரின் பார்ப்பனிய எதிர்ப்பை முழுமைப்படுத்துகின்றதுமான தேசிய விடுதலைப் புரட்சி எனும் செயல்திட்டம் மார்க்சிய—லெனினிய தத்துவ ஒளியில் பெறப்பட்டதே. எனவே மார்க்சிய—லெனினியத்தின் போதாமை, அதை பெரியார், அம்பேத்கார் சிந்தனையால் செழுமைப்படுத்துவது என்ற பேச்சுகளுக்கெல்லாம் இடமே இல்லை.

ஆனால் சிலர் இந்திய நிலைமைகளில் மார்க்சிய — லெனினியத்தின் போதாமை பற்றியும், அதனுடன் பெரியார் அம்பேத்கார் சிந்தனைகளை 'இணைப்பது', 'உள்வாங்கிக் கொள்வது', 'செழுமைப்படுத்துவது' பற்றியும் பேசி வருகிறார்கள். காரணம் இந்தியக் கம்யூனிஸ்டுகள் இதுவரை பின்பற்றி வந்த ஏகாதிபத்தியப் பொருளாதார வாதத்தையே இவர்கள் இன்னும் மார்க்சியம் என்று கருதுகிறார்கள். இதன் காரணமாக இந்தியக் கம்யூனிஸ்டுகளின் தோல்வியை மார்க்சியத்தின் தோல்வி என்றும் மார்க்சிய — லெனினியத்தின் போதாமை என்றும் கருதுகிறார்கள்.

உண்மையிலேயே இதில் உள்ள பிரச்சினை மார்க்சிய—லெனினியத்தின் போதாமையல்ல; மாறாக மார்க்சிய-லெனினியத்தை இவர்கள் புரிந்து கொள்வதில், உள்வாங்கிக் கொள்வதில் உள்ள போதாமையேயாகும்.

இதன் காரணமாக பெரியார் அம்பேத்காரின் வரலாற்றுப்பாத்திரத்தை அங்கீகரித்து மார்க்சிய-லெனினிய தத்துவ ஒளியில் புரட்சி இயக்கத்தை முன்கொண்டு செல்லும் கடமையை நிராகரிக்கிறார்கள்.

மார்க்சிய—லெனினியத்தின் போதாமை பற்றிப் புலம்பி அதனுடன் பெரியார்-அம்பேத்கார் சிந்தனைகளை இணைத்துக் கொள்வதாகக்கூறி ஒரு கலவைவாதத்தை முன்வைக்கிறார்கள்.

இக்கலவை வாதத்தின் மூலம் அம்பேத்கார், பெரியார் சிந்தனைகளை வழிகாட்டும் தத்துவமட்டத்திற்கு உயர்த்தி அவர்களைப் பெருமைப்படுத்துவதாகக் காட்டி, வழிகாட்டும் தத்துவம் என்பதிலிருந்து மார்க்சிய-லெனினியத்தை நிராகரிக்கிறார்கள். இதன் மூலம் தத்துவ மறுப்பாளர்களாக வெளிப்படுகிறார்கள். 'தன்னுரிமைப் புரட்சியும்', 'தாழ்த்தப்பட்டோர் தலைமையும், இவர்கள் பெற்றெடுத்த குழந்தைகளே.

இவர்கள் ஏகாதிபத்தியப் பொருளாதாரவாதிகளைப் போலன்றி தேசிய விடுதலையின் ஆதரவாளர்களாக இருப்பினும், ஏகாதிபத்தியப் பொருளாதார வாதத்துக்கு எதிரான தத்துவார்த்தப் போராட்டத்தில் இந்நிலைப்பாடுகளை வந்தடைந்தவர்களாக இல்லாததால் மார்க்சிய-லெனினியத்தைப் பற்றிக் கொள்ளாதவர்களாக இருக்கிறார்கள். இதன் காரணமாக கலவை வாதத்தை முன்வைக்கும் தத்துவ மறுப்பாளர்களாக, தேசிய விடுதலைக்கு மாற்றாக தன்னுரிமையை முன்வைக்கும் சட்டவாதிகளாக, பாட்டாளிவர்க்கத் தலைமைக்குப் பதிலாக தாழ்த்தப்பட்டோர் தலைமையையும், தேசிய விடுதலைக்கு முன்நிபந்தனையாக சாதி ஒழிப்பையும் முன்வைக்கும் சாதிவாதிகளாக இருக்கிறார்கள்.

★

படிப்பகம்

www.padippakam.com

# இ.பொ.க. (மா-லெ) மற்றும் த.நா.மா.லெ.க - வின்

# தேசியக் கொள்கை குறித்து சில கேள்விகளும் பதில்களும்

● **இ. பொ. க. (மா-லெ)யின் தேசியக் கொள்கை இரட்டை தேசியக கொள்கை என்பது சரியா?**

சரியே. இக்கட்சியின் திட்டம் தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கிறது. அதே நேரத்தில் இந்தியாவில் நடைபெற்ற ஏகாதிபத்திய எதிர்ப்புப போராட்டத்தை தேசிய விடுதலைப் போராட்டம் என்று கூறுகிறது. இந்திய அரசியல் நிலைமைகளை தேசிய நிலைமைகள் என்று கட்சித் தீர்மானங்கள் வர்ணிக்கின்றன. இம்முரண்பாடு இ. பொ. க. (மா-லெ)யின் இரட்டை தேசியக கொள்கையின் வெளிப்பாடே.

● **'தேசிய விடுதலைப் போராட்டம்', 'தேசிய நிலைமைகள்' என்று கட்சித் திட்டமும் தீர்மானங்களும் குறிப்பிடுவதைக் கொண்டு இ. பொ. க (மா-லெ) இந்தியத் தேசிய மாயையிலிருந்து விடுபடவில்லை என்று கூறமுடியுமா?**

கூறமுடியாது என்று புஜ. குழு மறுக்கிறது. இவை எல்லாம் ஒரு பொதுவான, மேலோட்டமான பொருளில் கூறப்படுபவை தானேயன்றி இந்தியத் தேசிய மாயையைக் குறிக்காது என்று அது கூறுகிறது. ஆனால் பு. ஜ. குழுவின் இந்த மறுப்பு பொய்யானதும், போலியானதும் ஆகும்.

காலனி, அரைக்காலனி தேசங்கள் பற்றிக் கூறும் சமரன், முன்னோடி குழுவினர் அங்கெல்லாம் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்தின் விளைபொருளாக தேசியம் அமைகிறது என்று கூறுகின்றனர். (சமரன், செப் 1982, பக்.6) இது இந்தியாவுக்கும் பொருந்தக்கூடியதாகும். சமரன் கட்டுரைக்கு மறுப்பு எழுதிய பு.ஜ. குழுவினர் காலனி, அரைக் காலனி தேசம் பற்றிய வரையறையில் இனக்கூறு விடுபடுவதை விமர்சிக்கவில்லை. ஆனால் ஏகாதிபத்தியத்துக்கு எதிராக மட்டும் இன்றி நிலப்பிரபுத்துவத்துக்கும் எதிராக எழுச்சியுறுவதுதான் தேசியம் என்று திருத்தம கூறுகின்றனர். (பு. புயல் ஏப். 1983, பக் 17) தமது 1977 அரசியல் தீர்மானத்தில் இந்திய ''தேசியத் திட்டம் ஒன்றை முன்வைத்து ஆளும் வர்க்கங்களின் பாசிபிசத்தை முறியடிப்போம்'' என்று ஒரு தீர்மானமே நிறைவேற்றியிருக்கிறார்கள். எனவே ஏகாதிபத்திய எதிர்ப்பு நிலபிரபுத்துவ எதிர்ப்பு இந்தியத் தேசியம் என்பதில் பு.ஜ. குழுவுக்கு மாறுபாடு எதுவும் இல்லை இத்தகைய திட்டவட்டமான பொருளில்தான கட்சித் திட்டத்திலும் தீர்மானங்களிலும் இந்தியத் தேசியம் என்ற சொற்கள் ஆளப்படுகின்றனவேயன்றி பு.ஜ. குழு கூறுவதுபோல பொதுவான மேலோட்டமான பொருளில் அல்ல.

● **தேசம்பற்றிய ஸ்டாலின் வரையறுப்பு குறித்து இக்குழுக்களின் கருத்து என்ன?**

ஏகாதிபத்திய சகாப்தத்தில் தேசம் பற்றிய ஸ்டாலின் வரையறுப்பு முற்றிலும் போதாதது என்பது சமரன், முன்னோடி குழுக்களின் கருத்தாகும். தேசம் பற்றிய ஸ்டாலினுடைய ஆய்வுகள், ''உலகத்தின் ஒரே பகுதியைப் பற்றியதாகவும், ஒருவகையைச் சார்ந்த தேசத்தைப் பற்றியதாகவும், ஒரு திட்டவட்டமான சகாப்தத்தைச் சார்ந்த வளர்ந்து வரும் முதலாளித்துவ சகாப்தத்

படிப்பகம்

www.padippakam.com



தைச் சார்ந்த, ஒரு வரலாற்றுக் காலகட்டத்தைப்பற்றியதாகவும் இருந்தது'' எனவே, "காலனிய, அரைக் காலனிய உலகத்துக்கு-ஆசிய, ஆப்பிரிக்க, இலத்தீன் அமெரிக்கா முழுவதற்கும் அது முற்றிலும் போதாததாக இருந்தது" என்று(மேற்படி சமரன் கட்டுரை) அவர்கள் கூறுகிறார்கள்.

அதே நேரத்தில் கட்சித் திட்டத்தில் தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட்டிருப்பதையும் இக்குழுக்கள் ஏற்றுக்கொண்டிருக்கின்றன. இது அவர்களுடைய காலனிய, அரைக்காலனிய தேசக் கோட்பாட்டிற்கு எதிரானதாகும். தேசிய இனங்களின சுயநிர்ணய உரிமை என்பது தேசம் பற்றிய ஸ்டாலின் வரையறுப்புக்கு உட்பட்டது.

ஏகாதிபத்திய சகாப்தத்தில் தேசம் பற்றிய ஸ்டாலின் வரையறுப்பு போதுமானதல்ல என்று சமரன், முன்னோடி குழுக்கள் கூறுவதை பு ஜ குழு ஏற்றுக் கொள்ளவில்லை. அதேநேரத்தில் ஏகாதிபத்திய எதிர்ப்பு, நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு இந்தியத் தேசியம் என்ற கருத்தாக்கத்தை ஏற்றுக் கொண்டிருப்பதன் மூலம் தன்னுடைய நிலைக்கே அது முரண்படுகிறது.

- **காலனி, அரைக்காலனி நாடுகளில் ஏகாதிபத்திய எதிர்ப்பு, நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு ஆகியவற்றின் விளைபொருள் தேசியம என்று கூறுவதில் தவறு என்ன இருக்கிறது?**

தேசம பற்றிய ஸ்டாலின் வரையறுப்பை இது மறுத்துவிடுகிறது எனபதுதான் இதன் முக்கியமான தவறாகும்.

தேசம் பற்றிய ஸ்டாலின் வரையறுப்பு பிரதானமாக இரு கூறுகளைக் கொண்டதாகும் முதலாவது இனக்கூறு; இரண்டாவது சமுதாயக்கூறு. பொதுமொழி; பொது பிராந்தியம் முதலானவை இனக்கூறு. முதலாளித்துவப் பொருளாதார ஒருங்கிணைப்பு சமுதாயக்கூறு

மேலும் தேசம் பற்றிய ஸ்டாலின் வரையறுப்பின்படி தேசிய சமூகமும், அரசு சமூகமும் வெவ்வேறாகும். ஒரு பல்தேசிய அரசு சமூகம். ஒருகாலும் ஒரு தேசிய சமூகமாக முடியாது.

காலனி, அரைக்காலனி தேசம் அல்லது ஏகாதிபத்திய எதிர்ப்பு நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு தேசியம் என்ற கருத்து தேசம் பற்றிய ஸ்டாலின் வரையறுப்பின் மேற்கூறிய அம்சங்களை நிராகரித்து இனக்கூறற்ற தேசம் பற்றிய வரையறுப்பை முன் வைக்கிறது. 'தேசம் என்பது இனக்கூறற்றது; தேசிய சமூகமும், அரசு சமூகமும் வெவ்வேறு அல்ல; பல்தேசிய அரசு சமூகமாயிருப்பினும் அரசு சமூகம் அனைத்தும் தேசிய சமூகமே, காலனி, அரைக்காலனி தேசம், ஏகாதிபத்திய எதிர்ப்பு, நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு தேசியம் என்ற கருத்தாக்கம் தேசம் பற்றித் தரும் புதிய வரையறுப்பு இதுதான். இனக்கூறு இல்லாத தேசம் பற்றிய இந்த வரையறுப்பு ஜனநாயகப் புரட்சிக்கும் தேசிய உருவாக்கத்துக்கும் உள்ள தொடர்பையும், விவசாயப் புரட்சிக்கும் தேசிய இயக்கத்திற்கும் உள்ள தொடர்பையும் துண்டிக்கும் தேசிய சூனியவாதமாகும்; பல்தேசிய அரச சமூகத்தை தேசிய சமூகமாகக் காட்டும் ஏகாதிபத்தியவாதம் ஆகும்.

- **அக்டோபர் புரட்சிக்குப் பிந்திய ஏகாதிபத்திய சகாப்தத்திலும் தேசம் பற்றிய ஸ்டாலின் வரையறுப்பு பொருந்தும் என்றால் இச் சகாப்தத்தில் தேசியப் பிரச்சினையில் ஏற்பட்ட மாற்றம்தான் என்ன?**

ஏகாதிபத்திய சகாப்தத்தில், ''உலகம் முழுவதும் சில ஒடுக்கும் தேசங்களாகவும், மிகப் பல ஒடுக்கப்பட்ட தேசஙகளாகவும் பிரிந்து விட்டன" என்று லெனின (1920ல்) கூறியிருக்கிறார். ''அதற்கு முன்னால் தேசிய இனப்பிரச்சினை எனபது தேசிய இன ஒடுக்குமுறையை எதிர்ப்பது என்ற பகுதிப்பிரச்சினையாக மட்டும் இருந்தது; அதற்குப் பிறகு தேசிய இனப்பிரச்சினை என்பது ஒடுக்கப்பட்ட மக்கள், காலனிய, அரைக் காலனிய நாடுகள் ஆகியவற்றை ஏகாதிபத்திய அடிமை நுகத்தடியிலிருந்து விடுதலை பெறச் செய்தல் எனும் பொதுப்

படிப்பகம்

www.padippakam.com


பிரச்சினையாக அது மாற்றியிருக்கிறது" என்று ஸ்டாலின் கூறியிருக்கிறார்.'' தேசிய பிரச்சினையின் முக்கிய அம்சமும், சுய நிர்ணய உரிமையும் பொதுவான ஜனநாயக இயக்கத்தின் ஒரு பகுதியாக இதுவரை இருந்துவந்தது முற்றுப் பெற்றுவிட்டது. அது பொதுவாகப் பாட்டாளி வர்க்க சோசலிசப் புரட்சியின் பிரிக்க முடியாத பகுதியாக ஏற்கனவே மாறிவிட்டது'' என லெனினை மேற்கோள் காட்டி மாவோ கூறியிருக்கிறார்.

இவற்றின் மூலம் மார்க்சிய ஆசான்கள் உணர்த்துவது என்னவெனில் ஏகாதிபத்திய சகாப்தத்தில் எந்த ஒரு தேசிய, ஜனநாயக இயக்கமும் ஏகாதிபத்திய எதிர்ப்புக் கடமையை நிறைவேற்றாமல் வெற்றி பெற முடியாது; எந்த ஒரு தேசிய இயக்கமும் ஜனநாயக இயக்கமாக மட்டுமின்றி ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கமாகவும் இருக்கும்; என்பதைத்தானேயன்றி தேசம் பற்றிய ஸ்டாலின் வரையறுப்பை மாற்ற வேண்டும் என்பதையல்ல. இந்த சகாப்தத்திலும் தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையை உலகப் பாட்டாளி வர்க்க இயக்கம் வலியுறுத்தி வருவது தேசம் பற்றிய ஸ்டாலின் வரையறுப்பின் அடிப்படையிலேயாகும்.

● சீனத்தில் தேசியப் பிரச்சினைக்கு மாவோ கையாண்ட கொள்கையே எல்லா காலனி, அரைகாலனி நாடுகளுக்கும் பொருந்தும் என்பது சரியா?

ஏகாதிபத்தியத்திடமிருந்து சீனத்திற்கு விடுதலை; சீனத்திலிருக்கும் எல்லா தேசிய இனங்களுக்கும் சமத்துவம், சுயநிர்ணய உரிமை; அனைத்து தேசிய இனங்களின் ஒரு விருப்பபூர்வமான ஒன்றியக் குடியரசு என்பது மாவோ சீனத்தில் பின்பற்றிய தேசியக் கொள்கை. இக்கொள்கை சீனம் ஒரு அரைக்காலனி நாடு என்பதால் மட்டும் வகுக்கப்பட்டதல்ல. ஏகாதிபத்தியத்திடமிருந்து சீனத்திற்கு விடுதலை என்பது மட்டுமே அது ஒரு அரைக்காலனி நாடு என்பதால் முன்வைக்கப்பட்ட கொள்கை. எல்லா தேசிய இனங்களுக்கும் சமத்துவம், சுய நிர்ணய உரிமை, விருப்பபூர்வமான ஒன்றிய குடியரசு என்பதெல்லாம் சீனம் ஒரு அரைக் காலனி நாடாக இருந்தாலும் இல்லாவிட்டாலும் ஒரு பல்தேசிய அரசு சமூகத்தில் ஒடுக்கும் தேசப் பாட்டாளி வர்க்கம் மேற்கொள்ள வேண்டிய கொள்கை. எனவே இது எல்லா காலனி, அரைக் காலனி நாடுகளுக்கும் பொருந்தாது. அதாவது ஒற்றை தேசிய அரசு சமூகமாயிருக்கும் காலனி, அரைக் காலனி நாடுகளுக்கோ, ஒடுக்கும் தேசிய இனம் இல்லாத பல்தேசிய அரசு சமூகமாயிருக்கும் காலனி, அரைக் காலனி நாடுகளுக்கோ இது பொருந்தாது. (எ-டு. இந்தியா, வியட்நாம்)

இந்தோ சீனா முழுமையாகப் பிரெஞ்சு ஏகாதிபத்தியத்தின் கீழ் ஒரு காலனிய பல்தேசிய அரசு சமூகமாயிருந்த போது ஹோசிமின், சீனத்தில் மாவோ கையாண்ட தேசியக் கொள்கையைப் பின்பற்றவில்லை. அங்கு ஒடுக்கும் தேசிய இனம் எதுவும் இல்லாததால், ஏகாதிபத்தியத்தால் உருவாக்கப்பட்ட பல்தேசிய சிறைக்கூடமாக மட்டும் இந்தோசீனா இருந்ததால் அவர் ஏகாதிபத்தியத்திடமிருந்து வியட்நாம் தேசிய விடுதலை என்ற முழக்கத்தை மட்டும் முன வைத்தார். ஏகாதிபத்தியத்திடமிருந்து இந்தோ சீனா விடுதலை, இந்தோ சீனாவிற்குள் தேசிய இனங்களின் சமத்துவம், சுய நிர்ணய உரிமை, தேசிய இனங்களின் விருப்பபூர்வ ஒன்றியக் குடியரசு எனறெல்லாம் முன்வைத்து இந்தோ சீனம் முழுமைக்கும் ஒரே கட்சி, ஒட்டு மொத்தப் புரட்சி என்ற கொள்கையை அவர் நடைமுறைப்படுத்தவில்லை.

இந்தியாவை எடுத்துக் கொண்டால் இங்கு தரகு-பார்ப்பனிய சக்திகள் இங்குள்ள தேசிய இனங்களின் அரசுரிமையை மறுத்து அவற்றின் இருப்பையே 'இந்திய தேசியத்தால்' ஒழித்துக்கட்டும் முயற்சியில் இருக்கின்றன. இந்தியத் தேசியம் என்பது இங்கு ஒடுக்கும் தேசிய இனமாக இல்லை. மாறாக தரகு-பார்ப்பனிய சக்திகளின் ஏகாதிபத்தியவாதமாக இருக்கிறது. எனவே இந்தியாவில் பாட்டாளி வர்க்கத்தின் தேசியக கொள்கை என்பது ஒவ்வொரு தேசிய இனமும் ஏகாதிபத்தியத்திடமிருந்து மட்டுமின்றி

படிப்பகம்

www.padippakam.com



தாகு - பார்ப்பனிய ஏகாதிபத்தியத்திடமிருந்தும் விடுதலை என்பதாக இருக்கிறது.

எனவே எல்லா அரைக்காலனி, காலனி நாடுகளுக்கும் சீனா மாதிரியான தேசியக் கொள்கை என்பது முற்றிலும் தவறானதாகும் தேசியப் பிரச்சினையில் நாடுகளுக்கிடையில் இருக்கும் வேறுபாடுகளைப் பார்க்கத் தவறுவதாகும்.

● ஒரு பல்தேசிய அரசு சமூகத்தில் ஒரே கட்சி, ஒட்டுமொத்தப்புரட்சி என்ற கோட்பாட்டை நிறைவேற்ற ஒடுக்கும் தேசிய இனப்பாட்டாளி வர்க்க இயக்கம் ஒடுக்கப்படும் தேசிய இனங்களின் சுய நிர்ணய உரிமையை அங்கீகரிக்க வேண்டும் என்பது ஏன்? அந்நாட்டின் பாட்டாளிவர்க்கக் கட்சி தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பதாகக் கூறி ஒரே கட்சி ஒட்டு மொத்தப் புரட்சி என்ற நிலைப்பாட்டை மேற்கொள்ள முடியாதா?

ஒடுக்கும், ஒடுக்கப்படும் தேசிய இனங்கள் உள்ள ஒரு பல்தேசிய அரசு சமூகத்தில் ஒடுக்கும் தேசிய இனத்தின் மீது ஒடுக்கப்படும் தேசிய இன மக்களுக்கு வெறுப்பும், பகையும் அதனால் அதிலிருந்து விடுபட்டு தனியாகச் செல்ல வேண்டும் என்ற வேகமும் இருப்பது இயல்பு. இந்த நிலையில் பல்தேசிய பாட்டாளிவர்க்கத்தின் ஒற்றுமையை சாதிக்க வேண்டுமானால் ஒடுக்கும் தேசிய இனப் பாட்டாளிவர்க்கம், ஒடுக்கப்படும் தேசிய இனங்களிடமுள்ள வெறுப்பு, பகை உணர்வுகளைக் களைய வேண்டும். அதற்கு அவற்றின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பது மட்டுமின்றி அதற்காகத் தன் சொந்த மக்களிடத்து—ஒடுக்கும் தேசிய இன மக்களிடத்து—இடைவிடாது போராடவும் வேண்டும் அவ்வாறில்லாவிட்டால் ஒடுக்கும், ஒடுக்கப்படும் தேசிய இனப் பாட்டாளிகளிடையே ஒற்றுமை சாத்தியமில்லை. இது ஒடுக்கும் தேசிய பாட்டாளிவர்க்கத்தின் கடமையினை ஒடுக்கப்படும் தேசிய இனத்தின் கடமையிலிருந்து வேறுபடுத்துகிறது. தேசிய அடையாளம் இல்லாத பொதுவான பாட்டாளிவர்க்கம், பாட்டாளி வர்க்கக் கட்சி என்று எதுவும் இல்லாததால் தேசிய அடையாளங்களுக்கேற்ப அவற்றின் கடமைகள் மாறுபடுவதுதவிர்க்கமுடியாததாகும் எனவே ஒடுக்கும் தேசிய பாட்டாளி வர்க்கம் தனது கடமையை நிறைவேற்றாத நிலையில் ஒடுக்கப்படும் தேசிய இனப் பாட்டாளிவர்க்கம் ஒரு பொதுவான கட்சி, பொதுவாக சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பது என்ற முறையில் ஒரே கட்சி, ஒட்டு மொத்தப்புரட்சி என்ற கோட்பாட்டைச் செயல்படுத்துவது சாத்தியமில்லை. இந்த உண்மையைப் புறககணித்து சமரன், முன்னோடி, பு ஜ. குழுக்கள் ஒரு அரசு எல்லைக்குள், ஒரேகட்சி ஒட்டுமொத்தப் புரட்சி என்ற கோட்பாட்டை முன்னிறுத்துவதன் மூலம் அவை ஒடுக்கப்படும் தேசிய இனப் பாட்டாளிவர்க்கத்தின் தன்னுணர்வை இழந்து ஒடுக்கும் பெருந் தேசிய வாதத்துக்குப் பலியாகிவிட்டிருக்கின்றன.

● ஒரு பல்தேசிய அரசு சமூகத்தில் ஒடுக்கும் தேசிய இனம் என்று ஒன்று இல்லாதபோது அல்லது ஒடுக்கும் தேசிய இனத்தில் ஒடுக்கப்படும் தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்துச் செயல்படும் பாட்டாளி வர்க்க இயக்கம் இல்லாதபோது ஒடுக்கப்படும் தேசிய இனங்கள் எல்லாம் ஒன்றாகச் சேர்ந்து ஒரே கட்சி, ஒட்டுமொத்தப் புரட்சி என்ற கோட்பாட்டைச் செயல்படுத்துவதில் என்ன தடை இருக்கமுடியும்?

முதலில், ஒடுக்கும் தேசிய இனம் இருந்து அதில் உள்ள பாட்டாளி வர்க்கக் கட்சி ஒடுக்கப்படும் தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கும்போது ஒரே கட்சி ஒட்டு மொத்தப் புரட்சி ஏன் சரியும், சாத்தியமும் ஆகும் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். ஒடுக்கும் தேசிய இனப்பாட்டாளி வர்க்கத்தின் வெற்றி என்பது ஒட்டுமொத்தமாக எதிரி வீழ்த்தப்படுவதைக் குறிப்பதாகும் இது இயல்பாகவே ஒடுக்கப்படும் பிற தேசிய இனங்களின் விடுதலையாகவும் அமைந்து விடுகிறது. எனவே ஒடுக்கும் தேசிய இனப் பாட்டாளி வர்க்கம் ஒடுக்கப்படும் தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீரித்திருக்கும்

படிப்பகம்

www.padippakam.com



நிலையில் ஒடுக்கப்படும் தேசிய இனப் பாட்டாளிவர்க்கம் தன்னுடைய தேசிய விடுதலை மற்றும் புரட்சியின் வெற்றிக்கே ஒடுக்கும் தேசிய இனப் பாட்டாளி வர்க்க இயக்கத்துடன் இணைந்து முழுமையான வெற்றிக்குப் பாடுபடுவது அவசியமாகும். இதனால்தான் இங்கு ஒரேகட்சி ஒட்டு மொத்தப் புரட்சி சரியும், சாத்தியமும் ஆகும் என்கிறோம்.

ஒடுக்கும் தேசிய இனம் இல்லாதபோது நிலைமை முற்றிலும் மாறிவிடுகிறது. இங்கு எந்த ஒரு ஒடுக்கப்படும் தனி தேசிய இனத்தின் விடுதலையும் எதிரியை முற்றாக வீழ்த்துவதை நிபந்தனையாகக் கொண்டதல்ல. மேலும் எந்த ஒரு ஒடுக்கப்படும் தேசிய இனத்தின் விடுதலையும் பிற தேசிய இனங்களின் விடுதலைக்குக் காரணமாகி விடுவதும் இல்லை. இந்நிலையில் ஒரே கட்சி ஒட்டு மொத்தப்புரட்சி என்ற கோட்பாட்டினைச் செயல்படுத்துவது எந்த ஒரு தேசிய இனத்தின் விடுதலையும் ஒட்டு மொத்தமாக எதிரி வீழ்த்தப்படும்வரை சாத்தியமற்றதாக்குவதாகும்; இயல்பாகவே அரசியல், பொருளாதாரம், கலாச்சாரம், வரலாறு மற்றும் அமைவிடம் ஆகியவற்றின் சாதக, பாதக அம்சங்களில் ஏற்றத்தாழ்வுகள் கொண்டிருக்கும் பல்தேசிய இனங்களில் முன்னேறிய, சாதகமான தேசிய இனம் முதலில் விடுதலை அடைவதையும், அதன் விடுதலை பிற தேசிய இனங்களின் எழுச்சிகளைத் தோற்றுவிக்கும் வாய்ப்புகளையும் தடுத்து நிறுத்துவதாகும். ஒடுக்கும் தேசிய இனம் இருந்து அதைவிட ஒடுக்கப்படும் தேசிய இனங்களில் புரட்சிகர எழுச்சிகளும், பாட்டாளி வர்க்க இயக்கமும் முன்னணியில் இருக்கும்போதும்—அதாவது ஒடுக்கும் தேசிய இனத்தில் பாட்டாளி வர்க்க இயக்கமும், புரட்சிகர இயக்கமும் இல்லாது அல்லது பலவீனமாக இருக்கும்போதும் — இதுதான நிலைமையாகும்.

எனவே ஒடுக்கப்படும் தேசிய இனங்கள் எல்லாம் ஒன்றாகச் சேர்ந்து ஒரே கட்சி ஒட்டு மொத்தப் புரட்சி என்றகோட்பாட்டின் அடிப்படையில் செயல்பட வேண்டும் என்பது இத்தகைய நிலைமைகளில் பிற்போக்கான முழக்கமே யன்றி புரட்சிகரமானதல்ல. இதனால் கடுமையாக எதிர்க்கப்பட வேண்டியதாகும்.

நாம் இப்படிக் கூறுவதை ''பாட்டாளி வர்க்கக் கட்சிகளுக்குள்ளும் ஒடுக்கும் தேசிய இனப் பாட்டாளி வர்க்கத்தின் கம்யூனிஸ்டுகள்தான் தலைமை தாங்கவும், பிற பிரிவினை விடுதலைக்கு வழிவகுக்கவும் வேண்டியவர்கள் எனகிற பெருந் தேசிய இனவாதம் பொதிந்திருக்கிறது'' என்றும் "இரசியாவிலும், சீனாவிலும் கட்சி பலம் பெறுவதற்கு முன்பே அதன் துவக்கத்திலேயே ஒரே கட்சி, ஒட்டு மொத்தப் புரட்சி திட்டம் முன்வைத்து செயல்பட்டனர், இரசியாவில் அத்திட்டம் மேற்கொண்டு சில ஆண்டுகளுக்குப் பிறகு தான் தேசிய இனப் பிரச்சினைப் பற்றிய தீர்மானம் சேர்க்கப்பட்டது'' என்றும் கூறி பு. ஜ. குழுவினர் நிராகரிக்க விரும்புகிறார்கள். ஆனால் உண்மைகள் அவர்களுடைய விருப்பத்துக்கு மாறாகவே இருக்கின்றன.

முதலாவதாக, 'பெருந்தேசிய இனவாதம்' என்ற விமர்சனத்தை எடுத்துக் கொள்ளுங்கள். அது யாரிடம் இருக்கிறது? ஒடுக்கும் தேசிய இனப் பாட்டாளி வர்க்கம் ஒடுக்கப்படும் தேசிய இனத்திற்குச் சுய நிர்ணய உரிமையை அங்கீகரித்து புரட்சி இயக்கத்தில் முன்னணியில் செயல்படும் நிலை இருந்தாலொழிய ஒடுக்கப்படும் தேசிய இனப் பாட்டாளி வர்க்கம் தனது சொந்த தேசிய விடுதலைக்குத் தனியே ஒரு கட்சி கட்டி தலைமை தாங்க வேண்டும் என்று கூறும் நம்மிடத்திலா? அல்லது ஒடுக்கும் தேசிய இனத்தில பாட்டாளி வர்க்க கட்சி இருந்தாலும சரி, இல்லா விட்டாலும் சரி; அது ஒடுக்கப்படும் தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்தாலும் சரி அங்கீகரிக்காவிட்டாலும் சரி; அது புரட்சி இயக்கத்தில் முன்னணியில் இருந்து செயல்படும் நிலைஇருந்தாலும் சரி இல்லாவிட்டாலும் சரி; ஒடுக்கும் தேசிய இனத்தில் நடக்கும் புரட்சியுடன் இணைந்த வடிவிலன்றி வேறு எவ்வகையிலும் ஒடுக்கப் படும் தேசியஇனங்களின் பாட்டாளி வர்க்கங்கள் தமது சொந்த தேசிய விடுதலையினை அடையவிடாது தடுக்கும் ஓர் அரசு எல்லைக் குள் ஒரே கட்சி ஒட்டு மொத்தப் புரட்சி என்ற

படிப்பகம்

www.padippakam.com



கோட்பாட்டைப் போதிக்கும் பு.ஜ. குழுவினிடமா?

பு.ஜ.குழுவின் பெருந்தேசிய இனவாதம் அடுத்து அவர்கள் வைக்கும் வாதத்திலும் அப்பட்டமாக வெளிப்படுகிறது. இரசியாவிலும், சீனாவிலும் கட்சி பலம்பெறும் முன்பே அதன் துவக்கத்திலேயே ஒரே கட்சி,ஒட்டுமொத்தப்புரட்சித்திட்டம் வைத்து செயல்பட்டனர் என்கின்றனர். இது தவறான வாதம் ஆகும். இரசியாவிலும், சீனாவிலும் கட்சி கட்டும் முயற்சியே அந்நாடுகளின் ஒடுக்கும் தேசிய இனப் பாட்டாளி வர்க்கங்களிடமிருந்தே தொடங்கியது. லெனினும், மாவோவும் அந்நாடுகளின் பெருந்தேசிய இனத்தைச் சேர்ந்த பாட்டாளி வர்க்கத் தலைவர்கள். அடுத்து, அத்திட்டம் மேற்கொண்டு சில ஆண்டுகளுக்குப் பிறகுதான் தேசிய இனப் பிரச்சினை பற்றிய தீர்மானம் சேர்க்கப்பட்டது என்கிறார்கள். இரசியாவில் இரண்டாவது காங்கிரசில் (1903)தான் முறையான கட்சி நிறுவப்பட்டது. அதில் தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமைத் தீர்மானம் ஏற்றுக் கொள்ளப்பட்டது. முதல் காங்கிரஸ் பற்றி ஸ்டாலின் கூறுகிறார்: அதில் ஒன்பது பேர்தான் கலந்து கொண்டார்கள். லெனின் கலந்து கொள்ளவில்லை. அந்த மாநாட்டில் வெளியிடப்பட்ட அறிக்கை அநேக துறைகளில் அதிருப்திகரமாக இருந்தது. பாட்டாளி வர்க்கம் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவதுபற்றி மௌனம் சாதித்தது. முதல்காங்கிரஸ் நடைபெற்றபோதிலும் இரசியாவில் எந்தவிதமான சமூக ஜனநாயகக் கட்சியும் ஒழுங்காக நிறுவப்படவில்லை. தனித்தனியாக இருந்துவந்த மார்க்சியக் குழுக்களையும் அமைப்புகளையும் ஒன்றுபடுத்தி அமைப்பு அளவில் ஒரே ஒரு கட்சியாக வளர்த்தெடுப்பதில் அந்தக் காங்கிரஸ் வெற்றியடையவில்லை. உள்ளூர்களின் வேலையை ஒருமுகப்படுத்தக்கூடிய ஒரே ஒரு பொதுவான வேலைமுறை வகுக்கப்படவில்லை. எல்லோருக்கும் பொதுவான மத்தியச் செயலகமோ, கட்சி விதிகளோ, கட்சித் திட்டமோ ஏற்படவில்லை [சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் (போல்ஷ்விக்) வரலாறு] சரியாகச் சொன்னால் முதலாவது காங்கிரசில் (1898) முறையான கட்சி நிறுவப்படவில்லை என்பதே. இரண்டாவது காங்கிரசில் லெனின் கலந்துகொண்டார். கட்சித் திட்டமும், அமைப்பு விதிகளும் நிறைவேற்றப்பட்டு முறையான கட்சி நிறுவப்பட்டது. அதில் தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட்டது. எனவே சில ஆண்டுகளுக்குப் பிறகுதான் சேர்க்கப்பட்டது என்கிற பு.ஜ. குழுவின் வாதம் தவறானது.

இரசியாவிலும், சீனாவிலும் கட்சிகட்டும் முயற்சி ஒடுக்கும் தேசிய இனப் பாட்டாளி வர்க்கத்திடமிருந்து தொடங்கியது. அவை ஒடுக்கப்படும் தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கும் தேசியக் கொள்கையைக் கொண்டிருந்தன. ஒடுக்கப்படும் தேசிய இனங்களின் பாட்டாளி வர்க்கங்களைவிட புரட்சிகர இயக்கத்தில் அவை தொடர்ந்து எவ்வளவோ முன்னணியில் இருந்துவந்தன.

இரசிய, சீனக் கட்சிகளின் பலமின்மை பற்றிக் கூறும் பு.ஜ. குழு அந்நாடுகளின் ஒடுக்கும், ஒடுக்கப்படும் தேசிய இனப் பாட்டாளி வர்க்கம் பற்றிய வேறுபாடின்றி பொதுவாகவும், தவறாகவும் கூறி தன் நிலைக்கு ஆதரவு தேடுகிறது.

இவைகளெல்லாம் பு.ஜ. குழு ஒடுக்கப்படும் தேசிய இனத்தின் சுய உணர்வை இழந்து ஒடுக்கும் பெருந்தேசிய இனவாத உணர்வுக்குப் பலியாகி விட்டிருப்பதன் வெளிப்பாடுகளேயாகும்.

- **தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்திருக்கும் இ.பொ.க. (மா-லெ) எந்தச் சூழ்நிலைகளில் தேசிய விடுதலையை ஆதரிக்கிறது? அல்லது பாட்டாளி வர்க்கம் தலைமை தாங்க அனுமதிக்கிறது?**

இ.பொ.க. (மா-லெ) கட்சித்திட்டம் தேசிய இனங்களின் சுய நிர்ணய உரிமையை உறுதியாக ஆதரிப்பதுடன் தன்னை நிறுத்திக் கொள்கிறது. இக் கட்சியின் குழுக்கள் தேசிய இனங்களின்

படிப்பகம்

www.padippakam.com



சுயநிர்ணய உரிமையை உறுதியாக ஆதரிக்கும் அதே வேளையில் தேசிய விடுதலை மற்றும் பிரிவினைக் கோரிக்கைகளைத் ஆதரிப்பது அல்லது தலைமை தாங்குவது பற்றிய பிரச்சினையில் மாறுபட்ட நிலைப்பாடுகளையே கொண்டுள்ளன. முன்னோடி, சமரன் குழுக்கள் ஈழதேசத்தின் விடுதலையை ஆதரிக்கின்றன. மேலும் பாட்டாளி வர்க்கம் ஒரு ஜனநாயகப் புரட்சிக்கான திட்டத்துடன் ஈழவிடுதலைப் போராட்டத்திற்கு தலைமை தாங்கவேண்டும் என்றும் கூறுகின்றன. அதற்கான காரணங்களாக அவை கூறுவதாவது : 1. இலங்கையின் அரைக்காலனித்துவ அரை நிலப்பிரபுத்துவ அரசு சிறுபான்மை இனத்தவரை ஒடுக்குவதையே தனது வாழ்விற்கு ஆதாரமாகக் கொண்டிருக்கிறது. 2. சிங்கள தேசிய இனத்தைச் சேர்ந்த பாட்டாளி வர்க்கம் பேரினவாதத்திற்கு இரையாகி ஈழத்தமிழ் இனம் மற்றும் பிற தமிழ்பேசும் மக்களின்மீது சிங்கள ஆளும் வர்க்கம் நடத்தும் இன ஒடுக்குமுறைக்குத் துணை போகிறது. (சமரன், மார்ச் 84 பக். 25-26,30)

இந்தக் காரணங்களை இந்தியாவுக்குப் பொருத்தினால் இந்தியாவில் தேசிய விடுதலைப் போராட்டங்களை ஆதரிக்கின்ற, அவற்றுக்குத் தலைமை தாங்குகின்ற தீர்மானங்களை இக்குழுக்கள் மேற்கொள்ள வேண்டும். இந்திய ஆளும் வர்க்கங்களின் வாழ்க்கை தேசிய (இன) ஒடுக்குமுறையை ஆதாரமாகக் கொண்டதே. இங்கு ஒடுக்கும் தேசிய இனமே இல்லை. அவர்கள் கூறும் சலுகை பெற்ற 'இந்தி தேசிய இனத்திலோ' தேசிய ஒடுக்குமுறைக்கு எதிராகக் குரல் கொடுக்கும் பாட்டாளி வர்க்கத்தைத்தேடினாலும் இவர்களால் கண்டுபிடிக்க முடியாது.

இருந்தும் இக்குழுக்கள் இந்தியாவில் தேசிய விடுதலைக்கு ஆதரவு அல்லது தலைமை தாங்குவது என்று நிலைப்பாட்டை மேற்கொள்ளவே இல்லை. மாறாக ''புதிய ஜனநாயகப் புரட்சியில் தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமைக்கானப் போராட்டம் முதன்மையான முக்கியத்துவம் வாய்ந்த ஒன்று'' என்றும் ''பிரிவினை உள்ளிட்ட சுய நிர்ணய உரிமைக்கான தமிழ்மக்களின் போராட்டத்தை ஆதரிக்க வேண்டியது பிற தேசிய இனப் பாட்டாளி வர்க்கத்தின் கடமை'' என்றும் ''இந்தியா பல்தேசங்களை உள்ளடக்கிய நாடாக இருப்பதால் புரட்சியின் வெற்றிக்குப் பின் ஒவ்வொரு தேசமும் அதனதன் மக்கள் குடியரசுகளை நிறுவிக்கொள்ளும், பல்வேறு தேசங்களின் மக்கள் குடியரசுகளும் சுய விருப்பத்தோடு ஒன்றிணைவதன் மூலம் ஒரு கூட்டாட்சியின் வடிவத்தில் இந்தியாவின் மக்கள் குடியரசுகளின் ஒன்றியம் உருவாக்கப்படும்'' என்றும் தேசியப் பிரச்சினையில் சீனத்தின் பாதையே இந்தியாவின் பாதை (ஏகாதிபத்தியத்திடமிருந்து சீனத்திற்கு விடுதலை சீனத்திலிருக்கும் தேசிய இனங்களுக்கு சமத்துவம், சுயநிர்ணய உரிமை என்றகொள்கை சீனத்தில் பின்பற்றப்பட்டது போல இந்தியாவின் சுய நிர்ணயம், இந்தியாவில் இருக்கும் தேசிய இனங்களின் சுயநிர்ணயம் என்கிறார்கள்) என்றும் கூறுவதுடன் தம்மைக் கட்டுப்படுத்திக் கொள்கிறார்கள்.

பு. ஜ. குழு இவர்களுடன் ஒன்றுபடவில்லை. அது ஈழ விடுதலையை எப்போதுமே ஆதரிக்கவில்லை. ஈழத்திலும் சரி, இந்தியாவிலும் சரி சுயநிர்ணய உரிமைக்கு ஆதரவு என்பதுடன் அது தன்னை நிறுத்திக் கொண்டுள்ளது. ஒடுக்கும் தேசிய இனப் பாட்டாளி வர்க்கம் பெருந்தேசிய வெறிக்குப் பலியாகி ஒடுக்கும்-ஒடுக்கப்படும் தேசிய இனங்கள் இணைந்து வாழவே முடியாது என்ற நிலையிலும்கூட தனிக்கட்சி, தனிப் புரட்சி என்பது தர்க்க ரீதியில் மட்டுமே நியாயமாகும் (செயல்படுத்தக் கூடாது என்று பொருள்) என்றும், ஒடுக்கும் தேசத்தில் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கும் கம்யூனிஸ்டுகள் ஒரு சிலர் இருந்தாலே போதும் —ஒடுக்கப்படும் தேசங்களை விட அங்கு புரட்சிகர இயக்கம் பலமாகவும், முன்னணியிலும் இல்லாவிட்டாலும்—தனிக்கட்சி, தனிப் புரட்சி என்பது தவறானது என்றும் வாதிடுகிறது பு. ஜ. குழு. மேலும் ''தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமைக்கானப் போராட்டம் எப்போதுமே பாட்டாளி வர்க்கக் கட்சியின் பிரதானப் பணியாகிவிட முடியாது''

படிப்பகம்

www.padippakam.com



என்று முன்னோடி, சமரன் குழுக்களுக்கு மறுப்புத் தெரிவிக்கிறது. கூடவே "குடியரசுகளின் ஒன்றியம் என்பது தேசிய இன முதலாளிகளின் தேசியவாத நோக்கம், திட்டம், கொள்கை" என்றும் சமரன், முன்னோடி குழுக்களை விமர்சித்துச் சாடுகிறது. (குடியரசுகளின் ஒன்றியம் என்பது இரசியாவில் லெனினும், சீனத்தில் மாவோவும் பின்பற்றிய கொள்கைகள்தான். பு. ஜ வின் சாடல் இவர்களுக்கும் பொருந்தலாம்)மேலும் "ஏகாதிபத்தியத்தைப் பலவீனப் படுத்துவதாக அதை வீழ்த்துவதாக இருக்கும் போதும், தொழிலாளி வர்க்க இயக்க வளர்ச்சியின் நலன்களுக்கு எதிராக இல்லாத போதும்தான்'' தேசிய விடுதலை இயக்கங்களை ஆதரிக்க முடியும் என்று (தலைமை தாங்குவது பற்றிய கேள்விக்கே இடமில்லை) கூறும் பு. ஜ. குழு இதுவரை இந்தியாவிலும் இலங்கையிலும் தேசிய விடுதலை இயக்கம் எதையும் ஆதரிக்கும் நிலையை மேற்கொள்ளவில்லை. வடகிழக்கு இந்தியாவில் தேசிய விடுதலை இயக்கத்தை ஆதரித்து எழுதி வந்ததாக சமீபத்தில் பு ஜ. குழு பொய் கூறி வருகிறது. ஏப்ரல் 1980 பு.பு. வில் எழுதிய கட்டுரையில் தலைப்புகள்தான் வடகிழக்கிந்தியாவில் தேசிய விடுதலை இயக்கத்தையும் பாட்டாளிவர்க்கத்தலைமையிலான தேசிய விடுதலையையும் ஆதரிப்பதாக இருந்ததே தவிர கட்டுரையின் உள்ளே பிரிந்து போகும் உரிமைக்கு மேல் வேறு எதையும் அது ஆதரித்து எழுதவில்லை. ஈழப் பிரச்சினையில்கூட இதே சந்தர்ப்பவாதத்தைத்தான் பு. ஜ. குழு பின்பற்றி வருகிறது. உண்மையிலேயே வடகிழக்கு இந்தியாவில் தேசிய விடுதலை இயக்கத்தையும், பாட்டாளி வர்க்கத் தலைமையிலான தேசிய விடுதலையையும். பு. ஜ. குழு ஆதரிக்குமானால் தனது சொந்தத் (தமிழ்) தேசத்தின் விடுதலை இயக்கத்தை ஆதரிப்பதற்கும், அதற்குத் தலைமை ஏற்பதற்கும் எதுவும் தடையாய் இருக்க முடியாது. உண்மையில் பு. ஜ. குழுவின் இத்தச் சந்தர்ப்பவாதம் சமரன், முன்னோடி குழுக்களை விட அது பெருந்தேசிய வாதத்திற்கு மிகத் தீவிரமான முறையில் பலியாகி விட்டிருப்பதன் வெளிப்பாடேயாகும்.

- **சமரன், முன்னோடி, பு. ஜ. குழுக்களின் சுயமுரண்பாட்டிற்கும், அவை ஒன்றுடன் ஒன்று முரண்படுவதற்கும் இ. பொ. க. (மா-லெ) யின் இரட்டை தேசியக் கொள்கைதான் காரணம் என்று கூற முடியுமா?**

அது மட்டுமல்ல; அவை இந்தியத் தேசிய மாயையிலிருந்து முற்றிலும் விடுபடாமல் இருப்பதற்குக்கூட இ. பொ. க. (மா-லெ) யின் இரட்டை தேசியக் கொள்கைதான் காரணம். இந்தியப் பொதுவுடைமை இயக்கம் அதன் தொடக்கம் முதலே இந்தியாவை ஒரு தேசம் எனக் கருதியே தனது வேலைத் திட்டத்தை வகுத்து வந்திருக்கிறது. 1942-43ல் தான் முதன் முதலாக அது தேசம் பற்றிய மார்க்சியக் கோட்பாடுகளை அறிந்தது; இந்தியாவில் பல்வேறு தேசிய இனங்கள் இருப்பதை உணர்ந்து கட்சித் திட்டத்தில் தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை கோரிக்கையை இணைத்தது. அது கூட தேசிய இன அடிப்படையில் இந்தியா பிளவுண்டு விடக்கூடாது என்ற நோக்கத்திற்காகவே. கட்சி பிளவுண்டபின் திரிபுவாதிகள் அந்தக் கோரிக்கையை கட்சித் திட்டத்திலிருந்து நீக்கிவிட்டார்கள். ஆனால் இ.பொ. க. (மா-லெ) தனது கட்சித் திட்டத்தில் மீண்டும் சுயநிர்ணய உரிமைக் கோரிக்கையை இணைத்துக்கொண்டது. இது 1942-1953 கட்சித் திட்டத்தில் இருந்ததை மீட்டமைத்துக் கொண்டதேயன்றி இந்தியாவின் தேசியப் பிரச்சினைகளை பருண்மையாக ஆய்வு செய்ததன் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட முடிவு அல்ல. எனவே இ. பொ. க. (மா-லெ)யின் தேசியக் கொள்கை இந்தியத் தேசியத்தை அடிப்படையாகவும், இந்தியா, தேசிய இன ரீதியில் பிளவுபடாமல தடுப்பதை நோக்கமாகவும் கொண்டமைந்ததாகும். (பாட்டாளி வர்க்க ஒற்றுமையைப் பாதுகாப்பது என்று இதற்கு அடிக்கடி விளக்கம் அளிக்கப்படுகிறது) கட்சிக் குழுக்கள் தேசியக் கொள்கையில் தமக்குள் சுயமுரண்பாடுகளைக் கொண்டிருப்பினும் கட்சியின் இந்த அடிப்படையிலிருந்தும் நோக்கத்திலிருந்தும் விலகவில்லை.

படிப்பகம்

www.padippakam.com



அதனால்தான், தேசம் பற்றிய ஸ்டாலின் வரையறுப்பின் அடிப்படையிலேயே கட்சித் திட்டத்தில் தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப் பட்டிருக்கிறது என்பதைத் தெரிந்து கொண்டே முன்னோடி, சமரன் குழுக்கள் காலனி, அரைக்காலனி தேசம் பற்றியும், ஏகாதிபத்திய சகாப்தத்தில் தேசம் பற்றிய ஸ்டாலின் வரையறுப்பின் போதாமை பற்றியும் தத்துவ விளக்கம் அளிக்க முயல்கின்றன; தேசியக் கொள்கையில் சீனத்தில் மாவோ பின்பற்றிய கொள்கையே இந்தியாவுக்குப் பொருந்தும் கொள்கை என்கின்றன. ஈழத்தில் தேசிய விடுதலையை ஆதரித்தாலும் இந்தியாவுக்கு அது பொருந்தாது என்கின்றனர். ஸ்டாலின் வரையறுப்புக்காக சமரனுடன் போராடிய பு.ஜ. குழு ஏகாதிபத்தியத்துக்கு எதிராக மட்டுமன்றி நிலப்பிரபுத்துவத்துக்கும் எதிராக எழுச்சியுறுவதுதான் தேசியம் என இனக்கூறில்லாத தேசிய வரையறை வழங்குவதுடன் தேசியக் குடியரசுகளின் ஒன்றியம் என்ற கருத்தை கடுமையாகச் சாடுகிறது. தேசிய விடுதலையை ஆதரிப்பதில்லை என்ற மிக உறுதியான நிலையை மேற்கொண்டிருக்கிறது.

இவை எல்லாம் சுய முரண்பாடுகள் கொண்டவையாக இருப்பினும் பாட்டாளி வர்க்க ஒற்றுமை எனும் போலிப்பதாகையின் கீழ் இந்தியா தேசிய இன ரீதியில பிளவுபடுவதைத் தடுப்பது மற்றும் இந்தியத் தேசியம் ஆகிய கட்சித் திட்டத்தின் நோக்கத்தையும், அடிப்படையையும் உறுதியாகப் பற்றி நிற்பதால் மேற்கொண்ட நிலைப்பாடுகளேயாகும்.

இந்தியத் தேசியத்தை அடிப்படையாகக் கொண்ட இ.பொ.க. (மா-லெ)யின் கட்சித் திட்டம், தேசிய இனங்களின் சுய நிர்ணய உரிமையை அங்கீகரித்திருப்பது தேசத்திற்குள் தேசம் என்கிற ஏகாதிபத்திய வாதம் ஆகும். இது ஏகாதிபத்திய எதிர்ப்பு, நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு இந்தியத் தேசம் எனும் ஏகாதிபத்தியப் பொருளாதார வாதத்துக்கும் கட்சிக் குழுக்களின் தேசிய சூனிய வாதத்துக்கும் காரணமாகியிருக்கிறது.

இ.பொ.க. (மா-லெ) குழுக்கள் உண்மையிலேயே புரட்சிகர குழுக்களாக இருக்க வேண்டுமானால் அவை கட்சித் திட்டத்திற்கு முட்டுக் கொடுக்கும் வகையில் தமது தேசியக் கொள்கையை அமைக்கும் முயற்சிகளைக் கைவிட வேண்டும்; மார்க்சிய—லெனினிய அடிப்படையில் கட்சித் திட்டத்தில் உள்ள முரண்பாட்டை—இரு தேசியக் கொள்கையை—புரட்சிகரமான முறையில் தீர்க்கும் முயற்சியில் இறங்க வேண்டும்.

● இ.பொ.க. (மா-லெ)யின் தேசியக் கொள்கையில் உள்ள முரண்பாட்டை புரட்சிகரமான முறையில் தீர்ப்பதற்கும் இந்தியாவைத் தரகு — பார்ப்பனிய ஏகாதிபத்தியம் என்று வரையறுப்பதற்கும் என்ன தொடர்பு?

முதலாவதாக: இந்தியா ஒரு பல் தேசிய அரசு சமூகம். பல்வேறு தேசிய இனங்களின் அரசுரிமை மறுக்கப்பட்டு பலாத்காரமாக ஒன்றிணைக்கப்பட்டதால் உண்டான நாடு. இங்கு ஒடுக்கும் தேசிய இனம் இல்லை. இந்தியத் தேசம் என்ற பெயரால் பல்தேசங்களின் அரசுரிமை மறுக்கபபட்டு அதன் அரசு எல்லை வரையப்பட்டிருப்பதால் இது ஓர் ஏகாதிபத்தியம். இந்தியா ஓர் அரைக்காலனி, அரைநிலப்பிரபுத்துவ நாடு என்ற வரையறையில் இந்த ஏகாதிபத்தியத் தன்மை இடம் பெறவில்லை.

இரண்டாவதாக: இந்த ஏகாதிபத்திய வாதத்தைச் செயல்படுத்தி வருவது தரகு-பார்ப்பனிய சக்திகள். தரகு முதலாளிகள் தமது விரிந்த சந்தை நலன்களுக்காகவும் பார்ப்பனிய சக்திகள் தமது சமூக மேலாதிக்கத்தைக் கட்டிக்காத்துக் கொள்வதற்காகவும் இந்தியத் தேசியம் என்ற பெயரில் தேசிய ஒடுக்குமுறை ஏகாதிபத்தியக் கொள்கையைச் செயல்படுத்தி வருகின்றனர். எனவே இந்தியா ஒரு தரகு-பார்ப்பனிய ஏகாதிபத்தியம் ஆகும்.

இந்தியா ஒரு தரகு-பார்ப்பனிய ஏகாதிபத்தியம என்ற வரையறுப்பு இந்தியத் தேசியம் என்பதன் ஏகாதிபத்தியப் பண்பை முற்றாக அம்பலப்படுத்தி அந்த

படிப்பகம்

www.padippakam.com



மாயையிலிருந்து கட்சியை முற்றாக விடுவிக்கிறது. இவ்வாறு கட்சியின் தேசியக் கொள்கையில் உள்ள முரண்பாட்டைப் புரட்சிகரமான முறையில் தீர்த்து வைக்கிறது.

- இ. பொ. க. (மா-லெ) இந்திய ஆளும் பெருமுதலாளி வர்க்கத்தை தரகு முதலாளிவர்க்கம் என்றே வரையறுத்துள்ளது. தரகு முதலாளி என்றாலே தேசிய ஒடுக்குமுறையைக் குறிப்பது தான். அப்படி இருக்கும்போது தேசிய ஒடுக்குமுறையைக் குறிக்க ஏகாதிபத்தியம் என்ற வரையறுப்பு ஏன்?

தரகு முதலாளிகளின் தேசிய ஒடுக்குமுறை ஒற்றை தேசிய அரசு சமூகத்திலும் பல்தேசிய அரசு சமூகத்திலும் வேறுபட்டதாகும். ஒற்றைதேசிய அரசு சமூகத்தில் அது தேசிய, ஜனநாயக எழுச்சிகளை ஒடுக்குவதாக இருக்கும். ஆனால் பல்தேசிய அரசு சமூகத்தில் அது பல்தேசிய இனங்களின் அரசுரிமை மறுத்து ஒடுக்கி அவற்றின் இருப்பையே கேள்விக்குள்ளாக்கும் ஏகாதிபத்தியவாதமாய் இருக்கும். தேசிய ஒடுக்குமுறையில் உள்ள இந்த வேறுபாட்டைத் தெளிவுபடுத்த பல்தேசிய அரசு சமூகத்தில் உள்ள தேசிய ஒடுக்குமுறையை ஏகாதிபத்தியம் என வரையறுப்பது அவசியமாகும்.

- இ.பொ.க. (மா-லெ) கட்சித்திட்டம் இந்தியாவை அரைக்காலனி, அரை நிலப்பிரபுத்துவ நாடு என்று வரையறுத்துள்ளது. தேசம் என்று வரையறுக்கவில்லை. நாடு என்பதே பல்தேசியப் பண்பைக் குறிப்பது அல்லவா?

இப்படித்தான் பு.ஜ.குழு வாதிடுகிறது. நாடு என்பது அரசு சமூகத்தைக் குறிக்கும் சொல்லாகும். ஓர் அரசு சமூகம் ஒற்றைத் தேசிய அரசு சமூகமாகவோ பல்தேசிய அரசு சமூகமாகவோ இருக்கலாம். எனவே நாடு என வரையறுப்பதே பல்தேசியப் பண்பைக் குறிப்பதாகும் எனக்கூறுவது முட்டாள்தனமானதாகும்.

- முதலாளித்துவத்தின் உச்சகட்டமான நிதிமூலதன காலகட்டத்தையே ஏகாதிபத்தியம் என்று லெனின் குறிப்பிடுகிறார். தரகு-பார்ப்பனிய ஏகாதிபத்தியம் என்பது இதற்கு முரணானதல்லவா?

ஏகாதிபத்தியம் என்பது தேசங்களின் அரசுரிமை மறுத்து அவற்றின்மீது ஆதிக்கம் செலுத்துவதாகும் "காலனியக் கொள்கையும் ஏகாதிபத்தியமும் முதலாளித்துவத்தின் இந்த நவீன கட்டத்திற்கு முன்பே, முதலாளித்துவத்துக்கும் முன்பேகூட இருந்தவையே. அடிமையுடைமையை ஆதாரமாகக் கொண்டமைந்த ரோமானியப் பேரரசும் காலனியக் கொள்கையைப் பின்பற்றியது; ஏகாதிபத்தியத்தைக் கையாண்டது" என்று ஏகாதிபத்தியம் முதலாளித்துவத்தின் உச்சகட்டம் என்ற தனது புகழ்பெற்ற நூலில் குறிப்பிடுகிறார் லெனின். எனவே நிதிமூலதனக் காலகட்டத்திற்கு மட்டுமே உரியது ஏகாதிபத்தியம் என்பது தவறான கருத்தாகும். எனினும் சமுதாய-பொருளாதார அமைப்பு மற்றும் அதன் காலனியாதிக்கக்கொள்கைகளில் நிதிமூலதன காலகட்ட ஏகாதிபத்தியம் அதற்கு முந்திய காலகட்ட ஏகாதிபத்தியங்களிடமிருந்து வேறுபட்டதாகும். இந்தியா ஒரு தரகு-பார்ப்பனிய ஏகாதிபத்தியம் என்ற நமது வரையறுப்பு அதன் சமுதாய-பொருளாதார மற்றும் காலனியாதிக்கக்கொள்கை நிதி மூலதன ஏகாதிபத்தியத்தின் தன்மையிலிருந்து வேறுபடுவதைத் தெளிவுபடுத்துகிறது. இதுபழையவகைப்பட்ட ஏகாதிபத்திய ஆதிக்கத்தின் வரையறுப்பு என்றும் இதை முன்தள்ளுவதன் மூலம் ஏகாதிபத்திய எதிர்ப்புக் கடமையை சிறுமைப்படுத்துவதாகவும் பு ஜ.குழு விமர்சிக்கிறது. நமது தேசத்தின் மீது பழையவகைப்பட்ட ஏகாதிபத்திய ஆதிக்கம் இருக்கும்போது அதைக் கண்டு கொள்ளாமல் இருப்பதன் மூலம் அதை ஒழித்துக்கட்டிவிடவோ அல்லது நவீன ஏகாதிபத்திய எதிர்ப்பைப்பெருமைப்படுத்திவிடவோ முடியாது. தரகு-பார்ப்பனிய ஏகாதிபத்தியம் என்பது நமது தேசத்தின் மீது பழைய வகைப்பட்ட ஏகாதிபத்திய ஆதிக்கம் மட்டும் அல்ல; நவீன ஏகாதிபத்திய ஆதிக்கமும் இருப்பததைத் தெளிவுபடுத்தும் வரையறுப்பு ஆகும். எனவே இது ஏகாதிபத்திய எதிர்ப்பைக் கைவிடுவதோ, சிறுமைப்படுத்துவதோ அல்ல. மாறாக அவ்வாறு

படிப்பகம்

www.padippakam.com



கருதி நமது தேசத்தின் மீதான பழைய வகைப்பட்ட ஏகாதிபத்திய ஆதிக்கத்தை மூடிமறைப்பது நமது தேசத்தின் விடுதலைக்கும் ஜனநாயகப் புரட்சிக்கும் துரோகமிழைப்பதாகும்.

● அரைநிலப்பிரபுத்துவம் என்பது இந்துப் பார்ப்பனியத் தன்மையையும் உள்ளடக்கிய முழுமையான பொருளைக் குறிப்பதில்லையா?

குறிக்கும் என பு.ஜ. குழு தவறாக வாதிடுகிறது. அரைநிலப்பிரபுத்துவத்தை இந்தியா மட்டும் அல்ல உலகின் பல நாடுகள் கண்டிருக்கின்றன. அங்கெல்லாம் இந்துப் பார்ப்பனியம் இல்லை. எனவே அரை நிலைப்பிரபுத்துவம் என்றாலே அது இந்துப் பார்ப்பனியத்தன்மையை உள்ளடக்கிய முழுமையான பொருள்கொண்டது என்று கூறமுடியாது. மேலும் பார்ப்பனியம் என்பது தேசிய ஒடுக்குமுறை மற்றும் சாதிய ஒடுக்குமுறை ஆகிய இரு பண்புக்கூறுகளைக் கொண்டது. இதில் சாதி ஒடுக்குமுறை நிலப்பிரபுத்துவ ஒடுக்குமுறையுடன் பிரிக்க முடியாதபடி பிணைந்திருக்கிறது. ஆனால் தேசிய ஒடுக்குமுறை அம்சம் அவ்வாறல்ல. எனவே இந்தியாவில்கூட அரைநிலப்பிரபுத்துவம் என்பது பார்ப்பனியத்தின் முழுப் பரிமாணத்தையும் வெளிப்படுத்துவதில்லை. அதற்கு மாறாக தரகு-பார்ப்பனிய ஏகாதிபத்தியம் என்பதில் உள்ள பார்ப்பனியம் என்பது சாதியத்துடன் பிரிக்கமுடியாதபடி பிணைந்துள்ளதால் அரைநிலப்பிரபுத்துவத்தையும் மேலும் தேசிய ஒடுக்குமுறையையும் குறிக்கிறது. எனவே இந்தியாவை சரியாகப் புரிந்துகொள்ள தரகு-பார்ப்பனிய ஏகாதிபத்தியம் என்ற வரையறுப்பே மிகச் சரியானதாகும். பார்ப்பனியம் என்று குறிப்பதால் நாம் நிலப்பிரபுத்துவ எதிர்ப்பைக் கைவிட்டு விட்டதாக பு.ஜ குழு குற்றம் சாட்டுகிறது. ஆனால் அவர்களுடைய குற்றச்சாட்டில் பார்ப்பனியத்திலிருந்து நிலப்பிரபுத்துவத்தைப் பிரித்து தொடர்பற்றதாக்கும்விதண்டா வாதம் மட்டுமே எஞ்சியிருக்கிறது. இந்த விதண்டாவாதத்தின் காரணமாக தமிழக விடுலைப் புரட்சியின் வெற்றி ஏகாதிபத்தியம், தரகு-பார்ப்பனிய ஏகாதிபத்தியம், நிலப்பிரபுத்துவம் ஆகியவற்றுக்கெதிரான போராட்டத்தில் அடையப்படவேண்டும் என நமது கட்சி ஆவணங்கள் பல இடங்களில் குறிப்பிட்டிருந்தும் அவர்களுடைய கண்களில் படவில்லை. மேலும் இந்த விதண்டாவாதத்தின் காரணமாகவே அவர்கள் கூற்றுப்படியே நிலப்பிரபுத்துவம் பார்ப்பனியத்தன்மையை உள்ளடக்கியதாக இருந்தும், நாம் பார்ப்பனியம் என்றவுடன அதிலிருந்து நிலப்பிரபுத்துவம் எப்படி விடுபடும் என்பதையும் பு.ஜ. குழுவால் சிந்திக்க முடியவில்லை.

● பார்ப்பனிய எதிர்ப்பில் கருவறை நுழைவுப் போராட்டத்தின் இடம் என்ன?

திருவரங்கம் போன்ற கோயில்களின் கருவறைகள் பார்ப்பனியத்தின் கருவறைகள் ஆகும். பார்ப்பனியத்தின் சாதிஒடுக்குமுறை, தேசியஒடுக்குமுறைஆகிய இரு ஒடுக்குமுறைகளும்ஒருங்கே குடியிருக்கும் கருவறைகளாகும். எனவே கருவறை நுழைவுப் போராட்டம்என்பது பார்ப்பனியத்துக்கு எதிரான ஒரு முழுமையான போராட்ட வடிவம் என்பதில் அய்யம் இல்லை. ஆனால் இத்தகைய போராட்டங்கள் தேசிய விடுதலைப் புரட்சியுடன் இணைக்கப்படும் போதுதான் பார்ப்பனிய எதிர்ப்பில் முழுமையான வெற்றியை ஈட்ட முடியும்.

சமீபத்தில் கருவறை நுழைவுப் போராட்டம் நடத்திய பு. ஜ. குழுவினர் தேசிய விடுதலைப் புரட்சித் திட்டம் கொண்டவர்கள் அல்லர்; மாறாக இந்தியப் புரட்சித்திட்டம் கொண்டவர்கள். கடந்த இரண்டாண்டுகளாகப் பார்ப்பனிய எதிர்ப்பையே படிப்படியாக தமது பிரதான அரசியல் பணியாக மேற்கொண்டு செயல்பட்டு வருகிறார்கள். அதன் தொடர்ச்சியாகவே சமீபத்தில் கருவறை நுழைவுப் போராட்டம் நடத்தியிருக்கிறார்கள். இவர்களுடைய கட்சி அரசியல் வாழ்வில் பிரதானப்பணியாகிவிட்ட பார்ப்பனிய எதிர்ப்பு பற்றி இ. பொ. க. (மா-லெ) கட்சித்திட்டத்தில் ஒரு வார்த்தை கூட இல்லை. இவர்களுடைய நடைமுறைக்கும் கட்சித் திட்டத்திற்கும் உள்ள முரண்பாட்டை கோயியாப்டரங்கில் தீர்க்க முனைந்-

www.padippakam.com



திருப்பார்களானால் இந்தியாவில் பார்ப்பனியத்துக்கும்—சாதி ஒடுக்கு முறை, தேசிய ஒடுக்குமுறை ற—வர்க்கப் போராட்டத்துக்கும் உள்ள தொடர்பைச் சரியாகப் புரிந்துகொண்டிருப்பார்கள். மார்க்சிய-லெனினியத்தையும் சரியாகப் புரிந்து கொள்வதை நோக்கி முன்னேறி இருப்பார்கள். அப்போது இ பொ.க. (மா-லெ) கட்சித் திட்டத்தின் குறைபாடுகளை உணர்ந்து களையும் முயற்சியில் தமிழக விடுதலைப்புரட்சி என்ற சரியான முடிவையும் அவர்கள் வந்தடைந்திருக்க முடியும்.

ஆனால் இ. பொ. க. (மா-லெ) கட்சித் திட்டத்தை எந்த நிலையிலும் பரிசீலனைக்கு உட்படுத்த அவர்கள் விரும்பவில்லை. அவ்வாறு பரிசீலனைக்குட்படுத்துவது மார்க்சிய-லெனினியத்தை விட்டு விலகி ஓடுவதாகும் என்று அவர்கள் உறுதியாக நம்புகிறார்கள். இதன் காரணமாக அவர்களுடைய பார்ப்பனிய எதிர்ப்பு நடைமுறைக்கும் கட்சித் திட்டத்திற்கும் இடையிலான முரண்பாட்டைக் கோட்பாட்டரங்கில் தீர்க்கும் முயற்சியை மேற்கொள்வதற்குப் பதில் சந்தர்ப்பவாத விளக்கங்கள் மூலம் மூடி மறைக்கும் முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறார்கள்.

கட்சியின் அரசியல் வாழ்க்கையையே தீர்மானித்துக் கொண்டிருக்கும் பார்ப்பனிய எதிர்ப்பு பற்றிக் கட்சித் திட்டத்தில் ஒரு வார்த்தைகூட இல்லையே என்றால் அரை நிலப்பிரபுத்துவம் என்பதற்குள்ளாகவே இந்துப் பார்ப்பனியம் முழுமையாக உள்ளடங்கும் என்கிறார்கள் அப்படியானால் பார்ப்பனியத்துக்கெதிரான போராட்டத்தை ஏன் தனிச்சிறப்பாக எடுத்து தீவிர முனைப்புக் காட்டிச் செய்கிறீர்கள் எனக் கேட்டால் அது மதமாகவும், சாதியாகவும் இருக்கிறது என கிறார்கள். மதமாகவும், சாதியாகவும் இரண்டாயிரமாண்டு காலமாக இருந்து வரும் பார்ப்பனியத்துக்கு எதிராக கடந்த இரண்டு ஆண்டு காலமாகத்தானே தீவிரமான எதிர்ப்புக் காட்டி வருகிறீர்கள் எனக் கேட்டால் இப்போதுதான் கட்சி அந்த அளவுக்குப் பலம் அடைந்திருக்கிறது என்கிறார்கள். ஆனால் உண்மைஎன்ன? கடந்த இரண்டாண்டுகளாக மாதம் இருமுறை வர வேண்டிய பு. ஜ. இதழ் ஏறக்குறைய மாதம் ஒன்றாக வருகிறது. மூன்றாண்டுகளுக்கு முன் பரபரப்பாக வட்டார மாநாடுகள் மூலம் விளம்பரப்படுத்தப்பட்ட வி. வி. முன்னணி அடுத்து என்ன ஆனது என்றே தெரியவில்லை. அய்க்கியப்பட்ட கட்சியைக் கட்டுவது என்று பதினெட்டு ஆண்டுகளுக்கு முன் அறிவித்ததில் எந்த முன்னேற்றமும் இல்லை. இத்தனை ஆண்டுகளாக அனைத்திந்திய கட்சி, புரட்சி பற்றிப் பேசி வருகிறது எனினும் அது இன்னும தமிழக எல்லையைத் தாண்டவில்லை. தன்னுடன் ம.யு.குழு, கட்சி அய்க்கியம், மாவோயிச கம்யூனிச மையம் ஆகிய அமைப்புகளை மட்டுமே புரட்சிகர மா-லெ குழுக்கள் என அறிவித்து ஆண்டுகள் பல ஆகியும் அய்க்கியப்பட்ட கட்சி வேண்டாம் அவர்களுக்குள் முறையான கூட்டு நடவடிக்கை என்ற அளவுக்குகூட முன்னேறவில்லை. இவை எல்லாம் அமைப்பில், இயக்கத்தில் ஏற்பட்டிருக்கும் தேக்கமா? வளர்ச்சியா?

அமைப்பில் இத்தகைய தேக்கம், நெருக்கடி; கட்சித் திட்டத்திற்கும் நடைமுறைக்கும் முரண்பாடு; இவற்றால் கட்சி அணிகளிடம் சோர்வு, விரக்தி; எதிர்கொண்டிருக்கும் பிரச்சினைகளை நேர்மையாகவும், தைரியமாகவும பரிசீலிப்பதற்கான திறமின்மை; இதுதான் நிலைமை. பு. ஜ. குழு பரபரப்புடன் நடத்தியகருவறை நுழைவுப் போராட்டம் இவற்றின் விளைவேயன்றி பார்ப்பனியத்தை முற்றாக வீழ்த்தும் யுத்த தந்திரத் திட்டத்தின ஒரு பகுதியல்ல. ○

**சமரன், முன்னோடி, புதிய ஜனநாயகம் குழுக்களின் கருத்துகளுக்கு ஆதாரம்:**

1. **தேசிய இனங்களின் விடுதலைப் போராட்டமும், விவசாயப் புரட்சியும் (சமரன், செப் 1982)**
2. **தமிழ் ஈழ விடுதலைப் போரை ஆதரிப்போம்! இந்திய அரசின் இராணுவத் தலையீட்டை எதிர்ப்போம் (சமரன மார்ச் 1984)**

படிப்பகம்

www.padippakam.com



3. ஒன்றுபட்ட நடவடிக்கைக்குத் தடை (சமரன், ஜூலை 1992)
4. இந்தியாவில் தேசிய இனப்பிரச்சினை குறித்த நிலைப்பாடு (முன்னோடி வெளியீடு எண் 1, ஜனவரி 1988)
5. வர்க்கப் போரில் இறங்கியுள்ள சமரன் மார்க்சிய — லெனினியத்தை ஏந்திவர வேண்டும் (புரட்சிப்புயல், ஏப்ரல்) 1985
6. "உலகத் தொழிலாளர்களே பிளவுபடுங்கள்" (தனது கட்சிக்கு உள்ளும், வெளியிலும் தனது நம்பிக்கைக்குரியவர்களுக்கு மட்டும் 4, ஏப். 1993 தேதியிட்டு பு. ஜ. குழு சுற்றுக்கு விட்டிருக்கும் கட்சி அறிக்கை)

# கொடுஞ்சிறையில் தமிழறிஞர், கொதித்தெழுங்கள் தமிழர்களே!

## தமிழறிஞர் பெருஞ்சித்திரனாரை விடுதலை செய்யக்கோரி தமிழகம் தழுவிய இயக்கம்

கொடுநெறி செயலலிதா அரசால் "தடா" சட்டத்தில் கைது செய்யப்பட்டு சிறையிலடைக்கப்பட்டிருந்த தமிழறிஞர் பெருஞ்சித்திரனார் அவர்களைவிடுவிக்ககோரி மக்கள் இயக்கங்களைக் கட்டமைக்குமாறு தமிழ்நாடு மார்க்சிய லெனினியக் கட்சியின் மைய அமைப்புக்குழு 28, மீனம், 2024 (10, ஏப்ரல் 93)ல் அறைகூவல் ஒன்றை விடுத்தது. அய்ம்பதாயிரம் துண்டறிக்கைகளையும், பத்தாயிரம் சுவரொட்டிகளையும் மை.அ.கு. வெளியிட்டு இயக்கத்தைத் துவக்கி வைத்தது. மை.அ.கு.வின் அறைகூவலையடுத்து புரட்சிகர இளைஞர் முன்னணி (பு.இ.மு.) மாநாடு, பேரணி, அரங்கக்கூட்டம், பொதுக்கூட்டம் என்ற முறையில் தமிழகம் (பெங்களூர், புதுவை உட்பட) தழுவிய அளவில் இயக்கத்தைக் கட்டமைத்தது.

தமிழகத்தின் பத்தொன்பது மாவட்டங்களை உள்ளடக்கி ஏழுமையங்களில்மாநாடுகளும் அய்ந்து மையங்களில் அரங்கக் கூட்டமும் பெங்களூர், புதுவையில் முறையே மாநாடும் அரங்கக்கூட்டமும் நடத்த புரட்சிகர இளைஞர் முன்னணியின் பகுதி, மாவட்ட அமைப்புகளால் திட்டமிட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

சென்னை (19 மேழம், 2 மே), தருமபுரி (6விடை, 19மே), திருப்பத்தூர் (வ.ஆ.அ. 11 விடை, 24 மே), பெங்களூர் (3 விடை, 16 மே), ஈரோடு (27 மேழம், 10மே), மதுரை (16 விடை, 29 மே), நெல்லை (6 விடை 19 மே), ஆகிய ஏழு நகரங்களில் மாநாடுகளுக்கும், வேலூர் (3விடை, 16மே), திருவண்ணாமலை (2விடை, 15 மே), புதுவை (18 விடை, 31 மே), திருச்சி (7 விடை 20மே), திண்டுக்கல் (20 விடை, 2சூன்), காரைக்குடி (1விடை 14மே), கோவை (24 விடை, 6 சூன்) ஆகிய ஏழு நகரங்களில் அரங்கக் கூட்டங்களுக்கும் திட்டமிடப்பட்டன. இதில் நான்கு மாநாடுகளும் இரண்டு அரங்கக்கூட்டங்களும் ஈரோட்டையில் பேரணி, பொதுக்கூட்டமும் பிரச்சார, தயாரிப்புப்பணிகள் அனைத்தும் (முடிந்த) இறுதி நேரத்தில் காவல்துறையினரால் தடை செய்யப்பட்டன.

இவ்வியக்கத்தில் எழுச்சியுரை நிகழ்த்துவோராக அய்ம்பதுக்கும் மேற்பட்ட புரட்சிகர, சனநாயக அமைப்புகளும் அமைப்புசாரா அறிவாளிகளும், அறிஞர்களும் மொத்தம் இருநூறுக்கும் மேற்பட்டோர் பங்கேற்னர். பு.இ.மு. சார்பில் வெளியிடப்பட்ட ஒரு இலட்சம் துண்டறிக்கைகள்,

படிப்பகம்

www.padippakam.com



இருபதாயிரம் சுவரொட்டிகள் மூலமாகவும் பரவலான சுவரெழுத்துகள் மூலமும் இலட்சக்கணக்கான மக்களிடையே தமிழறிஞர் விடுதலை முழக்கம் எடுத்துச் செல்லப்பட்டது. கட்சி மற்றும் பு.இ.மு. சார்பில் வெளியிடப்பட்ட துண்டறிக்கைகளை ஊழியர்கள் வீடுவீடாகச் சென்று வினியோகித்து இயக்கத்திற்கான நன்கொடை திரட்டினர்.

தமிழறிஞர் பெருஞ்சித்திரனாரை விடுதலை செய் என்ற முழக்கத்துடன் ஈரோட்டில் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்டோர் பங்கேற்ற மாநாடு எழுச்சிகரமாக நடைபெற்றது. பெருந்திரளான கிராமப்புறக் கூலி விவசாயிகள் பங்கெடுத்துக் கொண்டது குறிப்பிடத்தக்கது. பெங்களூர், மதுரை மாநாடுகளும் திருவண்ணாமலை புதுவை, திருச்சி, திண்டுக்கல், கோவை அரங்கக் கூட்டங்களும் எழுச்சியுடன் நடைபெற்றன. சென்னையில் மாநாடு தடை செய்யப்பட்டாலும் பு. இ. மு. தோழர் ஒருவரின் புரட்சிகர குடும்பத் தொடக்கவிழா நிகழ்ச்சியுடன் (6 ஆடவை 20சூன்) பெருஞ்சித்திரனார் விடுதலை கோரும் கூட்டமும் நடைபெற்றது. அனைத்து இடங்களிலும் பெருமளவிலான புரட்சிகர, சனநாயக அமைப்புகளும், அறிஞர்களும் பங்கேற்றனர். பல இடங்களில் கவியரங்குகளும், எழுச்சிமிகு கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. மாற்று புரட்சிகர, சனநாயக சக்திகள் கவியரங்கிலும் பங்கேற்றனர். எல்லா இடங்களிலும் தமிழ், தமிழ்நாடு, புரட்சியின் மீது பற்றுக் கொண்ட அனைவரும் மிகுந்த ஆர்வத்துடன் கலந்து கொண்டனர். செங்கை மாவட்டம் பொன்னேரி அரசு கலைக்கல்லூரியில் பு. இ. மு. மாணவத் தோழர்கள் தமிழறிஞரை விடுவிக்கக்கோரி நானூற்றுக்கும் மேற்பட்டோரிடம் கையொப்பம் பெற்று 'ஜெ' அரசுக்கு அனுப்பி வைத்தனர்.

பலமுறை முயன்றும் சென்னை, வேலூர், திருப்பத்தூர், தருமபுரி, காரைக்குடி, நெல்லை நிகழ்ச்சிகளுக்கு காவல்துறையினர் அனுமதி மறுத்துவிட்டனர். சென்னையில் பிரிவினைவாதம், புலி ஆதரவு என்ற காரணங்களைக் கூறியும், தருமபுரியில் தனிநாடு கோருவதற்கான இயக்கம் எனக் காரணம் கூறியும் நெல்லை, திருப்பத்தூரில் சட்ட ஒழுங்குச் சிக்கல் என்ற காரணம் காட்டியும் காரைக்குடியில் பு.இ.மு.வுக்கு அனுமதி தரக்கூடாது என மேலிடத்து ஆணை எனக் கூறியும் நிகழ்ச்சிகளைத் தடை செய்தனர் காவல்துறையினர். வேலூரில் எவ்விதக் காரணத்தையும் முன்கூட்டியே தெரிவிக்காமல் நிகழ்ச்சியின் போது காவலர்களைக் குவித்து இத்தகைய 'தேச விரோத' இயக்கங்களுக்கு அனுமதியில்லை என்று கூறி தடை செய்ததோடு நிகழ்ச்சிக்கு வந்திருந்தவர்களையும் பகுதிமக்களையும் பீதியூட்டும் கீழ்த்தரமான முயற்சியிலும் ஈடுபட்டனர். ஈரோட்டில் மாநாட்டிற்கும் பொதுக் கூட்டத்திற்கும் அனுமதி வழங்கி பேரணிக்குத் தடைவிதித்திருந்த காவல்துறையினர் மாநாடு முடிந்து பொதுக் கூட்டம் நடைபெறும் நேரத்தில் அதற்கும் தடைவிதித்தனர். கிராமப்புறங்களில் இருந்து வந்திருந்த பெரும்பாலான உழைக்கும் மக்கள் இத்தடையைக் கண்டித்துத் தன்னியல்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தடையை மீறியதாக ஆறு தோழர்கள் கைது செய்யப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டனர். புதுவையில் காவல்துறையின் மிரட்டல் காரணமாக அரங்க உரிமையாளர் அரங்கைப் பூட்டிவிட்டுத் தலைமறைவாகி விட்டார். பங்கேற்க வந்திருந்தோரின் விருப்பத்தின் பேரில் மெழுகுவர்த்தி ஒளியில் பூட்டிய அரங்கின் வாயிலேயே நூற்றி அய்ம்பதுக்கும் மேற்பட்டோர் பங்கேற்ற கூட்டம் எழுச்சியுடன் நடைபெற்றது. காரைக்குடியில் இரண்டு நாட்களுக்கு முன்பே காவல்துறையினர் அரங்கைப் பூட்டிச் சென்றுவிட்டனர். சென்னை, வேலூர், காரைக்குடி நிகழ்ச்சிகளில் அரங்குக்கு வந்த பெருமளவிலான சக்திகள் தடையின் காரணமாக திரும்பிச் சென்றனர். சென்னையில் அய்நூறுக்கும் மேற்பட்டோர் வந்திருந்து திரும்பிச் சென்றனர். காரைக்குடியில் நிகழ்ச்சி இரத்து செய்யப்பட்ட பின்னரும் பொறுப்பு தோழரின் வீட்டைச் சுற்றி 'இரகசியக்கூட்டம்' நடத்தி விடுவோம் என்ற அச்சத்தில் ஏராளமான

படிப்பகம்

www.padippakam.com



காவல்துறையினர் அலைபாய்ந்து கொண்டு இருந்தனர். தோழர்களின் எச்சரிக்கைக்குப் பின் அவ்விடத்தை விட்டுச் சென்றனர்.

இவ்வாறு காவல்துறையினரால் பல இடங்களில் தடைவிதிக்கப்பட்டிருந்த போதிலும் மக்களிடையேயான பிரச்சாரத்தை இத் தடைகள் முடமாக்கிவிடவில்லை. கட்சி மற்றும் பு. இ. மு. சார்பில் ஒரு இலட்சத்து அம்பதாயிரம் துண்டறிக்கைகளும், முப்பதாயிரம் சுவரொட்டிகளும், பரவலான சுவரெழுத்துக்களும் இலட்சக்கணக்கான மக்களிடத்தில் தமிழறிஞரை விடுவிக்க வேண்டும் என்ற முழக்கத்தைக் கொண்டுசேர்த்துள்ளன. தடைபெற்ற இடங்களில் பங்கேற்றவர்களின் எழுச்சியும், கோபமும் தமிழ் தேசிய இனத்தின் மீதான ஒடுக்கு முறையை உடைத்தெரியும் கனல்களாக வெளிப் பட்டன.

இந்நிகழ்ச்சியில் உலகத் தமிழின முன்னேற்றக் கழகம், தமிழர் தேசிய இயக்கம், தமிழக ஒடுக்கப்பட்டோர் விடுதலைஇயக்கம், தமிழ்தேசபொதுவுடைமைக் கட்சி, தமிழ்நாடு மாணவர் பேரவை, விடுதலைக் குயில்கள், தீலிபன் மன்றம், கர்நாடகத் தமிழர் பேரவை, அறிவியக்கப் பேரவை, தலைநகர் தமிழ்ச் சங்கம், மக்கள் குடியுரிமைச் சங்கம், முற்போக்கு இளைஞரணி, இ பொ. க. (மா-லெ) செங்கொடி, நேபாள் கம்யூனிஸ்ட் கட்சி, பகுத்தறிவாளர் கழகம், மார்க்சிய பெரியாரிய பொதுவுடைமைக்கட்சி, மக்கள் உரிமைக் கழகம், மக்கள் ~~கலை இலக்கியக்~~ கழகம், புரட்சிகர விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர் முன்னணி, திராவிடர் கழகம் (இரா), பாட்டாளி மக்கள் கட்சி, விடுதலைச் சிறுத்தைகள், தலித் பண்பாட்டுப் பேரவை, தமிழ்த் தேசியப் மனித உரிமைக் கழகம், மற்றும் தி.க. தி.மு க, ஜனதா தளம், இந்தியக் குடியரசுக் கட்சி ஆகியவற்றில் உள்ள பல சனநாயக உணர்வாளர்களும் உள்ளிட்ட பல்வேறு புரட்சிகர அமைப்புகளும், தமிழ்த் தேசிய பிரச்சினையிலும், தமிழக தாழ்த்தப்பட்டோர் விடுதலையிலும் அக்கறையுள்ள அமைப்புகளும், சமூக அக்கறை கொண்ட பல உள்ளூர் அமைப்புகளும் பங்கேற்றன. அரசியல் ஆய்வாளர்கள், தமிழறிஞர்கள், பத்திரிக்கையாளர்கள், பேராசிரியர்கள், தொழிற்சங்கப் பிரதிநிதிகள் என சமுதாய வாழ்வின் பல்துறைகளையும் சார்ந்த இருநூறுக்கும் மேற்பட்டோர், பு. இ. மு. தோழர்களுடன் பங்கெடுத்துக் கொண்டு உரை நிகழ்த்தினர்.

இயக்கத்தில் பங்குகொண்ட அனைவரும் கொடுநெறி செயலலிதா அரசைச் சாடியும் தமிழறிஞர் பெருஞ்சித்திரனார் அவர்களை உடனே விடுதலை செய்திடல் வேண்டுமெனவும் முழக்கமிட்டனர். அதோடு மட்டுமல்லாமல் இப்பிரச்சினைக்குக் காரணமாயிருக்கின்ற தேசிய ஒடுக்கு முறையிலிருந்து விடுதலை பெறுவதற்கான வழிமுறைகள், சாதி ஒடுக்குமுறையைக் குறிப்பாகத் தாழ்த்தப்பட்டோர் மீதான ஒடுக்குமுறையை அகற்றுவதற்கான வழிமுறைகள், தரகு முதலாளித்துவ, நிலப்பிரபுத்துவ, ஏகாதிபத்திய சுரண்டல் ஒடுக்கு முறைகளிலிருந்து விடுதலை பெறுவதற்கான வழிமுறைகள், மத ஒடுக்கு முறை, பெண்ணடிமைத்தனம் ஆகியவற்றை ஒழிப்பது என தமிழ்ச் சமுதாயம் எதிர் கொண்டுள்ள பல்வேறு பிரச்சினைகள் குறித்த கருத்துக்களும் இவ்வியக்கத்தில் பலராலும் விவாதிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. பல்வேறு கோணங்களில் தமிழக விடுதலைப் புரட்சிக்கும் இப்பிரச்சினைகளுக்கும் உள்ள தொடர்பு குறித்து பு. இ. மு. பேச்சாளர்கள் உரை நிகழ்த்தினர்.

அரசின் மிரட்டல்கள், சதிவேலைகள், தடைகளை மீறி இவ்வியக்கம் தமிழறிஞர் பெருஞ்சித்திரனார் அவர்களை விடுதலை செய்ய வேண்டும் என்ற முழக்கத்தையும், இந்திய தரகு-பார்ப்பனிய ஏகாதிபத்திய வாதிகள் மற்றும் அவர்களது தமிழக அடிவருடிகளின் தேசிய ஒடுக்கு முறை எதிர்ப்பையும் இலட்சக்கணக்கான மககளிடம் எடுத்துச் செல்வதில், வெற்றி பெற்றது என்பதில் அய்யமில்லை. ○

படிப்பகம்

www.padippakam.com

மேனா மிஞக்கி உன்னை விரட்டிச்
~~சிறைப்பட்ட எங்கள் தமிழைமீட்கச்~~
~~சீறும் புலியாய்ச் சிலிர்த்து~~ அடலேறாய்ப்
சிறைப்பட்ட எங்கள் தமிழை மீட்கச்
சீறும் புலியாய்ச் சிலிர்த்து அடலேறாய்ப்
புறப்பட்டதுகாண் 'புரட்சிகர இளைஞர் முன்னணி'
பொங்கு கடலாய்ப் புயலாய் இன்று!

காவல்துறையை ஏவி விட்டுக்
கடுஞ்சிறை யகத்தெமைக் கொடுமை செய்கிறாய்!
சாவதற்கும்யாம் அஞ்சவில்லை!
தமிழ்நாட்டை மீட்காமல் துஞ்சோம் என்று
சிறைப்பட்ட எங்கள் தமிழை மீட்கச்
சீறும் புலியாய்ச் சிலிர்த்து அடலேறாய்ப்
புறப்பட்டதுகாண் 'புரட்சிகர இளைஞர் முன்னணி'
பொங்கு கடலாய்ப் புயலாய் இன்று!

மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை எம்மை
மாட்ட நினைக்கும் சிறைச்சாலை என்று
வீங்குதோள் காளையர் வீறுகொண்டெழுந்தார்
விடுவிப் போம்தமிழ் நாட்டை இன்றே!
சிறைப்பட்ட எங்கள் தமிழை மீட்கச்
சீறும் புலியாய்ச் சிலிர்த்து அடலேறாய்ப்
புறப்பட்டதுகாண் 'புரட்சிகர இளைஞர் முன்னணி'
பொங்கு கடலாய்ப் புயலாய் இன்று!

பொதுமையர் தலைமையில் பொங்கி யெழுந்து
புதுவரலாறு படைத்து வெற்றிச்
சுழிபோட் டதுகாண் சூளு ரைத்துத்
தோளுரங் காட்டிச் சுவடுபதித்துச்
சிறைப்பட்ட எங்கள் தமிழை மீட்கச்
சீறும் புலியாய்ச் சிலிர்த்து அடலேறாய்ப்
புறப்பட்டதுகாண் 'புரட்சிகர இளைஞர் முன்னணி'
பொங்கு கடலாய்ப் புயலாய் இன்று! ○

(தமிழறிஞர் பெருஞ்சித்திரனாரை விடுதலை செய்யக் கோரி புரட்சிகர இளைஞர் முன்னணி ஈரோடையில் நடத்திய மாநாட்டில் பாவலர் தமிழ்க்குமரன் முழங்கிய பாடல்)

# விடாது தமிழ்ப்படை

தமிழ்க்குடி பிறந்த இளைஞர் கூட்டம்
பொறுமை துறந்து பொங்கி எழுந்து
போர்முனை நோக்கி புறப்படும் நாளிது.

தாய்மொழிக் கின்னல் தமிழ்நாட்டிற் கின்னல்
இனிஒரு நொடியும் தாங்கோம் என்று
மானம் காக்க சீறும் நாளிது.

மங்கா நெருப்பு எங்கள் பாவலர் ஏறு
இயற்றும் பாவால் தீய்ந்திடல் அஞ்சி
தடாவில் போட்டனர் விடாது தமிழ்ப்படை.

இளந்தமிழர் கூட்டம் கூடுது குவியுது
போர்க்களம் காணுது விடுதலை பாடுது
பார்க் கெலாம் தெரியும் பாவலர் விடுதலை
தமிழ்நாட்டின் விடுதலை நிச்சயம் நிச்சயம் நிச்சயம்.

[தமிழறிஞர் பெருஞ்சித்திரனார் அவர்களை விடுதலை செய்யக் கோரி — "கொடுஞ்சிறையில் தமிழறிஞர், கொதித்தெழுங்கள் தமிழர்களே" என அறைகூவல் விடுத்து நாம் தமிழகம் தழுவிய அளவில் நடத்தும் இயக்கம் பற்றிய செய்தியைத் துண்டறிக்கைகள் வாயிலாக அறிந்து சிறையில் இருக்கும் 85 வயது பெரியவர் "ஈழத்துப் புலவர்" எழுதி அனுப்பியது.]

படிப்பகம்

www.padippakam.com



தமிழறிஞரை விடுவிக்ககோரி
தமிழகம் தழுவிய இயக்கம்!




# தடா நாயகியின் கொடுஞ்சிறையில் தமிழறிஞர் பெருஞ்சித்திரனார்!

# கொதித்தெழுங்கள் தமிழர்களே உடைத்தெறிவோம் அடக்குமுறை!

தமிழ்நாடு மார்க்சீய-லெனினியக் கட்சி.

சுவரொட்டி, மாநாடு, பேரணி,
கருத்தரங்கம் மற்றும் பொதுக்கூட்டம்

ஆசிரியர் : கார்முகில், பொதுச்செயலர்
தமிழ்நாடு மார்க்சிய-லெனினியக் கட்சி

படிப்பகம்